மன்றம்
ஆண்டு மலர் 1962
விலை ரூ 1
க. மாதவன்

புதுமலர்

'மன்றத்'தின் பதினேருவது மலர் பூத்திருக்கின்றது.
தொழிலாளரின் உரிமை முழக்க நாளாகிய மே முதல்
நாளில் ஆரம்பித்த 'மன்றம்'. திராவிடத்தின் விடுதலைக்காக
வும், ஏழை, எளிய, பாட்டாளி, தொழிலாளர் உரிமைகளுக்
காகவும் அரசியல், பொருளாதார சமூக முன்னேற்றத்திற்
காகவும் சீரிய பணிகளை இடைவிடாது செய்து வருகின்றது.
அதிலே பெருமையும் கொள்கிறது.

மன்றத்தின் ஆக்கப் பணிக்கு ஆதரவு நல்கும் வகை
யில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டுள்ள சந்தாதாரர்களுக்கும்
படிப்பாளர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் எழுத்தாளர்
களுக்கும், ஓவியர்களுக்கும், அலுவலகத்தாருக்கும், அச்சகத் தொழிலாளர்களுக்கும் எமது உளங்கனிந்த நன்றியும்
வாழ்த்துக்களும் இந்த பதினேரும் ஆண்டுத் துவக்க
நாளில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்

நமது பாதை

அறிஞர் : அண்ணா

நாம் தினந்தோறும் மக்களைச் சந்திக்கிறோம்; அவர்களும் நமது கூட்டங்களுக்குத் தவறாமல் வருகிறார்கள். இதன் உண்மைப் பொருள் என்ன?

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கள் மீண்டும் மீண்டும் வந்து கேட்குமாறு மக்களைத் தூண்டுகின்றன; மக்களும் மீண்டும் மீண்டும் வந்து கேட்கிறார்கள்.

“திராவிடநாடு திராவிடருக்கே!” என்ற மழலை மொழியை தினம் தவறாமல் நாடு கேட்டுக் கொண்டே இருக்கின்றது.

நாம் எழுப்பும் இந்தக் குரல் கேட்டு சிலர் வருத்தப்படுகிறார்கள்; சிலர் கோபப்படுகிறார்கள் ஆனால் நான் ஆராய்ந்து பார்த்தவரையில், காங் [illegible] உள்ளவர்களும் சரி, அரசியல் பற்றற்ற [illegible] சரி, தென்னாட்டின்மீது வடநாடு ஆதிக் [illegible] துகின்றது என்பதை மறுப்பவர்கள் [illegible] வர்கள் எல்லாம், ‘ஆதிக்கம் இருக்கத் [illegible] கிறது’ என்று கூறிவிட்டு, ‘ஆனால்...’ [illegible] ழுக்கிறார்கள்.

[illegible] த ‘ஆனால்’, படிப்படியாக ‘அப்படியா [illegible] று மாறி, ‘அதுசரி’ என்று வளர்ந்து [illegible] ன்ன செய்யலாம்’ என்று மேலும் [illegible], ‘உன்னால் முடியுமா?’ என்று பேசி [illegible] ருவருமே சேரலாம்’ என்று உருவாகி [illegible] ம் திராவிடநாடு’ என்ற நிலை பிறந்தாக வேண்டும். இந்த நிலை பிறக்கும் என்ற நம்பிக்கை தான். நாம் மாற்றாரும் மற்றவரும் நம்மீது வீசும் பழிச்சொற்களை எல்லாம் தாங்கிக்கொள்வதற்குக் காரணம்.

இன்று நம்மிடம் வெறுப்புக் காட்டுகிறவர்கள் நம்மிடம் வரவேண்டியவர்கள்; அவர்கள் நம்மோடு வருவார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

“ஆனால்” என்று இழுக்கிறவர்கள் எல்லாம் இன்றில்லாவிட்டால் நாளை—நாளையில்லாவிட்டால் மற்றொருநாள் வருவார்கள் என்று நம்புகிறோம்.

நமது நம்பிக்கைக்குக் காரணம் நாம் கூறி வரும் உண்மை டலரது நெஞ்சத்தை தடவ ஆரம்பித்திருக்கிறது என்பதுதான்.

எப்படியோ நாம் சாமான்யவர்களாக இருப்பினும் நாம் எடுத்துக்கொண்டிருக்கும் காரியம் ஒரு நாட்டை மீட்கின்ற மிகப்பெரிய காரியமாகும்.

இந்தப் பெரிய காரியம், நமக்கும் மற்ற கட்சிகளுக்கும் உள்ள தொடர்பு பற்றிய பிரச்சினை அல்ல, மாறாக நமக்கும் நாட்டு மக்களுக்கும் இருக்கிற தொடர்பு பற்றியது.

எனவே கழகத்தோழர்கள் இந்த உண்மையை யறிந்து பணியாற்றிட வேண்டும்.

மன்றம்

கழகத் தோழர்களுக்கு நான்கு முக்கியக் குணங்கள் இருக்கவேண்டும். ஒன்று—எதையும் சகித்துக்கொள்ளும் பொறுமைக் குணம்; மற்றது எதற்கும் கோபங் கொள்ளாமல் இருப்பது இன்னொன்று—எதற்காகவும் சலித்துக் கொள்ளாமலிருப்பது; நான்காவது—எதற்கும் வேதனைப் பட்டுக்கொள்ளாவிருப்பது.

இந்தக் குணங்கள் நமக்கு இருக்கவேண்டும் என்பதற்கு நான் கூறும் காரணம் மாற்றுக் கட்சியினர் நம்மை வசப்பாடுவதில் ஈடுபட்டால் நாம் அதனால் ஆத்திரமடையாமல், நமது கழகம் வளரவேண்டும் என்று நினைத்து உழைத்துக் கழகத்தின் வெற்றிக்கு பாடுபடவேண்டும் என்பதற்காகத்தான்.

மாற்றுக் கட்சியினர் நம்மைத் திட்டுவதாலே நமது வளர்ச்சி குன்றிவிடாது.

பிறரைத் தாக்குவதன் மூலம் ஒரு இயக்கம் வளர முடியாது. பிறர் தாக்குவதைத் தாங்கிக் கொள்ளும் வலிவு பெற்றால்தான் இயக்கம் வளரும். தாக்குவோரைத் திருப்பித் தாக்குவது வலிவுக்கு அடையாளம் அல்ல. எனவே நமது நண்பர்கள் இந்த முறையிலே தங்கள் மனத்தை வளர்த்துக்கொள்ளக்கூடாது.

நாம் எடுத்த காரியம் வெற்றிபெற வேண்டும். அதை விடுத்து வேறு காரியத்தில் இறங்கக் கூடாது.

நம்முடைய நோக்கமெல்லாம், நமக்குஎதிரே பத்துபேர் இருக்கிறார்கள் என்றால், அடுத்த ஆண்டு அவர்களிலிருந்து இரண்டுபேர் நம்பக்கம் வந்து சேருமாறு பணி செய்வதாக இருக்க வேண்டும். அதற்கு அடுத்த ஆண்டு மேலும் நான்குபேரை நம் பக்கம் அழைத்துவரவேண்டும். இந்தக் கணக்குதான் நமக்கு முக்கியம்.

நாடு மீட்கின்ற நற்பணியில் நாம் ஈடுபடும் போது தோல்விகள் பலவற்றை நாம்ஏற்கவேண்டியவர்களாகின்றோம். தோல்வியை கண்டு துவளாத உள்ளம் இருந்தால்தான் கழகம் வளர முடியும். தோல்வி ஏற்பட்டால் துணியை உதறித் தோளில் போட்டுக்கொண்டு வேறு இடத்துக்கு போய்விடுவார்களேயானால் எந்தக் கட்சியும் வளர முடியாது.

ஜஸ்டிஸ் கட்சியிலிருந்த தலைவர்கள் அப்படித்தான் தோல்விகளைக் கண்டு தாங்கிக் கொள்ள முடியாமல் உடைகளை மாற்றிக்கொண்டு காங்கிரசில் சேர்ந்துவிட்டார்கள்.

இன்று நமது கழகத்தில் நல்ல கட்டிளங் காளைகள், கடமையுணர்ச்சியுடன் பணியாற்றக் கூடியவர்கள் இருந்து வருகிறார்கள். வெற்றியால் ஆனந்த வெறியாட்டம் ஆடுபவர்களோ, தோல்வியால் துவள்பவர்களோ நம்மிடம் இல்லை.

நாம் ஏமாற்றம் அடையத்தக்க அளவிற்கு ஒரு துளி அறிகுறியும் இல்லை. நாம் நல்ல வளர்ச்சியடைந்திருப்பதை மாற்றுக் கட்சியினர் மனதார உணர்கிறார்கள். ஆனால் வெளியே சொல்ல வெட்கப்படுகிறார்கள். ஆகவே நாம் ஆற்றவேண்டிய பணியை தொடர்ந்து நடத்த வேண்டும்: நம்முடைய கருத்துக்கள் இன்றைக்கு நிச்சயமாக வெற்றிபெற்றுக் கொண்டிருக்கிறது. முதல் கட்டம்—நாம் கூறி வந்ததை அலட்சியப் படுத்தினார்கள், இரண்டாவது கட்டம்—'வடநாட்டிலே அதிகாரம் இருக்கக்கூடாது; எனவே நாடு பிரியவேண்டும்' என்று நாம் சொன்னோம்; அவர்கள், 'நாடு பிரியக்கூடாது' என்று—நம்முடைய கழகம் வளர்கிறது என்று தெரிந்ததும் சொல்லுகின்றார்கள்.

திராவிட நாடு திராவிடருக்காக்கும் பண... நாம் இன்னும் பல கட்டங்களை கடந்து ... வேண்டியவர்களாக இருக்கிறோம். ...யுணர்ந்து பணியாற்றிட கழகக் காளையர் ...ளம் நம்மிடம் இருக்கும்போது நமது இலட்சி... பாதையை எவராலும் அழித்திட முடியாது.

வியர்வைத்துளிகளே! வாரீர்!

கலைஞர் மு. கருணாநிதி
எம்.எல்.ஏ

வியர்வையிலே குளித்து சேற்றையே ஆடையாகக் கொண்டு வரப்புக்களிலே உலவுகின்ற உழவர் பெருங்குடி மகனும், ஆலையிலே உழல்கின்ற தொழிலாளியும், மரம் அறுப்போன், நெசவு புரிவோன், உடை வெளுப்போன், முடி திருத்துவோன், மண் சுமப்போன், கல் உடைப்போன் எனப்படும் பாட்டாளிப் பெருஞ்சமுதாயமும் நாடி நிற்பது வாழ்க்கை நிம்மதியைத்தான்!

அந்த நிம்மதியைப் பணத்தால் பெற முடியுமா?

வேலை நேரக் குறைப்பால் பெற முடியுமா?

வசதிப் பெருக்கத்தால் பெற முடியுமா?

போனஸ்களால் பெற முடியுமா?

எந்த வகையிலே பாட்டாளியின் வீடுதேடி நிம்மதிவந்தாலும்
...ன் சுதந்திரத் திருநாட்டின்
...ன் என்ற கௌரவத்
... இருந்தால்தான் வருகிற
...க்குக் கீர்த்தி இருக்கும்.
...ர் இருக்கும். இல்லையேல்
...த ஒட்டமில்லாத இருதயத்
...ப்போலத்தான் அந்த நிம்மதி
...ங்கிக் கிடக்கும்.

...யாற உணவு!

...னமாற உடை!

...ருக்க உறையுள்!

அறிவு தரும் கல்வி!

வாழ்விலே நிம்மதி!

இத்தனைக்கும் கிரீடம் வைத்தது போல் அவன் சுதந்திர நாட்டுக் குடிமகன் என்ற பெருமை!

"உலகப் பாட்டாளி மக்களே! ஒன்று சேருங்கள்!" என்று கூறுகிற தொழிலாளி வர்க்கத்தின் ஒவ்வொரு பிரிவும், தன்னை ரஷ்ய நாட்டுக்காரன்—அமெரிக்க நாட்டுக்காரன்—பிரான்சு நாட்டுக்காரன்-பிரிட்டானிய நாட்டுக்காரன்—என்று பூரிப்புடன் அழைத்துக்கொள்வது போலவே "உலகப் பாட்டாளிகளே! ஒன்றுபடுங்கள்!" என்று முழங்குகிற நமது தொழிலாளிகளும் தங்களைத் திராவிட நாட்டுக்காரர் என்று கூறிக்கொள்ளக் கூடிய உரிமையினைப் பெறவேண்டும்.

நாம் பிறந்த மண்ணை விடுவிக்க வேண்டுமென்பதிலே 'அரசியல்' எதுவுமில்லை. இந்த பூமியின் சொந்தக்காரர்களின் விடுதலைக் குரலுக்குத் தவறான பொருள் கொண்டு தத்துவவாதம் புரிகிறவர்களின் பேச்சைத் "தடுமாற்றம்" என ஒதுக்கித் தள்ளிவிட்டு விடுதலை அணிவகுப்பிலே உழைத்து வாழும் சமுதாயம் வீறுகொண்டு இணைய வேண்டும்.

நாட்டின் செல்வம், சுகம், வளம், வாழ்வு, மான உணர்வு அனைத்தையும் சுரண்டிக்கொழுக்கும் டெல்லி ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தின் இரும்புப் பிடியிலேயிருந்து தாயகம் விடுபட—தளைகள் பொடிபட-திராவிடம் எழுப்பும் சுதந்திர முழக்கத்திற்கு வலிவு தரக் கடமைப்பட்டிருப்பவர்கள் தொழிலாளத் தோழர்கள்.

மேதினி புகழ் மே தினப்பெருநாளில் கொடி உயர்த்தி நிற்கின்ற அந்த வியர்வைத்துளிகள், கண்ணீர்த் துளிகளாம் நாம் காணத்துடிக்கும் திராவிடத் திருநாட்டை அமைக்கத் தோள் கொடுக்க வர வேண்டுமென அழைப்பு விடுக்கிறோம்.

அந்த அழைப்பு மடலைத்தான் எழில் மலராக்கி 'மன்றம்' தருகிறது. நமது நாவலர் அவர்களின் மன்றம்; தமிழ்வளர்க்கும் மன்றம், அறிவு அரசோச்சும் மன்றம், ஆற்றல் ஒளிவிடும் மன்றம். ஆக்கம் தருகின்ற மன்றம். விடுதலைக் கனல் மூட்டுகின்ற மன்றம். உரிமைக்கீதம் இசைக்கின்ற மன்றம்.

அந்த மன்றம் தருகின்ற மலரில் என் எழுத்துக்கள் மகரந்தத் துகள்களில் ஒன்றாகட்டும் என எண்ணி இதனைத் தீட்டினேன்.

வாழ்க திராவிடம்!

வளர்க தொழிலாளர் அணி!



இதுதான் மருத்துவம்



"நோய்நாடி நோய் முதல்நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" — திருக்குறள்

உலகோர் ஏற்றும் உயர்ந்த பண்பு,
கலகலப் பான கனிந்த பேச்சு,
பலநூல் ஆய்ந்த பரந்த அறிவு
நகைமுகம், ஒளிவிழி, நரைமுடித் தூய்மை
அனைத்தும் ஒருங்கே அமைந்த பெரியார்
மருத்துவ மனையை மாண்புடன் நடத்தி
மக்கட் பணியே வாழ்வென வாழ்ந்து
வந்தார்; அவரை வாழ்த்தார் இல்லை!

நோயைக் கேட்பார்; நோய்முதல் ஆய்வார்;
ஏற்ற மருந்துடன் இன்சொல் சேர்ப்பார்;
"கைவளம் உடையோர் கையால் அள்ளிக்
கடுகே தரினும் கடுநோய் பறக்கும்"
என்று மக்கள் இன்றும் புகழ்வர்!

தென்னை நிழற்ற புன்னை மணக்க
சிறுசிறு பூச்செடி சிந்தை பறிக்க
ஆற்றங் கரையின் அருகில் அமைந்த
மருத்துவ மனைக்கு வந்தார் ஒருவர்.

கவிஞர்: வாணிதா

மருத்துவர் வந்த மனிதரை அழைத்து
செய்தி என்ன? செப்புவீர் என்றார்.
வந்தவர் சொந்த மகனைக் காட்டிப்
"பைத்தியம்! பைத்தியம்! பைத்தியம் என் மகன்"
இவன்நோய் தீர்ந்தால் என்னுயிர் நிலைக்கும்;
படித்தவன்! பட்டம் பெற்றவன்! அந்தோ!
கோடிக்கிவன் ஒருவனே! குறையைத் தீர்ப்பீர்!"
என்று மருத்துவர் இருகைப் பிடித்தார்.

ஒன்றும் இல்லா இடக்கை காதில்
ஒற்றி ஒற்றிக் குரலை உயர்த்தி
"ஈடக், ஈடக், ஈடக் டக்கென"
பயித்தியம் சிரித்துப் பாட லானான்.
பயித்தியம் பார்ப்பவர் உளங்கவர் அழகன்
பட்டதாரி, பன்மொழிப் புலவன்.
பார்ப்போர் முன்னர் பலமொழி பேசி
"ஈடக்" பாட்டை இயம்பி இயம்பி
எழுந்து சிரிப்பான்! இருவிழி தூக்கி
முறைப்பான்; சிரிப்பான்; முணறி அழுவான்
தாளம் சேர்த்துத் "தைத்தை" என்றே
ஆடுவான்; பாடுவான்; அழுவான்; சிரிப்பான்.

மருத்துவர் வந்த பயித்திய மகனைப்
பரிவுடன் அழைத்தார்; பார்வையால் சிரித்தார்;
பேசிப் பார்த்தார்; பின்புற அறைக்குக்
கூட்டிப் போனார்; மருந்துகள் கொடுத்தார்.
பயித்திய மகனைப் பலநாள் தன்னிடம்
விட்டு வைக்க வேண்டும் என்றே
கூட்டிவந்த தந்தைக்குக் கூறினார்.

"எத்தனை ஆண்டுகள் என்மகன் உம்மிடம்
இருப்பினும் கலங்கேன்; என் மகன் பயித்தியம்
ஒழிந்தால் போதும்; ஒரே ஒரு மகனவன்"
என்று மருத்துவர் இருவிழி நோக்கித்
"தீருமா பயித்தியம்? தீருமா?" என்றே
திரும்பத் திரும்பக் கெஞ்சிக் கேட்டார்.
மருத்துவர் சிரித்தார், மணிஒலிப் பதுபோல்
"நம்புவோம்! வாழ்வோம்!" நன்மொழி என்றார்.

பயித்திய மகனைப் பார்க்க அடிக்கடி
மருத்துவ மனைக்கு வருவார் தந்தை
ஆண்டு மூன்றும் அகன்ற திடையில்

பயித்திய மகனே பயித்தியம் நீங்கிப்
படுத்துக் கொண்டே பலநூல் எடுத்துப்
படித்துக் கொண்டே இருக்கப் பார்த்தும்
அடிக்கடி இடக்கை அழகிய மணிப்பொறி
கண்ணில் ஒற்றிக் காதில் ஒற்றிப்

பார்த்துப் பார்த்துப் பலபல தன்னுள்
பேசிப் பேசி மகிழக் கண்டு
மருத்துவர் அருகில் வந்தார் தந்தை

மகன் நோய் தீர்ந்த மகிழ்ச்சிப் பெருக்கில்
இருக்கும் தந்தைக் கின்முகம் காட்டி
' பயித்தியம் தீர்ந்தது பையன் வாழ
வழிஒன் றுளது; மறுக்கவேண்டாம்''
என்று மருத்துவர் இயம்பத் தொடங்கினுர்;
''படித்த மகனின் பயித்தியம் எதனுல்?
என்று பலநாள் எண்ணி யெண்ணி
ஆய்ந்தேன்; காரணம் அறிந்தேன் விரைவில்
கல்லூரி வாழ்வில் காதல் முகிழ்க்க
அடிக்கடிப் பழகி அவனும் அவளும்
காதல் வாழ்வில் களித்து மகிழ்ந்தனர்
பிரிந்தனர் பின்னர் பெரியோர் கலந்து
திருமண வாய்ப்பைத் தேடுவோ மென்றே.
இடையில் அவளுக்கு இருமல் ஈளை
வந்தது கண்டாள்; வாடினுள் கன்னி
தன்நோய் தனது காதலர்க்(கு) ஆனல்
என்னு வதுவென எண்ணி மனதுள்
காதலர்க்கு ஒருநாள் கடிதமெழுதி
மாங்குயில் கூவும் மாமரத் தருகே
வருக! வென்ருள், வரவேற் றழுதாள்
திருமண வாழ்வு சிதைந்தென் றுரைத்து
மறக்கச் சொல்லி வணங்கிச் சென்றுள்
மணிப்பொறி எடுத்துன் மகன்கைக்கொடுத்தாள்;
''என்இத யம்போல் என்றும் ஒலிக்கும்
காதற் பரிசிது'' கைக்கொள் என்ருள்
பிரிந்தனர் இருவரும்; பேரிடி தலையில்
வீழ்ந்தவர் போல வீடுவந் தடைந்தனர்.
காதற் பரிசு கைமணிப் பொறியைக்
கண்ணெனக் காத்தான்; கடத்தினுன் நாளை
கைமணிப் பொறியும் களவுபோ னதுவே.

களவு போன கைமணிப் பொறியைத்
தேடினேன்; தேடினேன்; பலநாள் தேடினேன்.
கண்டு பிடித்துக் கொண்டு கொடுத்தேன்;
அறிவைப் பெற்ருன்; அகமகிழ் வடைந்தான்
இதுதான் மருத்துவம்! இதுதான் மருத்துவம்!
மகனின் வாழ்வு வளம்பெற வேண்டின்
காதலி இன்னும் கன்னிப் பெண்ணுய்
உன்மகன் நினைத்தே உயிர்வாழ் கின்ருள்.
இருமல் ஈளை இல்லா தொழிந்தது.
திருமகள் போன்ற அருமகள் அவளை
மணம்செய்'' என்ருர் மருத்துவர்
குணம்பெற்று மகனும் குடிசெய் தனனே!!

அட்டைப்பட விளக்கம்

பண்டைக் காலத்தில் தமிழ் மக்கள் திருமணம் செய்து கொண்டு காதல் செய்வதைவிட, காதல் செய்துவிட்டு திருமணம் செய்து கொள்வது என்ற வழக்கத்தைத் தான் மிகச் சீரிய பண்பாடாகக் கொண்டிருக்கின்றனர் என்பதை, சங்க கால அகத்துறை இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

தமிழகத்துக் காதல் மணம் எவ்வளவு சிறந்து விளங்கிற்று என்பதை பெரும் புலவரான கபிலர் கலித்தொகையைச் சேர்ந்த பாடல் ஒன்றின் மூலம் அழகாக விளக்கிக் காட்டுகின்றார்.

பருவ மெய்திய தலைவி தாயின் கட்டளைப்படி வீட்டை விட்டு வெளியே போக முடியாத நிலையில் இருக்கிறாள். தலைவியைக்காண முடியாத தலைவன் வருந்துகிறான், தலைவியை அவளது வீட்டிலேயே போய்ப் பார்த்து விடுவது என்ற துணிவோடு அவள் வீடு நோக்கிச் செல்கின்றான்.

வீட்டினுள் தலைவியுடன் தாயும் இருக்கக் கண்ட தலைவன், தன்னை யாரென்று தலைவி அறிந்து கொள்ளும் வண்ணமும், தாய் அறிந்து கொள்ளாவண்ணமும், நா வறட்சிககு நீர் வேண்டும் எனக் குரல கொடுககின்றான்.

வீட்டினுள் இருந்த தாய் மகளைப் ... "பெண்ணே குடிக்க நீர் ...ம். பொன் குவளையில் ...டு கொடு" என்று பணிக்...

...லவியும் அவனை இதற்கு முன் அறியாதவள் போல் நடிப்புச் ...பது நீர் கொண்டு வாயிலில் நிற் ... அவனிடம் போய் குவளையை ...கின்றாள்,

தலைவன் சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு அவள் நீட்டிய குவளையை ஒரு கையால் வாங்கிக்கொண்டு மற்றொரு கையால் வளையணிந்த அவளது கையைப் பிடித்திழுக்கின்றான்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய எல்லாம் சேர்ந்து அவளை ஒரு உலுக்கு உலுக்குகின்றன. அச்சத்தால் அவள், "அம்மா இவன் செய்கிற செயலை ஓடி வந்து பாரீர்" என்று அலறி விடுகின்றாள்.

ஓடிவந்த அன்னை "என்ன?" என்று கேட்கின்றாள்.

தலைவி அந்த இளைஞன் மீது கொண்டிருந்த காதலன்பின் காரணமாக அவனைக் காட்டிக் கொடுக்கக் கூடாது என்று கருதி, ஒரு பொய்யின் மூலம் அவனைத் தப்புவிக்க வேண்டும் என்று அந்த நொடிப்பொழுதே எண்ணுகின்றாள். உடனே தாயிடம் "இவன் நீர் குடிக்கும் போது ஒரே விக்கலாக விக்கினான். அதனால் ஏதோ என்று அஞ்சித் தங்களை அழைத்தேன்" என்று கூறுகின்றாள்.

தாய் தலைவியின் கூற்று உண்மையென நம்பி தலைவனது முதுகைப் பல தடவைகள் தடவிக் கொடுக்கின்றாள்.

பிறகு தலைவன் தலைவியைக் கடைக கண்ணால் பார்த்து, புன்சிரிப்பைத் தெரிவித்து அவ்விடம் விட்டு அகல்கின்றான்.

"பிறகு அந்த இளைஞன் தலைவியைத் தன் கடைக்கண்ணால் ஒரு கவ்வு கவ்வுவது போல் கண்ணடித்து விட்டுப, புன் சிரிப்பைத் தெரிவித்து விட்டுப் போய்விடுகின்றான்.

"சுடர்த்தொடி இ கேளாய் தெருவி(ல்) நாம் ஆடும்
மணல் சிற்றில் காலில் சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி மேலோர் நாள்
அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற்(கு) அன்னை
அடர்பொன் சிரகத்தால் ஆக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா என்றாள் எனயானும்
தன்னை அறியாது சென்றேன் மற்(று) என்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னாய் இவனொருவன் செய்ததுகாண் என்றேனா
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையும்
தன்னைப் புறம் பழித்து நீவமற்(று) என்னைக்
கடைக் கணாற் கொல்வான்போல் நோக்கி
நகைக்கூட்டம்
செய்தான் அக் கள்வன் மகன்.

புலவர் கபிலர் கூறியுள்ள இக்காட்சியை ஓவியர் மாதவன் அவர்கள் நமக்கு ஓவியமாகக் காட்டுகின்றார்.

சிறுகதைப் போட்டி முடிவு

★

சென்ற சனவரித் திங்கள் பொங்கல் மலர் வெளியிடுவதையொட்டி புதிய எழுத்தாளர்களுக்கு உற்சாகத்தையும் வாய்ப்பையும் ஏற்படுத்த எண்ணி ஒரு சிறு கதைப் போட்டியை அறிவித்திருந்தோம். ஆனால் பொங்கல் மலர் எதிர்பாராதவிதமாக வெளிவரமுடியாத நிலைமை ஏற்பட்டதால் போட்டியின் முடிவை அறிவித்து கதைகளை வெளியிட்டு பரிசுகளை அளித்திட இயலவில்லை. இந்த மலரில் பரிசு பெறும் மூன்று கதைகளையும் வெளியிட்டிருக்கிறோம்.

போட்டிக்காக இருநூற்றைம்பது கதைகளுக்குமேல் வந்தன. அதில் மூன்று கதைகள் பரிசுக்குரியனவாக தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. பரிசுபெற்ற எழுத்தாளர்களை வாழ்த்துகிறோம். பரிசு பெறாத எழுத்தாளர்கள் உற்சாகம் குன்றாமல் மேலும் நல்ல வகையில் கதைகளை எழுத முயற்சித்து அடுத்த ஆண்டும் போட்டியில் கலந்துகொள்ள கேட்டுக்கொள்கிறோம்.

—ஆசிரியர்.

முதற் பரிசு :

"இதய தாகம்"

எழுதியவர்: திரு. செ. சிவசுப்பிரமணியம்
குலசேகரபுரம்.

இரண்டாம் பரிசு :

"நினைத்தது நடக்கவில்லை"

எழுதியவர்: திரு. மாசிலாமணி
சென்னை.

மூன்றாம் பரிசு :

"ஏமாற்றம்"

எழுதியவர்: திரு. தன. வள்ளுவன்
கடலூர். என். டி.

முதற் பரிசுக் கதை

இதய தாகம்

செ. சிவசுப்பிரமணியம்



திரைப்பட உலகிலும் நாட்டிய உலகிலும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் நட்சத்திரமாக விளங்கினுள் குமாரி நளினு. அவளது புன்சிரிப்பு கிடைத்தால் போதும் என்று அலைந்தவர்கள், அவளது கடைக்கண் பார்வைக்குத் தவங்கிடந்தவர்கள்-இவர்களில் மோகனசுந்தரமும் ஒருவனுக இருந்தான். அவளது நாட்டிய நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் எதையும் பார்க்கத் தவறமாட்டான். நாளாக ஆக நளினு அவனுள்ளத்தில் நிறைந்தவளாக ஆகி விட்டாள். எப்படியேனும் அவளது நட்பைப்பெற வேண்டுமென எண்ணங்கொண்டான். இதற்காக அவன் பலரின் உதவியை நாட்வேண்டியதாயிற்று. பல ஆயிரரூபாய்களைச் செலவு செய்தான், அவளது நட்பைப் பெறும் வழிகளைக் காண. கடைசியில் அவனது பணம் அவன் எண்ணத்தை நிறைவேற்றியது. நளினுவின் நட்பு கிடைக்கும் வழி ஏற்பட்டது.

மோகனசுந்தரம் சென்னையிலே உள்ள பெரும் பணக்காரர்களில் ஒருவன். இளவயதிலேயே பெரிய மனிதர் பட்டியலிலே சேர்ந்து விட்டான். வியாபாரத் திறமையாலும் கள்ள மார்க்கட் வழிகளாலும் மிகக் குறுகிய காலத்தில் ...ருஞ்செல்வந்தராக உயர்ந்தவர் அவன் ...கார்த்திகேய முதலியார். "கார்த்திகேயன் ...ஸ்" என்ற ஸ்தாபனத்தில் காப்பி எஸ் ...டீ எஸ்டேட், சர்க்கரைத் தொழிற்சாலை—...வாலை இப்படி பல அடங்கியிருந்தன. ...த்திகேய முதலியார் இறந்தவுடன் மோகன...தரத்தின் நிர்வாகத்திற்கு எல்லாம் வந்தன. ...பல தொழிலதிபராஞன். ஆனுல் எல்லா...திகளைப் பெற்றிருந்தும் குடும்ப வாழ்க்கை அவனுக்குச் சலிப்பைத் தந்தது. தாய் தந்தையரின் சொல் தட்ட முடியாமல் ஒரு லட்சாதிபதியின் மகளை மணந்து கொண்டிருந்தானே தவிர அவனுடைய உள்ளத்தில் நிறைந்தவளாக அவள் இல்லை. ஏதோ கடமைக்காக கணவன் மனைவி என்று வாழ்ந்து வந்தார்கள்.

இரண்டு ஆண்டுகளாகத்தான் அவன் நளினுவைப் பற்றிய எண்ணங்கொண்டிருந்தான். அவனது கம்பெனியின் ஆதரவில் ஒரு விழா நடைபெற்றபோது, நடனமாட வந்த நளினுவை நேரில் காணும் வாய்ப்பு ஏற்பட்டது. அன்றைய தினத்திலிருந்து அவனுடைய நினைவில் நளினு குடியேறிவிட்டாள். என்ன பணம் செலவானுலும் எவ்வழியைக் கையாண்டாகிலும் அவளது நட்பைப் பெற்ருல்தான் தன்னைல் மகிழ்ச்சியாக வாழ முடியும் என்ற முடிவுக்கு வந்தான். அதனுல் ஏற்படும் இழிச்சொற்களையும் பழிச் சொற்களையும் ஏற்றுக் கொள்ளத் தயாராகி விட்டான். தன்னிடம் பணம் இருக்கின்றவரை தன்னிலை தாழாது என்று எண்ணினுன்.

நளினு சம்மதம் கிடைத்ததும் அவளை முதன் முதலாகச் சந்திப்பதை பங்களூரில் வைத்துக் கொள்ள எண்ணினுன். அதன்படி பங்களூரில் ஒரு பங்களாவையே விலைக்கு வாங்கி, தனது முதல் சந்திப்பிலேயே அவளது பாராட்டையும் அன்பையும் பெற்றுவிட வேண்டுமென்று சகல ஏற்பாடுகளையும் குறையில்லாமல் செய்தான். அவனது வேண்டுகோளுக்கிணங்க நான்கு தினங்கள் பங்களூரில் தங்குவதற்கு நளினு சம்மதம் தெரிவித்து செய்தி அனுப்பினுள்.

எவ்விதத் தடையுமில்லாமல் மோகன சுந்தரம் பங்களூர் சென்ருன். அவனுக்கு முன்னதாகவே நளினு தனது பரிவாரத்துடன் அங்கு சென்றுவிட்டாள்.

இரவு எட்டு மணியிருக்கும். சதங்கை ஒலிக்க நாட்டிய உடையில் காட்சியளித்தாள் நளினு. அங்கே தனியே உருவாக்கப்பட்டிருந்த

மேடையில், பக்க வாத்தியங்களுடன் தனது கலை விருந்தையளித்தாள்.

நாட்டியம் முடிந்தவுடன் பக்க வாத்தியக் காரர்கள் தங்கள் மூட்டைகளைக் கட்டிக்கொண்டு வெளியேறினர்கள். நளினு மோகனசுந்தரத்தின் அருகே வந்தாள்.

"எப்படியிருந்தது என் நாட்டியம்?"

"நளினு! எப்படிச் சொல்வேன். எனச்கு வார்த்தைகளே வரவில்லை, என்றுமே கண்டி ராத பேரின்பத்தை இன்று காண்கிறேன். நீ அளித்த நாட்டிய விருந்திற்கு என் அன்பின் அடையாளமாக ஒரு பரிசு தரப்போகிறேன்."

"பரிசா! என்ன அது?"

மோகனசுந்தரம் எழுந்துசென்று தோல் பெட்டியைத் திறந்து அதிலிருந்து ஒரு வைர நெக்லசை எடுத்துவந்து அவளிடம் காட்டினுன்.

"எப்படி இருக்கிறது. உனக்குப் பிடித் திருக்கிறதா?"

"நன்ருக இருக்கின்றது" என்று புன்முறு வலித்தாள்.

"உனக்குப் பிடித்திருக்கிறதல்லவா?" என்று கேட்டுக்கொண்டே அதை அவள் கழுத் தில் அணிவித்தான்.

"பிறருக்கு அழகான காட்சிப் பொருளா வேனே தவிர எனக்குப் பிடித்ததென்று எப்படி நான் சொல்ல முடியும்!"

"உனக்குப் பிடித்தது எது என்று சொல்"

"ஒன்றுமே இல்லை. அவசியத்தின் பேரில் தான் எந்தப் பொருளையும் ஏற்றுக்கொள்வேன். எனக்குப் பிடித்தது இவ்வுலகில் இல்லை. எவ ராலும் தரவும் முடியாது."

"என்னுல் முடிந்தால்"

"உங்களால் பணத்தை அள்ளி அள்ளி கொடுக்க முடியும். பணத்தால் வாங்கக்கூடிய பொருள்களைத் தரமுடியும். சரி ஏன் இந்த வேதாந்தப் பேச்சுகள்."

பேச்சை மாற்ற எண்ணினுள்.

"ஆமாம் நீங்கள் இங்கு என்னுடன் வந்து தங்கியிருப்பது உங்கள் மனேவிக்குத் தெரியுமா?"

"தெரியுமோ, தெரியாதோ அதைப்பற்றி நான் கவலைப்படுவதில்லை."

"ஏன் உங்கள் மனைவியிடம் உங்களுக்கு அன்பு இல்லையா?"

"அவளைப் பற்றிய பேச்சு ஏன். வேறு ஏதாவது பேசு"

"பணக்காரர்கள் எல்லோருமே இப்படித் தான்!"

"என்ன!"

"மனைவி மக்களுடன் மகிழ்ச்சியுடன் குடும்பம் நடத்துவதை விட்டு என் போன்ற நடை பிணங்களுடன் பழகுவதையே விரும்புகிருர்கள்"

"என்னிடம் செல்வம் குவிந்து கிடக்கிறதே தவிர எனது வாழ்வில் நிம்மதியில்லை. நிம்மதியைத் தேடியலைகிறேன். உன்னுல் எனக்கு ஆறுதல் கிடைக்கும் என நம்புகிறேன். என் உள்ளத்தில் கொந்தளித்துக் கொண்டிருக்கும் எண்ணத்தைச் சொல்லவா?"

"என்ன அது?"

"நீ மறுப்பாயோ என்னவோ!"

"மறுப்பதும் ஏற்பதும் தாங்கள் கேட்பதைப் பொறுத்து இருக்கிறது"

"நீ ஏன் நல்ல குடும்பப் பெண்ணுக மாறக் ...ாது. நீ சம்மதித்தால் உன்னை என மனைவி ... ஏற்றுக் கொள்கிறேன்!"

இதைக் கேட்ட அவள் பலமாக சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிருய்?"

"சிரிக்காமல் என்ன செய்வது. என்னைமனைவி என்ற நிலையில் வைத்துக்கொள்ள விரும்புகிறீர்கள்? நான் யார் என்பதை நீங்கள் அறியவில்லையா?"

"அறிவேன். நீ ஒரு பெண் வாழவேண்டியவள்."

"பச்சையாகச் சொல்ல வேண்டுமானுல் நான் ஒரு விபச்சாரி என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இன்று உங்களுடன் இருக்கிறேன். நேற்று எவருடனே சல்லாபித்துக்கொண்டிருந்தேன். நாளை யார் வருவார்களோ."

"எப்படி இந்த வாழ்விற்கு வந்து விட்டாய் உன்னுடைய அழகிற்கு நல்ல குடும்பப் பெண்ணுக வாழலாம்."

"நான் விரும்பாவிட்டாலும் இந்த வாழ்வு என் விதியாகிவிட்டது"

"அந்த விதியைத் தான் நான் மாற்றி விடுகிறேன் என்று சொல்கிறேன்"

"வீணுன எண்ணத்தை நெஞ்சிலே வளரச் செய்து கொள்ளாதீர்கள். உங்களிடம் அன்பு காட்ட ஒரு மனைவியிருக்கின்ருள் அவளோடு நிம்மதியான வாழ்வை நீங்கள் காணலாம்."

"என் மனைவியை நான் விவாக ரத்துசெய்து கொள்ள முடியும். நீ சம்மதித்தான் உன்னை மணந்து கொள்கிறேன்."

"அந்தப் பெண்ணின் கதி என்னவாகும் என்று யோசித்தீர்களா?"

"வாழ்க்கைக்கு வேண்டிய பணத்தை நான் தந்து விடுகிறேன்."

"ஒரு பெண்ணுக்கு தரப்படும் அக்கொடிய பாவத்திற்கு நான் ஆளாக முடியாது."

"சரி. விவாக ரத்து வேண்டியதில்லை. என் மனைவியின் சம்மதத்தைப் பெற்று வந்தால் மணந்து கொள்வாயா?"

"என் மனநிலை உங்களுக்குப் புரியாது! விபச்சாரியாக வாழ்ந்துவரும் என்னை விட்டுப் பெண்ணுக்கும் விபரீத எண்ணத்தை தயவு செய்துவிட்டு விடுங்கள்."

"வேண்டாம். நளினு! என்னை நம்பு. கடந்த காலத்தை மறந்து விடு. என் மனைவியின் சம்மதத்துடன் உன்னை மணந்து கொள்கிறேன். இருவரையும் அன்புடன் நடத்துகிறேன். என் வேண்டுகோளை நிராகரிக்காதே."

"என்னை மன்னித்து விடுங்கள். மேலும் என்னை வற்புறுத்திக் கேட்டு என்மனதை நோகச் செய்யாதீர்கள்"

"என் விருப்பத்தைத்தான் தெரிவித்தேன். அது உன் மனதைப் புண்படுத்தியிருக்குமானுல் என்னை மன்னித்துவிடு."

கண்களில் வழிந்த நீரைத் துடைத்துக் கொண்டாள் அவள்.

"நளினு! வருத்தப்படவேண்டாம். இனி உன்னை வற்புறுத்தவில்லை. உன் விருப்பப்படி நடந்து கொள். உன்னுடைய நட்பு கிடைத்ததையே பேரின்பமாகக் கருதுகிறேன்."

"இல்லை மோகன். உங்களுக்காக வருந்துகிறேன். ஒரு பத்தாண்டுக் காலத்திற்கு முன் நீங்கள் என்னிடம் வந்து கேட்டிருந்தால் உங்கள் விருப்பத்தை நான் நிறைவேற்றக்கூடியவளாக இருந்திருப்பேன். உங்கள் மனைவியாகக் கூட வந்திருப்பேன். என் வாழ்க்கையே மாறியிருக்கக்கூடும்."

"அப்படி என்ன நேர்ந்துவிட்டது உனக்கு."

இன்று நான் எல்லோருக்கும் அறிமுகமானவள். என்னைப் புகழ்ந்துரைக்கும் ரசிகர்கள் ஏராளமானவர் இருக்கிருர்கள். என்னை பார்க்க வேண்டும் என்ற ஆவலில் பெருங்கூட்டமாக கூடிவிடுகிருர்கள் எங்கு சென்ருலும். உங்களைப் போல் எத்தனையோ பேர் என்னிடம் வருகிருர்கள். என்ன கேட்டாலும் அதை தர, என்ன செலவாளுலும் தயாராக இருக்கின்றனர். என்னை மணந்து குடும்ப வாழ்க்கையில் ஈடுபட எத்தனையோ பேர் விரும்புகிருர்கள்.

"நல்ல குடும்பப் பெண்ணுக ஏன் வாழக்கூடாது என்று கேட்டீர்களல்லவா நீங்கள். எனக்கு இப்படிப்பட்ட வாழ்வு ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஒருவரை மணந்து நல்ல குடும்பப் பெண்ணுக வாழவேண்டும் என்றுதான் ஆசைப்பட்டேன். ஆனுல் சமூகம் நான் குடும்பப் பெண்ணுவதைத் தடுத்தது. சூழ்நிலைகள் என்னை இந்த வாழ்விற்குத் துரத்திவிட்டது.

"நல்ல மக்களைப் பெற்று கற்புடைய பெண்ணுக குடும்ப வாழ்க்கை நடத்த எண்ணியிருந்த எனக்கு விபச்சாரி என்ற வீண்பழி கிடைத்தது. சமூகத்தினரால் ஒதுக்கப்பட்டேன், என்னை மணந்து குடும்பம் நடத்த எவரும் முன்வரவில்லை. விபச்சாரி என்ற முத்திரையைப் பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய இச்சையைத் தீர்த்துக் கொள்ள என்னை அணுகினுர்களே யொழிய என்னுடைய மனவேதனையைப் போக்க எவரும் விரும்பவில்லை.

"தரமுள்ள தங்கமாக விளங்கினேன். தூர எறிந்தனர். உடைந்த பாண்டமாக வாழ்கிறேன் ஒன்று சேர்க்கிறேன் என்று வருகிருர்கள். விசித்திரமான உலகம்!"

நளினு அத்துடன் நிறுத்திக்கொண்டாள். மோகன் அவளது சோகக் கதையை அறிய ஆவல் கொண்டான்.

"இக் கொடுமைக்கு யார் காரணம்? விபரமாகச் சொல்"

"விருந்துண்ண வந்தவருக்கு விளக்கெண்ணையையா தருவது குடிக்க. நீங்கள் இன்பமாகப் பொழுதைக் கழிக்க எண்ணி வந்திருக்கிறீர்கள். என்னுடைய சோகக் கதையை ஏன் கேட்கிறீர்கள்?"

"கொடுமைக்குக் காரணமானவர்களைச் சொல் அவர்களைப் பழிக்கு பழி வாங்குகிறேன்"

"வேண்டாம். அதனுல் என் வாழ்வு மலர்ந்து விடுமா என்ன? நான் ஒரு பட்ட மரம்!"

"விரக்தியோடு பேசுகிருய் உன் கதையைச் சொல் நான் கேட்கத்தான் வேண்டும்."

நளினு எழுந்து சென்று தண்ணீர் குடித்துவிட்டு வந்து உட்கார்ந்தாள். மோகனசுந்தரம் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான். அவள் பேச ஆரம்பித்தாள்.

"நான் திருச்சியிலே பிறந்தேன். என் தந்தை மளிகை வியாபாரம் நடத்தி வந்தார். எனக்கு மூன்று தங்கைகள் உண்டு. நான்தான் மூத்தவள். நாங்கள் வளர்ந்தோம்; பயின்ருேம். ஆருவது வயதிலேயே நான் நாட்டியம் பயிலத் தொடங்கினேன். எட்டாவது வயதில் தாயை இழந்தேன். தந்தை ஆதரவில் செல்லமாக வளர்ந்தோம். எனது படிப்பு பத்தாவதோடு நின்றது.

நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுக்க எண்ணி எனக்கு மாப்பிள்ளை தேடினர் என் தந்தை. கடைசியில் சென்னையில் ஒரு பணக்கார வீட்டுப் பிள்ளைக்கு என்னைக் கொடுக்க முடிவு செய்தார். இப்பொழுது அவர் எங்கிருக்கிருர் என்பது எனக்குத் தெரியாது. எனக்கு ஏற்பட்டிருந்த வெட்கத்தால் அவர்களைப் பற்றிய முழுவிவரமும் நான் அறிந்து கொள்ளவில்லை. சென்னையிலிருந்து அவர்கள் வந்து நிச்சயம் செய்து திருமணத்திற்கு நாள் குறித்துச் சென்ருர்கள்.

இது முடிந்த இரண்டு நாட்களுக்கெல்லாம் எங்கள் குடும்பத்தை நாசமாக்கிய அந்தச் சம்பவங்கள் ஒன்றன்பின் ஒன்ருக நிகழ்ந்தன. திடீரென அடித்த புயலாலும் வெள்ளத்தாலும் தந்தையின் மண்டிக் கிடங்கிலிருந்த பொருள் அனைத்தும் சேதமடைந்து பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. என் தந்தை கடனாளியானுர்.

கடன் வாங்கியாவது திருமணத்தை நடத்திவிடத் தீர்மானித்தார் என் தந்தை. ஆனல் சென்னையில் மாப்பிள்ளைவீட்டார் எங்களைக் கைவிட்டனர். நிச்சயம் செய்துவிட்ட திருமணத்தை நிறுத்திவிட நான் நடத்தை கெட்டவள் என்று என்மீது பழி சுமத்தி செய்தி பரப்பினர். திருமணம் நின்றது.

எனது இருண்ட வாழ்வு ஆரம்பமாகியது. என் தந்தை நோய்வாய்ப்பட்டு ஒரு மாதத்திற்குள் இறந்தார். என் தங்கைகளைக் காப்பாற்றும் பொறுப்பு என்னைச் சேர்ந்துவிட்டது. உற்ருர் உறவினர் எவரும் முன் வரவில்லை எங்களுக்கு உதவ. என்னை மணந்து கொள்ள எவருக்கும் விருப்பமில்லை. பணத்திற்குள்ள மதிப்பை அப்பொழுதுதான் உணர்ந்தேன்.

என் நிலையைப் பயன்படுத்திக்கொண்டு என்னைச் சுற்றி வட்டமிட்டனர் பலர். கொடிய வேதனைக்காளானேன். எனக்கு தங்கைகள் மட்டும் இல்லாதிருந்தால் அன்றே இறந்திருப்பேன். நான் வாழ நினைத்ததெல்லாம் அவர்கள் நலத்தை எண்ணிதான்.

கடைசியில் எனக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்த நடன ஆசிரியர் ஒரு வழியைச் சொன்னுர். திரைப்பட வாய்ப்பைப் பற்றி விவரித்தார். லட்சம் லட்சமாகச் சம்பாதிக்கும் வழியைச் சொன்னுர். முதலில் நான் மறுத்துவிட்டேன். என் நிலையையும் தங்கைகளின் எதிர்காலத்தையும் எடுத்துக்கூறி என்னை வற்புறுத்தினர். நீண்ட நேரம் சிந்தித்தபின் சம்மதித்தேன்.

சென்னைக்குப் புறப்பட்டு வந்தோம். நடன ஆசிரியரின் உதவியால் எதிர்பார்த்த அந்த வாய்ப்பு ஏற்பட்டது. நாகரத்தினம் நளினியானேன். என் புகழ் பரவ ஆரம்பித்தது.

எனக்குதவிய நடன ஆசிரியருக்கு எனது நன்றியைத் தெரிவித்தபோதுதான் அவர் எண்ணத்தை நான் அறிந்தேன். அவருடைய ஆசைகளுக்கு நான் பலியாக நேரிட்டது. பணம் இருந்தால்தான் மானத்தோடு வாழ முடியும் என்ற நிலையில் எனக்கு ஏற்பட்ட வாழ்வு என் தங்கைகளுக்கு ஏற்படக் கூடாது என்று எண்ணினேன். என் தங்கைகளின் வாழ்விற்காக என் வாழ்வை பலியிட வேண்டியதாயிற்று. இன்று என் தங்கைகளை மட்டுமல்ல எத்தனையோ தங்கைகளை காப்பாற்றிய, காப்பாற்றிக்கொண்டு வரும் மன அமைதியில் வாழ்கிறேன். எனது மூன்று தங்கைகளும் மணந்து குடும்பம் நடத்துவதைக் காண்கிறேன். என்னிடம் பணம் இல்லையானல் அவர்களை இந்த நிலையில் கண்டிருக்க முடியாது.

பெண்கள் கற்புடன் வாழமுடியாத நிலைமைக்கு வறுமை முக்கிய காரணமாகிறது. நான் சம்பாதிக்கும் செல்வம் அனைத்தையும் திக்கற்ற பெண்களை ஆதரிக்கும் பணியிலேயே செலவிடுகிறேன். நாடெங்கிலுமுள்ள அனாதை இல்லங்களுக்கு என்னிடம் குவியும் பணத்தை அனுப்பிக்கொண்டிருக்கிறேன். இதற்காகத்தான் இரவு பகலென உழைத்து திரைப்படங்களில் நடிக்கிறேன்; நாட்டிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறேன். உங்களைப் போன்ற பணம் படைத்தவர்களுக்கு ஏழைகளை ஆதரிக்க, திக்கற்றவர்களுக்கு வழிகாட்ட இரக்கம் ஏற்படாது. ஆனல் என் போன்றவர்களுக்குத் தாராளமாக செலவு செய்ய முன்வருகிறீர்கள். உங்களால் செய்ய முடியாததை உங்களிடமிருந்து பெற்று நான் செய்கிறேன். பணம் பறிக்கும் தொழிலில் திறமை பெற்று நல்ல வாய்ப்பைப் பெற்றிருக்கும் நான் அவ்வழிகளில்

எனக்குக் கிடைக்கும் சிறு வாய்ப்புகளையும் நான் இழந்து விடுவதில்லை.

"இப்பொழுது சொல்லுங்கள் என்னைப் பற்றி!"

நளினா தனது பேச்சை முடித்துக்கொண்டாள். மோகன சுந்தரம் தலை கவிழ்ந்தபடி இருந்தான். அவள் கண்களில் நீர் சுரந்து வழிந்தது.

"நளினா என்னை மன்னித்துவிடு. உன்னை இக்கதிக்கு ஆளாக்கிவிட்டேன். என்னை மன்னித்துவிடு."

"என்ன சொல்கிறீர்கள்!"

"உன் வாழ்வைக் கெடுத்த பாவி நான்தான். தந்தை சொல் கேட்டேன். உன்னை நிராகரித்தேன். உன்னை மணக்கவந்த சென்னை மாப்பிள்ளை நான்தான்."

"ஆ! நீங்களா!"

"நளினாவால் மேற்கொண்டு பேசமுடியவில்லை. அவள் முகம் சிவந்தது. எழுந்து சென்று அவன் கொடுத்த நெக்லசையும் ரூபாய் நோட்டுகளையும் எடுத்துவந்து அவன்முன் வைத்தாள்.

"மிஸ்டர் மோகன். நீங்கள் கொடுத்த பணம் நீங்கள் அளித்த பரிசு. எடுத்துக்கொள்ளுங்கள். இதைப் பெற்றுக்கொள்ள எனக்கு விருப்பமில்லை. உங்களுடன் இருக்கவும் விருப்பமில்லை. நான் செல்கிறேன். இனி என்னை காணும் முயற்சியில் ஈடுபடாதீர்கள்!"

மோகன் தலையில் கைவைத்தபடி அசையாது இருந்தான். நளினா தனது ஆட்களுடன் அந்த பங்களாவைவிட்டு வெளியேறினாள்.



வடபுலம் வென்ற தென் தமிழ் வேந்தர்



"பண்டைத் தமிழகம் எவ்வகைகளில் சிறந்து காணப்பட்டது?" என்ற ஒரு வினை எழுமானால், "அறிவு—ஆற்றல்—அன்பு—அருள்—பீடு—பெயர்—அறம்—மறம் — ஆகியவற்றில் மிகச்சிறந்து காணப்பட்டது!" என்ற விடையைத்தான், வரலாறு, அவனியோர் முன் எடுத்துவைக்கும்.

பண்டைத் தமிழகம் பெற்றிருந்த சிறப்புக்குரிய பண்புகளில் உலகோர் அறிய விளங்கும் இருபெரும் பண்புகள் என்னவென்றால், அவை வீரமும் அதனால் ஏற்பட்ட புகழுமாகும். இதைத்தான் கவிஞர் பாரதியார் "வீரஞ்செறிந்த தமிழ்நாடு" என்றும், "புகழ் மண்டிக்கிடந்த தமிழ்நாடு" என்றும் குறிப்பிட்டார்.

பண்டைத் தமிழகத்தின் வீரம் இமயம் சென்று முட்டிநின்றது; அலைகடல்களைத் தாண்டிப் பிறநாடுகளைப் பற்றி நின்றது; அதன் வெற்றிச் சிறப்பு நிலத்தையும், நீரையும், வானையும் அடக்கி ஆண்டது.

தமிழகம் என்ற சொல், சேர நாட்டையும், சோழ நாட்டையும் பாண்டிய நாட்டையும் உள்ளடக்கிக் காட்டும் நிலப் பகுதியைக் குறிக்கும் சொல்லாகும். தமிழகத்தின் வீரம் என்னும்போது, சேர—சோழ—பாண்டியராகிய மூவேந்தரின் வீரமும் ஒரு சேர நினைவுறுத்தப்பெறும். தமிழன், வானத்தை அடக்கி ஆளும் வல்லமை பெற்றவன் என்பதைச் சேரனது அடையாளமாகிய வில்லும், நிலத்தை வென்று ஆளும் திறம்படைத்தவன் என்பதைச்

இரா. நெடுஞ்செழியன்

சோழனது அடையாளமாகிய புலியும், நீரை அடக்கி ஆளும் திறம் பெற்றவன் என்பதைப் பாண்டியனது அடையாளமாகிய மீனும் உணர்த்திவந்தன. விற்கொடியும், புலிக்கொடியும், மீனக்கொடியும் தமிழன் தாக்கிய தனிப் பெருஞ் சிறப்புவாய்ந்த முக்கொடிகளாகும். அந்த முக்கொடிகளும் தமிழனின் வீரத்தையும், தீரத்தையும், வெற்றியையும், பெற்றியையும், புகழையும், பெருமையையும் இமயமலையின்மீது ஏறி நின்று உலகுக்கு அறிவித்துக்கொண்டிருந்தன ஒரு காலத்தில். இப்பொழுது அந்தக் கொடிகளின் அடையாளங்கள் காலவெள்ளத்தால். இமயமலையில் சுவடு தெரியாமல் அழிந்து போயின; ஆனாலும் இமயமலையில் வெற்றிகளின் அடையாளங்களாக வில்-புலி-கயற் கொடிகளைப் பொறித்த வரலாற்று நிகழ்ச்சிகள், இலக்கியங்களினின்றும் அறவே அழிந்துபோய் விடவில்லை. ஒரு காலத்தில் இமயமலையே தமிழனின் மூன்று கொடிகளையும் தாங்கிய கொடிக்கம்பமாக இலங்கிற்று என்றால், அது மிகையாகாது.

தென்புலம் ஆண்ட தமிழ் மூவேந்தர் பலரும் அவ்வப்போது வட புலம்படையெடுத்துச்சென்று, எதிர்த்த வடநாட்டு மன்னர்களை முறியடித்து, ஓட ஓட விரட்டித் துரத்தியடித்து, வெற்றி பல கொண்டு, வெற்றிகளை என்றென்றும் நினைவு படுத்தும் அடையாளங்களாக விளங்கும் வகையில், தங்கள் கொடிகளாகிய வில்-புலி-கயல் ஆகியவற்றை இமயப் பெருங் கல்லிலே செதுக்கி புகழ்க் களிப்போடு தென்னகம் மீண்டனர் என்று தெரியவருகிறது. வடநாடு சென்று கொடி பொறித்து மீண்ட மன்னர்கள் வரலாறுகள் முழுவதும் நமக்குக் கிடைக்கப்பெறவில்லை. ஏடுகளிலும், கற்களிலும், செப்புத் தகடுகளிலும் எழுதிவைக்கப்பட்ட வரலாறுகள் மிகச்சில; எழுதிவைக்கப்படாமல் மறந்துபோன வரலாறுகள் பலப்பல. எழுதிவைக்கப்பட்ட வரலாறுகளிலும் காலவெள்ளத்தில் அழிந்துபோன வரலாறுகள் பல; அழிந்துபோனவைபோக கால வெள்ளத்தையும் தாண்டி மீறி வந்தவை சில. அந்தச் சிலவற்றிலும் கண்ணில் தட்டுப்படாமல் மறைந்துபோனவை பல; மறைந்துபோனவை போக எஞ்சி நிற்பவை மிகச்சில. அந்த மிகச் சிலவற்றுள்ளும் மறந்துபோனவை பல; அப்படி மறந்துபோனவை போக, நினைவில் தட்டுப்படுபவை மிகச்சில. அந்தச் சிலவற்றிலிருந்துதான் வடபுலம் வென்ற தென்தமிழ் வேந்தர்களைத் தேடவேண்டியிருக்கிறது.

நமது கண்ணுக்கும், கருத்துக்கும் எட்டிய தொலைவில் தென்படுகின்ற முதல் மன்னன் நிலந்தருதிருவிற் பாண்டியன் என்னும் பாண்டிய மன்னன ஆவான். அவனுக்கு நெடியோன் என்றொரு பெயரும் உண்டு. "நிலந் தந்த பேருதவிப் பொலந்தார் மார்பின் நெடியோன்" என்று மதுரைக் காஞ்சி என்னும் நூல் குறிப்பிடுவது தெளியத்தக்கதாகும். அவன் முதற் சங்க காலத்தில், அதாவது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தான் என்றும், கடல் கொண்ட பஃறுளியாற்றின் கரையிலிருந்த தென் மதுரை மாநகரைத் தன் அரசிருக்கையாகக் கொண்டு ஆண்டான் என்றும் வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். அவன் காலத்திலேதான் பஃறுளி என்ற பேராறும், பல அடுக்கங்களைக் கொண்ட குமரி என்னும் பெருமலைப் பகுதியும் கடலால் கொள்ளப்பட்டன என்றும், நிலந்தரு திருவிற்பாண்டியன் அவ்விடம் விட்டகன்று குமரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்திருந்த ஆலவாய் என்னும் நகரைத் தலைநகராக ஆக்கிக் கொண்டான் என்றும், பஃறுளியாறும், குமரிமலையும் கடலால் அழிந்த பின்னர் இவன் வடதிசை நோக்கித் தன் ஆட்சி எல்லையை நீட்டி, இமயமலையையும், கங்கையையும் கட்டி ஆண்டான் என்றும் கூறுகின்றனர்.

"பஃறுளியாற்றுடன் பன்மலை
யடுக்கத்து
குமரிக்கோடும் கொடுங்கடல்
கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும்
கொண்டு
தென்திசையாண்ட தென்னவன்"

[சிலப்: 11: 19-22]

என்று 'சிலப்பதிகாரம்' கூறுவதிலிருந்தும்மேற் கண்ட உண்மை தெளிவுபடும்.

தென்புலத்தையாண்ட நெடியோன் வடபுலத்தையும் வென்று, தென் குமரியிலிருந்து வட இமயம்வரையிலுள்ள நிலப்பரப்பை ஒரு குடை நிழலின் கீழ் வைத்து ஆண்ட சிறப்பினால்தான் 'மதுரைக்காஞ்சி' பாடிய மாங்குடி மருதனார் என்னும் பெரும்புலவர்,

"தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா வெல்லைத்
தொன்று மொழிந்து தொழில்கேட்ப"

[மதுரைக்காஞ்சி 70-72]

என்று கூறியுள்ளார். வெள்ளையர் ஆட்சிக்கு முன்பு குமரி முதல் இமயம் வரை உள்ள 'இந்தியா' என்னும்நிலப்பரப்பைக் கட்டி ஆண்ட முதல் பேரரசன் நிலந்தரு திருவிற் பாண்டியனே ஆவான்.

நெடியோன் நிலவெல்லை கடந்து வெற்றி கொண்டதோடு அவன் கடல் எல்லை கடந்தும்

வெற்றிகொண்டான் என்று தெரியவருகின்றது. அவனது மரபில் வந்து இரண்டாஞ் சங்க காலத்தில் வாழ்ந்த முதுகுடுமி என்னும் பாண்டிய மன்னனைப் புகழ்ந்துபாடவந்த நெட்டிமையார் என்னும் புலவர் பெருமாட்டியார்

"செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கீத்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணல்"

[புறம்-9]

என்று புறநானூற்றில் குறிப்பிடுவதிலிருந்து, நெடியோன் கடல் கடந்துபெற்ற வெற்றியின் சிறப்பை உணரலாம். அவனுக்குப் பிறகு மூன்றுஞ் சங்க காலத்தில் வாழ்ந்த தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாட வந்த குடபுலவியனுர் என்னும் புலவர்

"முழங்கும் முந்நீர் முழுவதும்
வளைஇப்
பரந்துபட்ட வியன்புலம்
தாளில் தந்து தம்புகழ் நிறீஇ
ஒருதாம் ஆகிய உரவோர்"

[புறம்-18]

என்று புறநானூற்றில் கூறுவதிலிருந்தும் நெடியோனின் கடல்கடந்த வெற்றிச்சிறப்புபுலப் படுத்தப்படுவதை உணரலாம். கடல் கடந்த சாவக நாட்டில் இவன் வெற்றி விழாக் கொண்டாடினன் என்றும் கூறப்படுகின்றது.

நெடியோனுக்குப் பிறகு வடபுலம் சென்று வென்று மீண்ட அரசர்கள் பலப்பலரவர். அவருள் குறிப்பிடத்தக்க பெரும்புகழ்பெற்ற மன்னன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி என்னும் சோழனுவான். வடபுலத்தை ஆண்ட பெரும் பேரரசனுன அசோகனின் வழிவந்தவர் மோரியர் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் அடிக்கடிப் படையெடுத்துவந்து தமிழகப் பகுதிகளைத் தாக்கிக்கொண்டிருந்தனர். புதுப் புதுப் படையெடுப்புக்களைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே இருந்தனர். ஆனல் சோழப் பெரும்படைகளும், பிற தமிழகப் படைகளும் அப்படையெடுப்புக்களை எதிர்நின்று தாக்கி மோரியப் படைகளைச் சிதறடித்தன. இளஞ்சேட் சென்னி என்னும் சோழ அரசன் மோரியப் படைகளைத் தமிழக எல்லைப்பகுதியில் சிதறடித்ததோடமையாது, அவைகளைத் துளுவநாடு வரை துரத்தித்துரத்தியடித்தான். பின்னர் தொடர்ந்து சென்று மோரியரின் மூல இருப்பிடமாகிய பாழிக்கோட்டையை முற்றுகையிட்டு அதனை வென்று, அதனைத் தவிடுபொடியாக்கித் தரைமட்டமாக்கினன். சென்னி, பாழிக்கோட்டையை முற்றுகையிட்டு வென்றதன் காரணமாகத்தான் அவனுக்குச் செருப்பாழி எறிந்த இளஞ்சேட் சென்னி என்ற பெயர் ஏற்பட்டது. அவன் கி. மு. மூன்றுவது நூற்றுண்டில் வாழ்ந்தவன் என்று வரலாற்றுப் பேராசிரியர்கள் கூறுகின்றனர். இளஞ்சேட்சென்னி பாழிக் கோட்டையை வென்ற செய்தியைப்புகழ்ந்து கூற வந்த இடையன் சேந்தன் கொற்றன் என்னும் புலவர் அகநானூற்றுப் பாடல் ஒன்றில்,

"எழு உத்தி ணித்தோள் சோழர்
பெருமகன்
விளங்குபுகழ் நிறுத்த இளம்பெருஞ்
சென்னி
குடிக் கடனுகலின் குறைவினை
முடிமார்
செம்புறழ் புரிசை பாழிநூறி
வம்பவடுகர் பைந்தலைச் சவட்டிக்
கொன்றயானை...

[அகம்-375]

என்று குறிப்பிடுகிருர்.

இளஞ்சேட் சென்னிக்குப் பிறகு வடபுலம் வென்ற அரசர்களுள் குறிப்பாகவும், சிறப்பாகவும் தென்படுபவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்னும் சேர மன்னனுவான். இவன் வடநாடு புகுந்து பகையரசர் பலரையும் வென்று, இமயமலை வரையிற் சென்று தனது விற்கொடியின் அடையாளத்தை அந்தப் பெருமலையில் செதுக்கிவிட்டுத் திரும்பினன். நெடுஞ்சேரலாதன் இமயம் வரையில் சென்று தன் வீரத்தை நிலைநாட்டிவிட்டு அதனையே தன் ஆட்சிப் பரப்பின் எல்லையாக வைத்துவிட்டு மீண்ட காரணத்தால், 'இமயவரம்பன்' என்று அடைமொழி பெற்றுன்.

நெடியோனைப் போன்றே இமயவரம்பனும் இமயம்வரை வென்றவன் ஆதலின் அவனது புகழை நினைவூட்டி,

"ஏமாகிய சீர்கெழுவிழவின்
நெடியோன் அன்ன நல்லிசை
ஒடியா மைந்த"

என்று இவனை வாழ்த்துகிருர். 'பத்துப்பாட்டு' என்னும் நூலில், குமட்டூர்க் கண்ணனுர் என்ற புலவர்.

"ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியோடா யிடை
மன்மீக் கூறுநர் மறம்பதக் கடந்தே'

என்று குமரி முதல் இமயம்வரை நெடுஞ்சேரலாதன் ஆண்ட உண்மை புலப்படுத்தப்படுகிறது. இது நேரடியாட்சியாகவோ அல்லது எல்லா அரசர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட மேலுரிமையாட்சியாகவோ, அல்லது எங்கணும் நிகழ்த்தப்பெற்ற வெற்றி உலாவாகவோ இருக்கக்கூடும். இமயம்வரை சென்று வெற்றி கொண்ட தமிழ் வேந்தர்கள் பலர் இருந்தாலும் நெடுஞ்சேரலாதன் தான் 'இமயவரம்பன்' என்று தனித்து அழைக்கப்படுகிறுன். அந்தச் சிறப்பு இவனையே சாரும்.

இமயவரம்பனுக்குப் பின்னர் வடநாடுசென்று இமயமலையில் புலிக்கொடியை வெற்றியின் அடையாளமாகப் பொறித்துவிட்டு மீண்ட சோழ மன்னனுகத் தென்படுபவன் இரண்டாம் கரிகாலன் ஆவான்.

கரிகாலன் தன் வீரத்தையும், புகழையும் நிலைநாட்டவே வடநாடு நோக்கிப் படையெடுத்தான் என்று தெரிகிறது. இமயம் வரையில் விளங்கிய வடநாட்டு மன்னர்கள் பலரும் எதிர்த்துப் போரிட்டோ அல்லது போரிடாமலோ கரிகாலனுக்கு அடிபணிந்து காணிக்கை பல செலுத்தியிருக்கின்றனர். கரிகாலன் தென்னுட்டில் போரிடுவதற்கு வாய்ப்பு இல்லாமலிருந்ததாலும் தோள் தினவெடுத்ததாலுமே வடநாடு நோக்கிப் படையெடுத்தான் என்றும், இமயமலையின் நெற்றியிலும் (முன்புறத்திலும்), பிடரியிலும் (பின்புறத்திலும்) புலிக்கொடியைப் பொறித்தான் என்றும், தென்னுடு நோக்கித் திரும்பும் போது வச்சிரநாட்டு மன்னன் முத்துப்பந்தலையும், மகத வேந்தன் பட்டிமண்டபத்தையும், அவந்தி மன்னன் தோரணவாயிலையும் காணிக்கைப் பொருள்களாக அளித்தனர் என்றும் சிலப்பதிகாரத்தில் பெரும்புலவரான இளங்கோவடிகள் கூறுகிறுர்.

"இருநில மருங்கில் பொருநரைப் பெறுஅச்
செருவெங்காதலின் திருமாவளவன்...
புண்ணிய திசைமுகம் போக்கிய அன்னுள்...
இமையவர் உறையும் இமையப் பிடர்த்தலைக்
கொடுவரி ஒற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு
மாநீர் வேலி வச்சிரநாட்டுக்
கோன் இறைகொடுத்த கொற்றப் பந்தரும்
மகத நன்னுட்டு வாள்வாய்வேந்தன்
பகைப் புறத்துக்கொடுத்த பட்டி மண்டபமும்
அவந்திவேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந் தோங்குமரபின் தோரண வாயிலும்"

[சிலப்பதிகாரம்]

கரிகாலன் இமயமலையில் புலி பொறித்த செய்தியைக் கலிங்கத்துப்பரணி என்னும் நூலும் குறிப்பிடுகின்றது.

வடதிசை சென்று வென்று இமயத்தில் மீன்கொடியைப் பொறித்து மீண்ட பாண்டிய மன்னரில் தெளிவாக அறியப்படுபவன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் ஆவான். வடதிசைப் படையெடுப்பின் அவனை எதிர்த்த ஆரிய மன்னர்களைப் போரில் முறியடித்துப் புறமுதுகிட்டு ஓடச் செய்தான் என்பதை 'ஆரியப் படை கடந்த' என்ற அடைமொழிச் சொற்றொடரே இனிது விளக்கிக்காட்டும்.

"வட ஆரியர் படை கடந்து
தென் தமிழ்நாடு ஒருங்கு காணப்
புரை தீர் கற்பின் தேவி தன்னுடன்
அரைசு கட்டிலிற் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ் செழியன்"

என்று சிலப்பதிகாரம் மதுரைக் காண்டம் இறுதிக் கட்டுரை விளக்கிக்காட்டுகிறது.

ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனுக்குப்பின்னர் வடதிசைப் படையெடுத்துச் சென்ற மன்னர்களில் குறிப்பாகவும், சிறப்பாகவும் குறிப்பிடப்படவேண்டியவன் சேரன் செங்குட்டுவனுவான். இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் மூத்த மகனுவான். இவன் இருமுறை வடநாடு நோக்கிப் படையெடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

முதல் தடவை இவனது தாய் கங்கை வளங்காண விரும்பினுள் என்றும், அவளது ஆவலை நிறைவேற்ற, அவளை உடன் கூட்டிக்கொண்டு படையொடு வடநாடு சென்று, எதிர்த்த வடபுல மன்னர்களை முறியடித்துத், தாய்க்குக் கங்கையின் வளத்தைக்காட்டி, அதில் நீராடச் செய்தான் என்றும் சொல்லப்படுகின்றன. சேரன் செங்குட்டுவன் தனியொருவனுக நின்று எதிர்த்து வந்த பல அரசர்களையும் தோற்கடித்தான் என்ற செய்தியைச் சிலப்பதிகாரத்தில் மாடலன் கூற்றுக இளங்கோவடிகள் குறிப்பிடுகிறுர். சேரன் செங்குட்டுவன் போரில் தனியாக நின்று மாற்றரைக் கொன்று குவித்ததைக் கூற்றுவன் கண்ணிமை கொட்டாமல் பார்த்துக்

கொண்டிருந்தான் என்று உயர்வு நவிற்சியணி தோன்ற இளங்கோவடிகள் எடுத்துரைக்கிருர்.

"கங்கைப்பேர் யாற்றுக் கடும்புனல்
நீத்தம்
எங்கோ மகளை ஆட்டிய அந்நாள்
ஆரிய மன்னர் ஈரைந்நூற்று வர்க்கு
ஒரு நீயாகிய செருவெங்கோலம்
கண் விழித்துக் கண்டது
கருங்கட் கூற்றம்
[சிலப்: 15: 160-164]

இந்தப் போரில் சேரன் செங்குட்டுவனை எதிர்த்து வந்த ஆரிய அரசர்களோடு, கொங்கணரும், கலிங்கரும், கருநாடரும், பங்களரும், கங்கரும், கட்டியரும் சேர்ந்து கொண்டனர் என்றும், செங்குட்டுவன் நிகழ்த்திய யானைப்படைப் போர் கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது என்றும் சிலப்பதிகாரம் செப்புகிறது.

"கொங்கணர் கலிங்கர்
கொடுங்கரு நாடர்
பங்களர், கங்கர், பல்வேற் கட்டியர்
வட ஆரிய ரொடு வண்டமிழ்
மயக்கத்துன்
கடமலை வேட்டம் என் கட்புலம்
பிரியாது"
[சிலப்: 15: 156-159]

சேரன் செங்குட்டுவன் பின்னர் இரண்டாவது முறையாக வடநாடு நோக்கிப் படையெடுத்தான். இரண்டு விதக் காரணங்களுக்காக இப்படையெழுச்சி நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. ஒரு காரணம் கண்ணகிக்குச் சிலை எடுப்பதற்காகச் சென்ருன் என்றும், மற்ரெரு காரணம் தமிழரசரை இழித்துப் பழித்துப் பேசிய கனக விசயரை முறியடிக்க என்றும் சொல்லப்படுகின்றன. சேரன் செங்குட்டுவன் "இந்த வடநாட்டு ஆரிய அரசரை முறியடித்து, அவர்கள் முடித்தலை நெறிய கண்ணகி சிலைக்கான கல்லை ஏற்றிக் கொண்டு வருவேன். அப்படிச் செய்யாது போவேனேயாளுல், நான் செங்கோல் அரசனல்ல!" என்று வஞ்சினம் கூறி நால்வகைப் படைகளோடு வட புலம் நோக்கிப் புறப்பட்டான்.

அப்பொழுது வடநாட்டில் மகதப் பேரரசை ஆண்ட நூற்றுவர் கன்னர் என்போர், செங்குட்டுவனுககு அடங்கி வாழ்ந்த நண்பராய் இருந்து வந்தனர். சேரன் செங்குட்டுவன் படையெடுத்து வருகிருன் என்பதைக் கேள்வியுற்றவுடனேயே, நூற்றுவர் கன்னர் சஞ்சயன் என்னும் படைத்தலைவனுடன் நூறு ஆடல் நங்கையர், இருநூற்றெட்டுப் பாடகர், நூறு கழைக் கூத்தாடிகள், நூறு தேர், பதிணுயிரம் குதிரைகள், இருபதிணுயிரம் வண்டிகள், அணிமணிப் பரிசுகள் ஆகியவற்றை அனுப்பிவைத்து சேரனை எதிர் கொண்டழைத்தனர். பின்னர் நாவாய்ப் படைகளை ஆயத்தம் செய்து வைக்க, அவற்றின் உதவி கொண்டு சேரன் கங்கை யாற்றைக் கடந்து, வடப்பக்கமுள்ள உத்தரை நாட்டை அடைந்து குயிலாலுவம் என்னுமிடத்தில் கனக விசயரை எதிர்த்துப் போரிட்டான். கனகவிசயரின் பக்கம் வடநாட்டு மன்னர்கள் பலரும் சேர்ந்து கொண்டனர். கடும் போர் நடந்து தமிழ் மறவர்கள் புலியெனப்பாய்ந்து பெரும் போரிட்டனர். மாற்ருரின் படைகள் சிதறுண்டன. தேர்கள் நொருங்கின; யானைகள் வெருண்டோடின; குதிரைகள் வீழ்ந்தன; காலாட்படைகள் உறுப்புகள் அழிந்து சின்னுபின்னமாகிக்கிடந்தனர். குருதி ஆறு ஓடிற்று. செந்தூள் பறந்தது. இறுதியில் கனக விசயர் மாறுவேடம் புனைந்து தப்பி ஓட முயன்றனர். சேரனின் படையினர் அவர்களைத் துரத்திச் சென்று, பிடித்துக் கொண்டுவந்து, செங்குட்டுவன் முன்னுல் நிறுத்தினர். அவர்களிருவரும் விலங்கிடப்பட்டு காவலில் வைக்க அரசன் பணித்தான். சேரனின் கட்டளையை ஏற்று, அமைச்சன் வில்லவன் கோதையும், படைத்தலைவன் நீலனும் பெரும்படையுடன் இமயமலை சென்று கண்ணகி படிவம் அமைப்பதற்குக் கல் கொண்டு வர ஏகினர்.

இமயத்திலிருந்து செதுக்கி எடுக்கப்பட்ட கல் கனகவிசயர் தலையில் ஏற்றிக் கொண்டு வரப்பட்டுப், பின்னர் கங்கை நீரில் நீராட்டப் பெற்றுப் பிறகு அவர்கள் தலைகளின் மீதே தமிழகத்திற்குக் கொண்டுவரப்பட்டது. கனகவிசயர் கல் சுமந்து வரும் காட்சியைச் சோழனுக்கும், பாண்டியனுக்கும் காட்டிவிட்டுப் பின்னர், கல்லை வஞ்சி மாநகருக்குக்கொண்டுவந்து சேர்க்கும்படி சேரன் படைத்தலைவன் நீலனுக்குக் கட்டளையிட்டான். இறுதியில் வஞ்சிமாநகர் வந்து சேர்ந்த கல்லில் கண்ணகி படிவம் செதுக்கப்பட்டு, அச்சிலைக்குப் பின்னர் கோயில் எழுப்பப்பட்டது. சேரன் செங்குட்டுவனின் வடநாட்டுப் படையெடுப்பைக் கூறவந்த பதிற்றுப் பத்து,

"கடவுட் பத்தினிக் கற்கோள்
வேண்டிக்
கானவில் கானங் கணையிற் போகி
ஆரிய அண்ணலை வீட்டிப் பேரிசை

இன்பல் அருவிக் கங்கை மண்ணி
இனந்தெரி பல்ஆன் கன்றொடு
கொண்டு

[பதிற்றுப்பத்து: பதிகம் 4-8]

என்று குறிப்பிடுகிறது. வடபுலம் வென்ற தென் தமிழ் வேந்தர்களில் சேரன் செங்குட்டுவனின் வெற்றி மிகவும் குறிப்பிடத்தக்க புகழும், பெருமையும் கொண்ட வெற்றியாகும். தாயகத்தின் மானங் காத்திட செங்குட்டுவன் இட்ட பெரும் போர் என்றென்றும் அழியாப் புகழ படைத்ததாகும்.

பிற்காலத்தில், வரலாற்றுக் கண்ணுக்குத் தென்படுகிற அளவில் அமைந்த வடநாட்டுப் படையெடுப்பு, பரஞ்சோதியாரின் வாதாபிப் படையெடுப்பாகும். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வடநாட்டில் பெரும்பேரரசனாக விளங்கியவன் ஹர்ஷன் ஆவான். அவனைச் சாளுக்கிய மன்னனை இரண்டாவது புலிகேசி போரில் தோற்கடித்தான். அந்தப் புலிகேசி மன்னனின் தலைநகராக விளங்கிய வாதாபியின் மீது படையெடுத்து, அவனைத் தோற்கடித்து வெற்றி வாகை சூடினார் பரஞ்சோதியார். பரஞ்சோதியார் காஞ்சிபுரத்தை ஆண்ட நரசிம்மபல்லவனின் போர்ப்படை தலைவனாகத் விளங்கியவர். அவர் தலைமையின் கீழ் தான படை திரண்டு வாதாபி நகர் நோக்கிச் சென்றது. பரஞ்சோதியாரின் படை புலிகேசியைக் களத்திலே கொன்றது மட்டுமல்லாமல், வாதாபி நகரையே சூறையாடிவிட்டு, அணிமணிகளையும், அரும்பெரும் பொருள்களையும் கைப்பற்றிக் கொணர்ந்தது: வரலாற்றிலேயே வாதாபியின் அழிவு குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முக்கியமானதொரு பேரழிவாகும்.

இந்தப்படையெடுப்பைப் பற்றிக் கூறவந்த பெரிய புராண ஆசிரியர் சேக்கிழார்,

"மன்னவர்க்குத் தண்டுபோய்
வடபுலத்து வாதாபி
தொல் நகரம் துகளாகத்
துணைநெடுங்கை வரை உகைத்தும்
பன்மணி நிதிக்குவையும் பகட்டினமும்
பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே
இகல அரசன் முன் கொணர்ந்தார்

என்று குறிப்பிட்டுள்ளார்.

பரஞ்சோதியார் படை யெடுப்புக்குப் பிறகு தமிழகத்துக்குப் பெரும் புகழையும், பெருமையையுப் தேடித்தந்த வடதிசைப் படையெடுப்பு ராசேந்திர சோழன் மேற்கொண்ட படையெடுப்பாகும். தஞ்சையைஆண்ட இராசராசசோழனின் மகன் இராசேந்திர சோழன் வடக்கே கங்கை வரையிலும் சென்று வென்றும், கிழக்கே கடல் கடந்து கடாரம் கடந்து வென்றும், தெற்கே ஈழத் தீவை வென்றும், மேற்கே இலக்கத் தீவுகளை வென்றும் சோழப் பேரரசை அமைத்த பாங்கு தான் பெருமைக்கும் புகழுக்கும் உரியதாகும்.

இராசேந்திர சோழன் புதிய தலைநகரை உருவாக்கக் கங்கையிலிருந்து நீரைக் கொண்டுவர விரும்பி எடுத்த படைபெடுப்பே வடதிசைப் படைபெழுச்சி என்று சொல்லப்படுகிறது. வடதிசைப் படையெடுப்புக்களை கி. பி. 1022 1023 ஆண்டுகளிலும், கிழ்த்திசையில் கடல் கடந்த படையெடுப்பை கி. பி. 1025 ஆண்டிலும் நிறைவேற்றினன் என்று வரலாறு கூறுகிறது. இராசேச்திரன், வடதிசையில், பெரும் படை திரட்டிச்சென்று சக்கரக் கோட்டப்போர், ஆதி நகரப்போர், தண்ட புத்திப் போர், தக்கண வாடப்போர், வங்காள தேசப்போர், உத்திர லாடப்போர் போன்ற பல போர்களை நடத்தி வெற்றிகொண்டு, திரும்பி வந்து கங்கை கொண்ட சோழபுரத்தை உருவாக்கினன். வெற்றித் தூண் ஒன்றை அந்நகரில் நிலைநாட்டினன். கங்கையிலிருந்து கொண்டுவந்த நீரால் அந்தத் தூணை நீராட்டினன். சோழ கங்கம் என்ற ஏரி ஒன்றை வெட்டி அதில் கங்கை நீரை ஊற்றினன். சோழன் இராசேந்திரன் கங்கைப் பகுதிகளை வென்ற காரணத்தால் கங்கை கொண்டான் என்ற பெயரையும், கடாரத்தை வென்ற காரணத்தால் கடாரங் கொண்டான் என்ற பெயரையும் பெற்றான்.

இவ்வாருக வடபுலம் வென்ற தென் தமிழ் வேந்தர்களின் வென்றிச் சிறப்புக்கள் புகழ்மிக்கவை; பெருமை கொண்டவை; பெயர் பெற்றவை! அத்தகைய வீர வரலாறுகள் வீழ்ச்சியுற்றுக் கிடக்கும் இன்றைய தென்புலத்திற்கு எழுச்சியூட்டுமாக! கொற்றம் பயக்குமாக!

வள்ளுவர் கண்ட குடியாட்சி முறை

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார். எம்.ஏ., எல்.டி.

குடியாட்சி, குடியரசு என்ற சொற்கள் இன்று அரசனில்லாத ஆட்சியைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது! சிறப்பாக குடிமரபாக வரும் ஆட்சியை குடியாட்சி என்றும், அது இல்லாத ஆட்சியையே குடியாட்சி குடியரசு என்றும் இன்று நாம் கொள்கிறோம்.

ஆனால் பிரிட்டனில் இன்று நடைபெறும் ஆட்சி குடியாட்சி, என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள். குடிமரபான மன்னர் உடைய குடியாட்சியாகவே அது நிலவுகிறது.

திருவள்ளுவர் கண்ட ஆட்சி குடியாட்சிஎன்பதிலும் ஐயமேற்பட வழியில்லை. ஆனால் அது பிரிட்டனைப்போன்ற அரசனைக்கொண்ட ஆட்சியையே. இவ்வகையில் குடியரசு என்ற தொடரில் இன்றும் 'அரசு' என்ற சொல்லும், 'குடியரசு' 'குடியாட்சி' என்ற இரண்டு தொடர்களிலுமே குடிமரபைக் குறித்த 'குடி' என்ற சொலலும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

வள்ளுவர் கண்ட குடியாட்சி எத்தகையது, பிரிட்டனில் நடைபெறும் குடியாட்சியுடன் அதற்குரிய ஒற்றுமை வேற்றுமைகள் என்ன என்று காண்போம்.

வள்ளுவரின் பொருட்பால் எதுபற்றிக் கூற எழுந்தது? ஒரு சாரார் அது பொருள் அல்லது பணம் பற்றிக்கூற வந்ததென்பர். நாலடியார் காலத்திலேயே இப்பொருள் இருந்ததென்னலாம். பொருளால் அறமும் இன்பமும் கூடுவதாதலால் நடுவணதாகிய அதுவே மூன்றில் சிறந்ததென்று நாலடிப் பாடல் இதனைக் காட்டுகிறது. இன்னும் பலர் இக்கருத்தைக் கொண்டுள்ளனர். சமஸ்கிருதத்தில் சாணக்கியரின் 'அர்த்த சாஸ்திரம்' இக்கருத்து நிலவிய காலத்தில் எழுந்தது. அவர் பணம் ஈட்டுதலையே அரசியலின் முதற்கடமையாக அந்நூலில் குறித்துள்ளார்.

பொருட்பால் 'அரசியல்' கூறுவது என்பர் மற்றொரு சாரார். பொருள்பற்றி அதாவது பணம்பற்றி வள்ளுவர் மிகுதி பேசவில்லை. 'பொருள் செயல்வகை' என்ற அதிகாரம் ஒன்றுதான் அதுகூறும். சமஸ்கிருதத்தில் பர்த்ருஹரியின் நீதி சதகம் இயற்றப்பட்ட காலத்தில் இக்கருத்துப் பரவியிருத்தல் வேண்டும். அர்த்தம் (பணம்) என்ற சொல்லினிடமாக நீதி (அரசியல்) என்ற சொல்லை அவர் பயன்படுத்தியது இதனை எடுத்துக்காட்டும்.

இருபொருளுமே வள்ளுவர் பொருட்பாலுக்கு முற்றிலும் போதாதவை. 'படைகுடி கூழமைச்சு நட்பரண்' என்ற ஆறு அரசியல் உறுப்புக்களையே வள்ளுவர் கூறுகிறார். சமஸ்கிருத ஏடுகளைப்போல் அரசனை உறுப்புக்களில் வேருக்காமல் உறுப்புடைய முதலாக்குகிறார். அத்துடன் அமையவில்லை. குடியியல் என்ற ஒரு இயல் இணைத்துள்ளார். தவிர கல்வி பண்புடைமை முதலிய அதிகாரங்கள் உண்மையில் சமஸ்கிருத முறைப்படி அரசியலுக்கு புறம்பானது. உரையாசிரியர்கள் இதற்குக் கூறும் விளக்கங்கள் பொருத்திக் காட்டுவனவே தவிர பொருந்துவனவல்ல.

வள்ளுவர் பொருட்பால், அரசியலைக் குறுகிய பொருளில் கூறுவதன்று. அறத்தோடு கூடிய அரசியல், மக்கள் இன்பத்தைக் குறிக்கோளாகக் கொண்ட அரசியல் கூறுவது. ஆகவேதான் அது அரசியலை (Politics) மட்டுமன்றி அதைக் குறிக்கோள் வழி இயக்கும் அரசனைப்பற்றியும் (Statesmanship) அதனால் பயன்பெறும் குடிமக்களைப் பற்றியும், குடியாட்சியில் அவர்கள் தகுதிபற்றியும், அரசியலின் அடிப்படையான சமுதாய இயல் (Sociology)

பற்றியும் இவற்றின் தொடர்புகள் பற்றியும் கூறியுள்ளார்.

வள்ளுவர் குடியாட்சி வடவர்கண்ட முடியாட்சி அரசியலுமல்ல, மேலையுலகம் கண்ட குடியாட்சி (Democracy) யும் அதனை முழு அளவில் குறிக்காது! அது இரண்டும் கடந்த ஒன்று. சமதருமம் பொதுஉடைமை ஆகிய இக்காலப் புதுக் குறிக்கோள்களையும் உட்கொண்டது. இவற்றையும் தாண்டித் தற்கால நலப்பண்பாட்சியின் (Welfare State) குறிக்கோளை உட்கொண்டது. அதுமட்டுமன்று. வடவுலகோ, மேலையுலகோ சமதரும உலகோ காணாத அடிப்படை அறிவுத் தத்துவங்களை அது உள்ளடக்கியது என்பதை உலகம் இனி காண இருக்கிறது.

குடியாட்சி பற்றி எழுதிய உலகப் பேரறிஞர் இருவர். இவர்களில் கிரேக்க அறிஞர் பிளேட்டோ கண்ட 'குடியரசு' உண்மையில் வல்லார் வல்லாட்சியே! ஆனால் சிறியோரை அடக்கி ஆளும் பெரியோர்களை எவ்வாறு கண்டுணர்வது, அவர்களை ஆட்சியில் அமர்த்திக் கட்டுப்படுத்துவதயார்? எப்படிக்கட்டுப்படுத்துவது என்ற கேள்விகளை அவரே கேட்கிறார். 'கடவுள் செயலால் நேரவேண்டியது இது' என்று கூறி அமைகிறார்.

இரண்டாவது அறிஞர் ரூசோ. சமுதாய மக்கள் ஒப்பந்தப்படி வந்தவர்கள் ஆட்சியாளர்கள். அவர்கள் மக்கள் நலத்தை மதிக்காவிட்டால் புரட்சி செய்யும்உரிமைமக்களுக்குஉண்டுஎன்று கூறியமைகிறார். ஆட்சியாளரை யார் எவ்வாறு தேர்வது தகுதியற்ற ஆட்சியாளர்களைப் புரட்சியால்ஒழிக்கமக்கள்ஒன்றுபடுவதுஎப்படிஎவ்வாறு புரட்சி செய்வது என்று அவர் கூறாமல் விட்டுவிட்டார்.

அறிஞர் கருத்தைவிடுத்து. நடைமுறையை ஏற்றுக்கொண்டால், வரலாற்றில் குடியாட்சி வகைகளை ஏறத்தாழ இருவகைக்குள் அடக்கலாம்.

கிரேக்க குடியாட்சியில் மக்கள் கூடி மன்ற மூலம் ஆட்சியைத் தாமே இயக்கினர். ஆனால் இது கும்பலாட்சியேதவிர வேறன்று. நடைமுறையில் மாறி மாறிக் கொள்ளையரையே இது ஆளவிட்டது. இறுதியில் அலெக்ஸாண்டரின் முடியாட்சியில் இக்குடியாட்சிகள் சென்று அழிவுற்றன.

மேலையுலகக் குடியாட்சியில் தேர்தல்முறை ஒரு புதுமுறையில் பயன்படுத்தப்படுகிறது. பண்டைக்கால மொழியுரிமைகள் ஆட்சியாளர் சட்டங்களை ஆதரிக்கவும் எதிர்க்கவும் மட்டுமே பயன்பட்டன. ஆட்சியாளரை (பேராட்களை)த் தேர்ந்தெடுக்க பெரும்பாலும் பயன்பட்டதில்லை. ஆயினும் பல நாடுகளில் அரசனைத் தேர்ந்தெடுக்கவும் கீழையுலகில் குறிப்பிட்ட சில குழுக்களின் பேராட்களைத் தேர்ந்தெடுக்கவும் பயன்பட்டதுண்டு. ஆனால் மொழியுரிமை இங்கே பெரும்பான்மைக்கே உரிமை தந்தது என்பது தெளிவு. இது தலைசிறந்த தேர்வு முறையாகாது. ஏனெனில் பல்லோர் ஆட்சிக்கும் வல்லோர் ஆட்சிக்கும் வேறுபாடு பெரிதும் கிடையாது. பல்லோரும் வல்லோரும் நல்லோராயிருந்தால் இருவழியிலும் நல்லாட்சி உண்டு. அல்லது இரண்டும் தீங்காகவோ அறிஞர் கருதியபடி 'கடவுள் கருணை' எதிர்பார்த்த முறையாகவோ மட்டுமே இருக்க முடியும்.

வள்ளுவர் குடியாட்சிமுறை பிரிட்டனில் குடியாட்சி முறைக்குப் பெரிதும் ஒப்புமை உடையது என்று மேலே கண்டோம். ஆனால் பிரிட்டிஷ் ஆட்சி முறையில் தெளிவாகக் காணப்படாத ஒரு கூறு அதில் உண்டு; அரசியலை வள்ளுவர் அறத்தின் அடிப்படையில் அமைத்தார். இந்த 'அறம்' மதவாதிகளோ சமஸ்கிருதவாணரோ கருதும் 'கற்பனை' அறம் அன்று. அது உண்மையில் சமுதாய இயலை அடிப்படையாகக் கொண்டது.

'குடியியல்' காட்டும் பண்பு இதுவே.

வள்ளுவர் அரசன் 'கோ' அல்லது 'கோன்' அதாவது குடித்தலைவன்! அவனே வலிமையால் வளம் பெருக்கிய வேந்தன். அதாவது முடியரசன். அவனே மன்னன்: (மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தலைவனானவன்.) பெயரளவில் ஆட்சியுரிமை முழுதும் அவனிடமே நின்றன. இன்றைய அரசியல் மொழியில் அவன் செயலாட்சித் துறைத்தலைவன். (Head of Executive); வெறும் அமைச்சனும் கூட அவனை அணுகாது அகலாது அஞ்சியே நடக்க வேண்டும். அரசனின் வல்லாட்சிக் கூறாக வள்ளுவர் இதனைச் சந்திக்கிறார்.

ஆட்சியாளனைத் தேர்வது யார், எப்படி, இதற்கு வள்ளுவர் விடை எளிது. இயல்பான குடித்தலைவன், திறமையினால் உயர்ந்தவன், மக்கள் விருப்பத்தால் வலுவடைந்தவனே அவன்.

அரசன் வல்லாட்சியாளனானாலும் மனம் போன ஆட்சியாளனல்ல. செவிகைப்ப இடித்துக்கூறும் கடமையை வள்ளுவர் அமைச்சருக்கு அளித்துள்ளார். அமைச்சரைத் தூக்கிடவோ தள்ளவோ அரசனுக்கு ஆற்றலுண்டு. ஆயினும் இடித்துரைக்கும் உரிமையை அமைச்சனுக்கும், இடித்துரைப்பவரை விரும்பி ஏற்றாளும் கட

மையை அரசனுக்கும் வள்ளுவர் வகுத்துள்ளார்.

அரசியலில் குடியாட்சியில்கூட உரிமைகளும் கடமைகளும் வெற்றுரையாக அறிவுரையாகக் கூறப்பட்டால் பயனில்லை. அவற்றின் நிறைவேற்றத்துக்கு (Final sanction) வழிவகை வேண்டும்.

பிளேட்டோவும் ரூசோவும் சென்று முட்டிக்கொண்ட கூறு இதுவே.

தேர்தல் முறையும் புரட்சி முறையும் மேலை அரசியலார் கண்ட இதற்குரிய விடைகள். ஆனால் தேர்தல் முறை திருவுளச்சீட்டு முறையை விடச் சிறந்ததன்று. அழித்தழித்தாக்கினால் நாளடைவில் நலம் விளையும், மக்கள் பொறுப்புணர்ந்து நல்லாட்சி அமைத்துக்கொள்வர் என்று மேலைக் குடியாட்சி கருதுகிறது.

ஆனால் குடியாட்சி என்றும் அழித்தழித்தாக்கிடும் ஆட்சியே என்று உலகம் கண்டு வருகிறது. குடியாட்சி முறையை எந்த நேரத்திலும் செல்வர், திறனுடையோர், வல்லார் கைப்பற்றி மக்களை அடக்கியோ வசப்படுத்தியோ ஏய்த்து விடமுடியும்.

புரட்சியும் ஒரு அரும்பெரு முறையன்று. பழைய பேயை அரும்பாடுபட்டு ஒழித்தபின் பழைய பேயினும் புதியபேய் கொடிதெனக் கண்டால் மக்கள் யாது செய்வது?

புரட்சியும் அழித்தொழித் தாக்கும் முறையன்றி ஒரு சிறந்த ஆக்கமுறை ஆகாது.

இவ்வுண்மைகளைக் கண்டவர் வள்ளுவர். வல்லோர், பல்லோர், தேர்தல், புரட்சி ஆகியவற்றை அவரும் கருத்தில் கொண்டிருந்தார்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்ற வள்ளுவர் புரட்சி தத்துவம் தேர்தல் முறை கடாத புரட்சி முறைபற்றிய அவர் எண்ணத்தை நிழலிட்டுக் காட்டும். ஆனால் குடியாட்சி கெட்ட இடத்தில் அதன் அழிவுக்குரிய இயல்பான நிலைகளாகவே இவற்றை அவர் குறித்தார். குடியாட்சியின் ஆக்க ஒழுங்குமுறை இவையல்ல.

இன்றைய நம் குடியாட்சிக்கு நோக்கமில்லை ஆனால் வள்ளுவர் குடியாட்சிக்கு சமதருமவாதிகள், பொதுவுடைமைவாதிகள், நலஆட்சிவாதிகள், ஒத்த ஒரு நோக்கம் உண்டு. அந்நோக்கம மக்கள் இன்பம், இன்பப் பெருக்கம் மேன்மேலும் இன்ப ஆர்வம் பெருக்கிய பொங்கல்வளவளர்ச்சி ஆகியவையேயாகும்.

வள்ளுவர் குடியாட்சியில் ஆட்சி நடைமுறைக்கும், அமிழ்தாக்கும் சிந்தனைத்துக்கும் உரிய நிலவர (Permanant Sanction) ஒழுங்கு முறைகள் உண்டு. ஏனெனில இக்கால ஆட்சி முறைகளைப்போல் வள்ளுவர் ஆட்சிமுறை மேலிருந்து கீழே உரிமைகள்வாய்ப்பெற்ற ஆட்சி (Downward course of Rights and Regulations) அன்று. அது குடும்பம சமுதாயம் அரசு எனக் கீழிருந்து மேல்நோக்கிச் செல்லும் ஆட்சிமுறை (Upward course of Rights and Regulations) ஆகும். நம் கால அரசியல் மொழியல் கூறுவதானால்வள்ளுவர் அரசியல் சமுதாய இயல்பின்மீது எழுப்பப்பெற்றது. நம்கால அரசியல் சமுதாயத்தின் அடிப்படையாக வளர்ந்து வருவது.

வள்ளுவர் அரசியல் தனிமனித உரிமை, தனிமனித நலங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டது. தற்கால குடியாட்சிச் சட்டங்கள் இன்னும் அம்முறையில் அமைக்கப்படவில்லை. தவிரப் பல்லோர் தேர்ந்தெடுக்கும் சில்லோர் நலங்களே செயல்முறையில் முனைப்பாக வளர்தல் இயற்கை! இதை மாற்றக் குடியாட்சியில் எத்தகைய துறையும் இல்லை. ஆனால் வள்ளுவர் ஆட்சிமுறையில் இதற்குப்பல காப்புறுதிகள் உண்டு.

முதலாவது வள்ளுவர் அரசே உண்மைக் குடியரசு. ஏனெனில் அரசன் குடிமரபில் வந்து மக்கள் ஆதரவும் பெற்றவன். இதுமட்டுமன்று. அவன் குடிமக்களிடையே பண்டைய ஆட்சி வகுப்பாகிய நாட்டில், நாடு என்பது தொடர்புடைய குடிகளே—அதாவது நாடு முழுவதும் கொள்வினை கொடுப்பினையால் பிணைக்கப்பட்ட ஒரு பெருங் குடும்பம். அரசன் ஒரு பெருங் குடும்பத் தலைவனே. குடிப்பாசமும் குருதிப்பாசமும் இனப்பாசமும் அவன் புகழ் விருப்புடன் போட்டியிடுகின்றன. அவன் தன்னலத்தை இவை தடை செய்கின்றன.

இரண்டாவது அறம் ஆட்சிமுறைமை; இன்பம் ஆட்சி நோக்கம். மேலை அரசியலிலோ வடவர் அரசியலிலோ இதன் நிழற்கோட்டைக் கூடக் காணமுடியாது.

இறுதியாக அரசன் அமைச்சர்களை முழுதும் தன்மனம்போல ஆக்கியழித்துவிட முடியாது. அமைச்சர்களை அவன் பெரியார் 'அவை' அல்லது ஐம்பெருங்குழு,எண்பேராயங்களிலிருந்தே தேர்ந்தெடுக்கிறான். அமைச்சனை அரசன் ஒறுக்க முடியும். ஆனால் பெரியார் அவையின்

ஆதரவின்றி அவன் அடுத்த அமைச்சனைத் தேர்ந்தெடுக்க முடியாது. ஆளவும் முடியாது. ஆட்சியில் பெயரளவில் அரசனுக்குள்ள செயலுரிமை இந்தப் பெரியார் ஆதரவின் வலுவன்றி வேறல்ல.

அரசன் அமைச்சனை அமர்த்தலாம், நீக்கலாம் தண்டிக்கலாம். ஆனால் பெரியார் அவையிலிருந்தே தேர்ந்தெடுக்கவேண்டும். அந்தப் பெரியாரையோ அவன் அமர்த்த முடியாது, ஆக்கமுடியாது, அமைக்க முடியாது.

பெரியாரைத் தேர்ந்தெடுப்பவர்கள் சான்றோர்கள்.

சான்றோர்களைத் தேர்ந்து கூறுபவர்கள் பண்பாளர்.

பண்பாளர்களை வகுத்துரைப்பவர்கள் நற்குடி மக்கள், குடிமையின் பெருமையும் நலனும் உடையவர்கள்.

குடிப்பெருமையைச் சமுதாயம் மட்டுமல்ல, இனமே வகுத்தமைக்கிறது. ஏனெனில் அது குடிமரபாக சமுதாயத்தின் வழிவழித் தேர்வு.

குடிப்பெருமையின் அடிப்படை, கற்பு, களவு, வீரம், மானம் ஆகிய தமிழ் ஒழுக்கப் பண்புகள் ஆகும்

வள்ளுவரின் குடியியல் இங்ஙனம் உலகில் எந்த நீதி நூலிலும், அரசியல் நூலிலும் கூறாத அடிப்படைக் குடியாட்சிப் பண்புகளின் பெரு விளக்கம்.

குடிமை, பண்புடைமை, சான்றாண்மை ஆகியவற்றை மற்ற நீதிநூல்கள் கூறும் திட்ப நுட்ப வரையறைகளற்ற பசப்புரைகளாகவே எவரும் கருதி வருகின்றனர். வள்ளுவர் நூலின் தனிப்பெருஞ் சிறப்புகளில் பல இவற்றில் விளக்கியுள்ளவை ஆகும்.

வள்ளுவர் பொருள், குடிமை, சமுதாயம் ஆகியவற்றின்மீது அமைந்த அரசியற்கட்டமைப்பு ஆகும். அதில் அரசன் ஒரு தலைமுறைக்குரிய ஒரு தனி மனிதன் அல்லன், தலைமுறை தலைமுறையாக நின்றநில் வளர்ந்துவரும் பண்பாட்டின் சின்னமாக இயங்குபவன் அவன். அப்பண்புகளே அவனைக் கட்டுப்படுத்தி வளர்த்து உருவாக்குவன.

இத்தகைய முழுநிறை குடியாட்சி ஒன்றினால் மட்டுமே 'நாடாவளத்தன' ஆகிய நாடு அமைய முடியும். அது ஒரு நாட்டைக்கெடுத்து ஒருநாடு இன்று பெரும் வளம் அன்று உலக அடிப்படையில் அமைந்த வள்ளுவர் முப்பால் நாட்டு வளத்தையும் உலக வளத்தின் ஊற்றாக வேண்டுவது ஆகும்.

வள்ளுவரின் அரசியல் குறிக்கோள், அவரது இன்பக் குறிக்கோள், வாழ்க்கைக் குறிக்கோள், கடவுட் குறிக்கோள் ஆகியவற்றைப் போலவே மேலையுலகும் கீழையுலகும் காணாத உயர்காட்சிகள். உண்மையில் உலகம் காணா உயர்பண்பியல் வாழ்வினை ஒட்டியிருந்த சங்க காலத் தமிழர்களின் கனவுகள்கூட வள்ளுவர் குறிக்கோளின் காலடியைச் சென்றெட்டியதில்லை நாமோ மேலை கீழையலகமோ அதைக் கருத முடியாததில் வியப்பில்லை.

தமிழ் வழிகண்டு உலகம் சிறக்க

வள்ளுவவழிகண்டு தமிழ் சிறக்க

வள்ளுவ வழியை உலகுகாணும் நாள் வரின், உலகத்துக்குக் கடவுளைக் காட்டிய கடவுளாக வள்ளுவர் விளங்கத்தக்கவர் ஆவர்.

★

விடியற்காலை நான்கு மணி இருக்கும். ஆழ்ந்த தூக்கத்திலிருந்த புரொபசரை டெலிபோன் மணியின் ஒலி எழுப்பிவிட்டது. எழுந்து இருட்டில் தடுமாறிய வண்ணம் சென்று டெலிபோனை எடுத்தார்.

"எதிர்வீட்டு மாடியில் குடியிருப்பவர் பேசுகிறேன், உங்கள் நாய் சதா குறைத்துக் கொண்டுஇருக்கிறது, எங்கள் தூக்கம் கெடுகிறது, ஏதாவது வழி செய்யுங்கள்."

சொன்னதற்கு நன்றி தெரிவித்துவிட்டு சென்று படுத்தார்.

மறுநாள் விடியற்காலை நான்கு மணிக்கு எதிர்வீட்டில் டெலிபோன் மணியடித்தது, அவ் வீட்டுக்காரர் டெலிபோனை எடுத்தார்,

"நான் எதிர்வீட்டில் கீழே குடியிருப்பவன் பேசுகிறேன். என்னிடம் நாய் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

புதுச்சொற்கள் அமைப்பு

டாக்டர் அ. சிதம்பரநாதன் எம்.ஏ., எம்.எல்.சி.

"பறக்குங் குண்டு" என்பது போர்க் காலத்தில் தோன்றிய புதுச்சொல். "வான்மண்டலச் செலவு" அல்லது "விண்விழிச் செலவு" என ஒரு புதுச் சொற்றொடரைப் படைத்து விட்டோம். 'பஞ்சப்படி' என்பது பெரு வழக்காக வழங்குகிறது. Dearness Allowance என்பதை எப்படியோ இப்படி மொழிபெயர்த்து விட்டனர். ஆயினும் அதனை இனி 'அருமைப் பாட்டுப்படி' என மாற்றப் போவதில்லை. 'பஞ்சப்படி' என்னும் புதுச்சொல் போர் நமக்குக் கொடுத்த கொடை. அச்சு நாடு. நேசநாடு செஞ்சட்டை இவை Axis, Allies, Red Shirts, என்றவற்றின் நேர்மொழிபெயர்ப்பான புதுச் சொற்கள். விஷப்புகை, முகமூடி, இருட்டடிப்பு ஆகியவை Poison gas, Gas Mask Black-out ஆகியவற்றின் மொழி பெயர்ப்பு. தேசியப்போர் முன்னணி, சின்ன சேமிப்புத்திட்டம்முதலியவை இப்போரினால் நமக்குக் கிடைத்த பேறுகள். இவையெல்லாம் ஆங்கிலச் சொற்கள் தமிழிலே பெயர்க்கப்பட்டமையால் தோன்றிய புதுச்சொற்கள்.

இங்ஙனமே அரசியலில் சில புதுச்சொற்கள் தோன்றியுள. பாகிஸ்தானம், திராவிடஸ்தானம், ஹிந்துஸ்தானம், சமஷ்டி, குடியேற்றநாட்டு அந்தஸ்து முதலியவை இவ்வகையைச் சேர்ந்தவை.

சமுதாயத்துறையில் Scout என்பது சாரணர் என்றும், Exploitation என்பது சுரண்டல் என்றும் வழங்குகின்றன.

இவையன்றி ஆங்கிலத்திலிருந்து நேரே சேர்மன், முனிசிபாலிட்டி, கலெக்டர், போலீஸ், ரயில், கோர்ட்டு, ஜட்ஜு, மேயர், கமிஷனர், மோட்டார், சைக்கிள், போட்டோ முதலான பல்வேறு சொற்கள் வந்து வழங்குகின்றன; இவற்றைத் தமிழில் மொழி பெயர்ப்பதில் சோம்பல் உள்ளவர்கள், கேட்ட வடிவிலேயேபெரும்பாலும் வழங்கிவருகிறார்கள். இவற்றைத் தமிழ்மொழியில் ஆக்கமுடியாது என்பாரைக் காணின் கவிஞர் பாரதியார் போன்றோர் 'தாயைக் கொன்றிடல் போன்று இவ்வார்த்தை சொல்லவேண்டா' என்பர். முனிசிபாலிடி என்பதை நகராண்மைக் கழகம் என்பது குற்றமா? சேர்மன் தலைவர்தாமே? போலீஸ்மென் நகர்க்காவலர், ஊர்க்காவலர் தாமே? நீதிபதி, நீதிமன்றம் என்று எழுதுவதை விடுத்து ஜட்ஜு, கோர்ட்டு என எழுதத்தான் வேண்டுமா? ஒரு கால் பேசும்பொழுதுவேண்டுமானால் சொற்களை ஆங்கில வடிவிலே தமிழில் வழங்கிவிடலாம். ஆனால் எழுதும்பொழுது நேரம் இருப்பதால், பேசுவதுபோலவே எழுத்திலும் ஆங்கிலச் சொற்களை மிகுதியாகக் கலந்து எழுதுதல் தாய்மொழிக்கு இழைக்கும் பிழையாகும். ஒருவன் கோர்ட்டு, போலீஸ் என்றே எழுதிக்கொண்டு போவானானால் தமிழ்சொற்களாகிய முறைமன்றம் ஊர்க்காவல் ஆகியவை மறைந்துபோய்விடும்.

இவ்வாறு கூறுவதால் ஆங்கிலச் சொற்களைத் தமிழினின்று அறவே அகற்றவேண்டுமென்று கூறுவதாக நினைக்கவேண்டாம். இன்றியமையாத இடங்களில் வழங்கும் பயிற்சி அதிகமாகிவிட்ட சொற்களை ஆளுவது குற்றம் ஆகாது. எடுத்துக்காட்டாக மோட்டார், ரயில். சைக்கிள், பேனா, பாங்கி ஆகிய சொற்களை அப்படியே ஆளுவதாற் பெரிய குற்றம் வாராது. அவை தமிழேபோல் அமைந்து தமிழ்மொழியிலே இக்காலத்திற் சேர்ந்து கலந்துவிட்டன. அவற்றைத் தானியக்கி, பொறியியக்கி, ஈருருளி, மை எழுதுகோல், பண்டாரம் முதலிய சொற்களைக்கொண்டு அப்புறப்படுத்த முயலுவது கடினமாகும். இன்னும் ஈரங்கி என்பது Hearing என்பதின் திரிபு எனச் சிலரே அறிவர். உயில என்பது ஆங்கில Will என்பதின் திரிபானாலும் விளாந்தர் என்பது Lantern என்பதன் திரிபானாலும் தமிழோடு தமிழேபோல் மயங்கி இணைந்துவிட்டன. காங்கிரஸ் என்பது லத்தீனிலிருந்து ஆங்கிலம் வழியாக வந்த சொல் என்று எவராவது சிந்தித்திருக்கிறாரா? இந்தியாவுக்கே உரிய சொல்போல் மதித்து ஆளுகின்றனர். இச்சொற்களை இனி நாட்டிலிருந்து அகற்றுதல் எளிதான செயலன்று.

சொற்களைப் பண்டைக் காலத்திலேயே புதியனவாகப் படைத்தார்கள் என்று சொல்லக்

கூடும். ஆனால் நாம் இக்காலத்தில் சொற்களை அந்த முறையில் படைப்பதில்லை. நாம் செய்வதெல்லாம் முன்னரே அறிந்துள்ள சொற்களின் கூறுகளை மாற்றியும், திருத்தியும், புதுக்கியும் அமைக்கிறோம் என்பதே. எனவே புதுச்சொற்கள் இக்காலத்தில் படைக்கப்படுதல் இல்லை, அமைக்கப்படுகின்றன. புல்வாய் என்பது மானின் பெயர். புல் என்ற சொல்லையும் வாய் என்ற சொல்லையும் சேர்த்து, புல்லைவாயின்கண் உடையதாகிய விலங்கு எனக் கருதிப் 'புல்வாய்' என்கிறோம். ஆயினும், புல்வாய் என்ற நிலையில் புல், வாய் என்ற இருவேறு பொருள்களைப்பற்றிய எண்ணமே உண்டாவதில்லை. இரண்டு சொற்களும் பிளவுபடாமல் நின்று சேர்ந்து ஒலித்து, 'மான்' என்னும் ஒரு பொருளையே சுட்டுகின்றன. இவ்வாறுதான் முன்னரேயுள்ள சொற்கள், சொற்களின் கூறுகளாகிய இடைநிலைகள், விகுதிகள் இவற்றைக்கொண்டு மொழிகள் புதுச்சொற்கள் அமைத்துக்கொள்கின்றன. அவ்வகையில்தான் தமிழ் மொழியும் தன் விகுதி முதலானவற்றை வெவ்வேறு புதுச்சொல்லுண்டாக்கப் பயன்படுத்திக் கொள்கிறது. எடுத்துக்காட்டாக புரட்சி, புரட்டு, உருட்டு, உருளை முதலான சொற்களைக் கொள்ளலாம்.

பழஞ்சொற்கள் மெலிந்து தேய்ந்து உரமின்றிப் போகும் தறுவாயில் அவற்றிற்குப் பதில் புதுச்சொற்கள் தோன்றுகின்றன. அப்படித் தோன்றும் புதுச்சொற்கள் பண்டை வடிவின் திரிபுகளாகப் பெரும்பாலும் இருத்தல் இயல்பே இவ்வழியே ஓரெழுத்தொரு மொழிகள் வேறு எழுத்துப் பெருக்கால், வாயினால் உச்சரிக்கக் காணாது வழக்கு வீழ்ந்துபோகின்றன. வழக்கில் இருக்கவேண்டுமானால் ஏதாவது எழுத்துச் சாரியை சேர்த்து வழங்கவேண்டும். அவ்வாறு பசுவைக் குறிக்கும் ஆ, விலங்கை குறிக்கும் மா, அரசனைக் குறிக்கும் கோ என்னும் சொற்கள், ஆன், மான், கோன் எனப் புதுச்சொற்களாக மாறினதால்தான் இன்றும் வழங்குகின்றன. அல்லாக்கால், இடபம் என்னும் பொருளில் வரும் சே, அம்பினைக் குறிக்கும் ஏ, கோழையைக் குறிக்கும் ஐ முதலிய சொற்கள் வழக்கற்றுப் போயினவாறேபோல, ஆ, மா, கோ என்பனவும் வழக்கினின்று வீழ்ந்திருக்கும்.

நாள் ஏற ஏற, ஒரு மொழி குறித்த பொருளைப்பற்றிய அறிவுவளர்தலுண்டு. அதனாலன்றே, நிறம் ஐந்து என்று நினைத்துப் பச்சை சிகப்பு, வெள்ளை, நீலம், மஞ்சள் என்ற அளவிலே நின்றவர்கள் கிச்சிலி, ஊதா, அவுரி என்று நிறப் பெயர் குறிக்கும் சொற்களைப் புதுவதாக உண்டாக்கிக் கொண்டார்கள். ஆனாலும் மூக்கினால் முகரும் மணத்திற்கு மாத்திரம் பல்வேறு பெயரைப் புதுவதாக ஆக்கிக்கொள்ள மக்கள் இன்னும் அறியவில்லை. 'பூ நாற்றம்' என்றும் புலால் நாற்றம் என்றும் நறுநாற்றத்தையும் மற்ற நாற்றத்தையும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னால் வேறுபடுத்திக் கூறிய நாம், இன்னும் அதற்குமேற் கடந்துபோய் வெவ்வேறு மணத்திற்கு வெவ்வேறு சொல் அமைக்கவில்லை. இதில் வாழைப்பழ வாசனை, மாம்பழ மணம், தேன் வாசனை, சந்தன வாசனை, மல்லிகை மணம், மழை வாசனை வீசுகிறது என்கிறோமே தவிர, வேறு பிரித்துரைக்கும் சொற்களை இன்னும் அமைத்துக்கொள்ளவில்லை. இது நமக்கு மாத்திரம் உள்ள குறை அன்று; உலகினர்க்கே ஒத்த குறை. கண்ணாற் காணும் நிறத்தைவிட, காதினாற் கேட்கும் ஒலியினைவிட, மூக்கினால் முகரும் மணம் கணக்கில்லாத வகை ஆனதால்தான் தனிப்பெயர்கள் அமைக்கப்படவில்லை போலும்!

நாம் நம்முடைய முதாதையர் போன்று பொருளுக்கேற்பப்புதுச்சொல்படைக்கும்திறமை பெற்றிருக்கவில்லை என்பது பொருந்தாது. நமக்கும் அத்திறமை உண்டு. எனினும் அவர்களுக்கு இருந்த அவசியம் நமக்கு இல்லையாதலாலும், அவர் சென்ற வழியே போய் அவராக்கியவற்றிலிருந்தே அமைத்துக்கொள்ள இயலுகின்றமையாலும், நாம் புதுவதாகச் சொற்களைப் படைக்காமல் அமைக்கின்றோம்.

ஒரு சமயம் டிஸ்ரேலியைக் காணவந்த ஒருவர், "பிரபுக்கள் அடங்கிய சபையில் யாவருடைய கவனத்தையும் ஈர்க்கும் வண்ணம் சொற்பொழிவு நிகழ்த்தும் திறமையைப் பெற எவ்வகைப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டார்.

"உங்கள் இல்லத்திற்கருகில் இடுகாடு இருக்கின்றதா" என்று கேட்டார் டிஸ்ரேலி.

"இருக்கின்றது" என்றார் வந்தவர்,

"அப்படியென்றால் தினமும் அதிகாலையில் அங்கு சென்று கல்லறைகளின் நடுவில் நின்று பேசிப் பழகிக்கொள்ளுங்கள்" என்று கூறினார் டிஸ்ரேலி.

வெற்றியினும் தோல்வி பெரிது

தில்லை மறைமுதல்வன் எம்.ஏ.,பி.எல்.

கடைசியில் அந்தப் போர் முடிவுற்றது!

பெருவீரன் இராவணன் சாய்க்கப்பட்டான். அவனைச் சேர்ந்தோரின் உடல்கள் கழுகுகளுக்கும் காக்கைகளுக்கும் விருந்தாக்கப்பட்டன. இலங்காபுரியின் மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் தீ தின்று தீர்த்தது. செல்வக் குவியல்கள் சூறையாடப்பட்டன. இராமன் மூட்டிய நெருப்பு அந்த மாபெரும் சாம்ராஜ்யத்தை சாம்பலாக்கிற்று.

இத்தனைக்கும் காரணமான மிதிலை நாயகி அசோக வனத்தில் இராவணனுல் சிறைவைக்கப்பட்டிருந்தாள்.

இராவணனின் ரத்தச் சேற்றில் இராமன் வெற்றிவாகை சூடிய செய்தியை அசோகவனத்திலிருந்த சீதைக்குச் சொன்னுன் மாருதி. இந்த விடுதலைக்குத்தான்—இந்த மீட்சிக்குத்தான்—அவள் இத்தனை காலமும் காத்திருந்தாள். வீரக் கழல் புனைந்த இராமனைக் காணவேண்டுமென்ற ஆசையால்தான் அவள் பல இடர்களையும் பொறுத்துக்கொண்டு காத்திருந்தாள். தசரத குமாரன் தன்னைக் காப்பாற்றுவான், பழிதுடைப்பான், மானங்காப்பான், வாழ்வளிப்பான் என்ற நினைப்பில்தான் அவள் பலர் பலகாலும் பலவாறு சொன்ன பழிச்சொற்களை எல்லாம் சகித்துக்கொண்டு காத்திருந்தாள். அசோகவனத்துச் சேடியர்களின் உபதேசங்கள் செவிகளை புண்ணுக்கியபோதெல்லாம் இலங்கை வேந்தனின் ஆசையில் விளைந்த சொற்கள் நெஞ்சை சுட்டெரித்தபோதெல்லாம் அவள் உயிரைக் காத்து நின்றது இதற்காகத்தான்.

அவளுக்குத்தான் எத்தனை நம்பிக்கை, பொறுமை!

அவள் தவங்கிடந்த அந்த நேரமும் வந்தது—ஆனுல் அவள் எதிர்பார்த்ததுபோல அல்ல!

போர்க்களத்தின் பிண வாடையிடையே நின்றுகொண்டிருந்த இராமன், சிறைமீண்டுவந்த சீதையைக் கண்டான். பத்து மாதங்களுக்கு முன்பு அவன் கண்ட அந்த அழகொழுகும் முகமும் இளமை கொஞ்சும் மேனியும், மதர்த்தவிழிகளும், கைபுனைந்தியற்ருக் கவின் பெருவனப்பும் இப்போது சீதையிடம் இல்லை. அவள் வாடித்தான் போயிருந்தாள்!

தாபமும் பெருமூச்சும் நிறைந்த எண்ணற்ற இரவுகளுக்குப் பின்னர் ஜானகி தன்னை ஆட்கொண்டவனைக் கண்டாள். புதுவெள்ளம்போல உவகை பெருக்கெடுத்தோடியது. உணர்ச்சிகளின் அலை புரண்டது. தவமிருந்து பெற்ற அந்தத் திருக்குமாரனின் பாதங்களில் விழுந்து வணங்கினுள்.

அவனே கண்களை மூடிக்கொண்டான்.

"பிரபோ"

பதிலில்லை. சீதையின் நெஞ்சில் முள் தைத்தது.

"சீதை வந்திருக்கிறேன். கண் திறந்துபாருங்கள்."

"கண் வலியால் வேதனைப்படுகிறேன் சீதா"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"இந்த இலங்கைப் படையெடுப்பு உன்னை மீட்பதற்காக அல்ல—எனக்காக! என் பெயருக்கு வந்த மாசு துடைப்பதற்காக! என்னை அவமானப்படுத்தியவனைப் பழி வாங்குவதற்காக! என் கடமை முடிந்துவிட்டது. நீ இனி உன் விருப்பம் போல் எங்குவேண்டுமானாலும் போகலாம்!"

இராவணன் காமுற்றபோதும் அடையாத வேதனையை சீதை இப்போது அனுபவித்தாள். எத்திசையில் வேண்டுமானாலும் செல்லும் இந்த விடுதலைக்காகவா அவள் காத்திருந்தாள்? உலக விடுதலையைவிட இதென்ன மேலான விடுதலையா? நஞ்சு துளிர்த்த நீண்ட பிரிவுக்குப்பின்னர் தன்னைக் கண்டதும் ஆசை கொப்பளிக்க சந்தணம் கமழும் திரண்ட தோள்களில் வாரி அணைத்துக்கொள்வான் என்று எதிர்பார்த்திருந்தவளுக்கு—வெண்ணிலா பாதங்களுக்கு பூச்சொரிந்த இராமனின் அன்பில் மிதக்கவும் இனிய சொல்லைப் பருகவும் பெருவேட்கை கொண்டிருந்தவளுக்கு எத்தனை பெரிய அதிர்ச்சி ஏமாற்றம்!

"இந்தக் கொடியதண்டனையைப்பெற நான் என்ன குற்றம் செய்தேன்?"

"இராவணன் உன்னிடம் இச்சைகொண்டான். காமம் வழியும் கண்களால் உன் திரண்ட அழகைக்கண்டான். தொட்டெடுத்துத் தூக்கிச் சென்றான்."

"அது நான்செய்த குற்றமல்லவே! இராவணன் செய்த குற்றம்—என் அழகு செய்த குற்றம்-சூர்ப்பனகையைப் பங்கப்படுத்தியவர்கள் செய்த குற்றம்" வேதனையில் தன்னை மறந்து பேசினாள் சீதை.

"பத்து திங்கள் வரை இராவணன் அந்தப்புரத்தில் அவனது ஆற்றலுக்கும் அதிகாரத்துக்கும் உட்பட்டிருந்தாய்!"

"வேறென்ன செய்யமுடியும்? நான் பெண்—அவனோ அளவற்ற வீரமும் வலிமையும்கொண்டவன். என் உடல் பிறன் வசப்பட்டது. ஆனால் என் மனமல்ல"

"களங்கமற்ற 'இச்வாகு' குலத்தில் பிறந்த நான் எப்படி மாற்றானால் தீண்டப்பட்டவளை ஏற்றுக்கொள்ள முடியும்? உலகம் என்னைப் பார்த்து சிரிக்காதா?"

சீதையின் ஆருத்துயரும் அழுத முகமும் 'இராமனிடம்' மனிதத்தன்மையை உண்டாக்கவில்லை. 'எல்லோருக்கும்' உரித்தானசந்தேகமும் ஆத்திரமும் கோழைத்தனமும் அவனை ஆட்டிப் படைத்தன.

"அப்போதும் இப்போதும் எப்போதும் என் மனம் உங்களிடம்தான் இருக்கிறது. நான் உங்களை விரும்பி மணந்தது நீங்கள் அரசிளங்குமாரன் என்பதாலல்ல—மலர் முடி புனைந்து மன்னர் மன்னனாக அரியாசனம் வீற்றிருப்பீர்கள் என்பதனாலுமல்ல; என் கண்ணிற்கும் கருத்திற்கும் ஏற்றவர் என்பதால் என் ஆசையைக் கொள்ளை கொண்ட பேராற்றலும் பெருவனப்பும் படைத்தவர் என்பதால்."

சீதையின் சொற்கள் இராமனின் நெஞ்சைத் தொட்டன.

"சீதா வேறு வழியில்லை எனக்கு. வேண்டுமானால் ஒரே ஒரு சோதனை இருக்கிறது உன் மீட்சிக்கு."

"எதுவானாலும் சொல்லுங்கள். உங்களை விட எனக்கு எதுவுமே பெரிதல்ல"

அவளிடம் இரக்கங்காட்டாத இராமனிடம் அவளுக்குத்தான் எத்தனை ஆர்வம், பிரேமை!

"தீ வளர்த்து அதில் நீ குளிக்கவேண்டும். அதன் மூலம் உன் தூய்மையை உலகம் அறிய வேண்டும். பிறகுதான் அயோத்தியில் இராமன் மனைவியாக நீ வாழ முடியும்."

சீதை சோதனைக்கு ஒப்புக்கொண்டாள்.

தீ வளர்க்கப்பட்டது. புனித நீராடி, புத்தாடை உடுத்தி இராமனின் பாதந்தொட்டு வணங்கினாள் சீதை. கொழுந்துவிட்டெரியும் தீக்குண்டத்தை மும்முறை வலம் வந்து கைகூப்பி கண்மூடினாள்.

மனத்தினான் வாக்கினான் மறு
வுற்றேன் எனின்
சினத்தினால் சுடுதீயால்! தீச்
செல்வா!

அடுத்தகணம் சீதை தீயிடையே பாய்ந்து விட்டாள். சுற்றி இருந்தவர்கள் கண்ணைமூடிக் கொண்டனர்.

என்ன ஆச்சரியம்!

தீக்கடவுள் சீதையின் பழுதிலா நிலையை நிரூபித்துவிட்டான். விண்ணிலிருந்து தேவர்கள் பூச்சொறிந்து நின்றனர்.

சீதை மெய்மறந்து நின்றாள்.

விண்ணவர் வாழ்த்த, வானரர் வியப்புற, தென்னவர் வழியனுப்ப, சீதை அயோத்திக்கு இராமனுடன் புறப்பட்டாள்.

ஆனால் இந்த மீட்சி நிரந்தர மீட்சி அல்ல என்பது அவளுக்குத் தெரியவில்லை. தர்மத்தை நிலைநாட்ட வந்த இராமனே அதர்மம் அலைக்கழிக்கப்போகிறது என்பதை அவள் அறிந்ததில்லை.

இராமனுக்கே அது தெரியவில்லையே!

∴ ∴ ∴

இப்போது இராமனும் சீதையும் அயோத்திக்கு திரும்பிவிட்டனர். களையிழந்து கிடந்த அயோத்தியில் களி துலங்கிற்று. அப்பி இருந்த இருள் பெயர்ந்து வீழ்ந்து வானம் சிவந்தது போல கோடையின் கானல் முடிந்து வசந்தத்தின் பசுமை தழைத்ததுபோல அயோத்தி நகர் புதுக் கோலம் பூண்டது.

அலங்காரங்களும் ஆடல்களும் பாடல்களும் எங்கும் காட்சிகளாயின. இளங்கன்றின் சிவந்த மாமிசமும் சோமரசமும் இவையிரண்டின் சுவையும் கொண்ட அழகிகளும் வரப்பிரசாதங்களாயின.

இராமனும் சீதையும் கண் நிறைந்துகாணப்பட்டனர். எனினும் இருவருமேமாறிப்போயிருந்தனர்.

இராவணனால் சிறை எடுக்கப்பட்ட சீதையும் இராமனால் மீடகப்பட்ட சீதையும் வெவ்வேறாக இருந்தனர். அசோகவனம் அவளை மாற்றி இருந்தது.

சீதையிடம் முன்பிருந்த விளையாட்டுத் தன்மையும் கேளிக்கை சுபாவமும் இப்போதில்லை. மழைபெய்துவிட்டதுபோல அமைதியோடுஇருந்தாள். நடையில் முன்பிருந்த துள்ளல் இல்லை. ஏதோ காற்றில் மிதப்பது போல நடந்தாள். போகிறவர்களை தடுத்து நிறுத்தும்படியாக 'கலீ' ரென சிரிப்பதில்லை. அதிராத அடக்கமான சிரிப்புதான். ஆயிரம் அர்த்தங்கள் சொல்லும் கண்கள் இப்போது சலனமற்றிருந்தன.

இராமனிடம் முன்புபோலவே இப்போதும் அன்பு செலுத்தினாள். ஆனால் அதில் முன்பிருந்த குறும்புத்தனமும் வேட்கையும் இப்போதில்லை. மதிப்பும் மரியாதையுமே இருந்தன.

இந்த மாறுதல் எப்படி ஏற்பட்டது, எதனால் ஏற்பட்டது என்பது சீதைக்குத் தெரியவில்லை. விரைவில தாயாகப்போகிறோம என்ற நினைப்பினால் விளைந்த மாறுதலோ என்னமோ!

சீதையிடம் ஏற்பட்ட மாறுதலைக் கண்டு இராமனுக்கும் ஆச்சரியமாகத்தான் இருந்தது. அதைவிட ஆச்சரியம் எப்படியோ தானும் மாறி இருக்கிறோம் என்பதை அவன் உணர்ந்தது தான்.

இலங்கைப் படைபெடுப்புக்கு முன்னர் சீதை அவனுக்கு ஒரு இலட்சியமாகவே விளங்கினாள். அவளுடைய அஞ்சனம் தீட்டிய விழிகளின் இமைகளில் அவனது கனவுகள் தங்கியிருந்தன. பூ மணக்கும் மெல்லிய தோள்களில் அவனது ஆசைகள் பின்னிக்கிடந்தன. செம்பஞ்சு தடவிய சிற்றடிகளுக்கு அவனது உணர்ச்சிகள் சதங்கைகளாகி, அவள் அடியெடுத்துவைத்த போதெல்லாம் கொஞ்சின.

ஆனால் இப்போது அவன்தான் அவளுக்கு எல்லாமாக இருந்தானே தவிர அவள் அவனுக்கு எல்லாமாக இருக்கவில்லை. அவளிடமிருந்த கவர்ச்சிதான் குறைந்துவிட்டதா? அல்லது அந்தக் கவர்ச்சியில் தனக்கிருந்த பற்றுதல் தான் குறைத்துவிட்டதா என்பது புரியாமல் தத்தளித்தான். சீதை தாயாகப் போகிறாள் என்பது கூட அவன் உணர்ச்சிகளை சிலிர்க்கவைக்க வில்லையே!

எது எப்படி இருப்பினும் இராவணனுக்கும் சீதைக்கும் இடையே இருந்த கோலாகலமும் இனிமையும் திரிந்துவிட்டன என்பது மட்டும் உண்மைதான். இதழின் சிவப்பை விழிவாங்கிய அந்த நாட்கள் —கலைநெகிழ இடை துவள முகை குலுங்க சிருங்காரம் சாகரமாக பெருக்கெடுத்தோடிய அந்த தினங்கள்—அவையெல்லாம்இப்போது நினைத்துப் பார்க்கக்கூடிய இனிமைகளாகிவிட்டன.

∴ ∴ ∴

ஒருநாள் இராமன் அரண்மனையின் உப்பரிகையில் நின்றுகொண்டு அயோத்தி நகரையும் அதைச்சுற்றியுள்ள சோலைகளையும் பார்த்துக் கொண்டிருந்தான். பக்கத்தில் பரதனும் நின்றிருந்தான்.

நீண்ட நேரமாக இருவருமே பேசிக் கொள்ளவில்லை. இருவர் மனதிலும் இரு வேறுபட்ட எண்ணங்கள் —ஆனால் இரண்டுமே ஒன்றைப்பற்றிதான்! இராமனுக்கு அதை எப்படி பரதனிடம் கேட்பது என்று புரியவில்லை —பரதனுக்குஅதைஎப்படிஇராமனிடம்சொல்வதென்று புரியவில்லை.

இந்த மௌனத்தின் பயங்கரத்தை இராமனால் தாங்க முடியவில்லை.

"பரதா அயோத்தி மக்கள் ஒரே மகிழ்ச்சியாக இருப்பதுபோல தென்படுகிறதே"

"ஆமாம். தங்கள் இலங்கை வெற்றியின் பெருமைதான் இன்னும் வீதியெங்கும் பேசப்படுகிறது நாற் சந்திகளிலும் கடைவீதிகளிலும் தங்கள் வில்லாற்றல் புகழப்படுகிறது. வாலிவதையும் சேதுபந்தனமும் இராவணன் அழிவும் கதை கதையாகச் சொல்லப்படுகின்றன."

"அப்படியா"

"ஆனால்..." பரதன் சொல்லவேண்டியதை சொல்லிவிடுவது என்று முடிவு செய்துவிட்டான்.

"என்ன விஷயம் பரதா?"

"சொல்வதற்குத் தயக்கமாக இருக்கிறது"

"பரவாயில்லை...எதுவானாலும் சொல்லு"

"சீதாபிராட்டியின் மீட்சியை மேலுலகமும் கீழுலகமும் அங்கீகரித்துவிட்டன. ஆனால் இந்த பூவுலகம் ஏற்க மறுக்கிறது."

"நீ என்ன சொல்கிறாய் பரதா" இராமனின் முகத்தில் இருள் கப்பியது.

"அபவாதம் காட்டுத்தீ போல பரவிவிட்டது சீதா தேவியாரின் அக்கினிப் பிரவேசம் அயோத்தி மக்களுக்கு தகுந்த சமாதானமாகப் படவில்லை"

எதிர்பார்த்த அதிர்ச்சிதானென்றாலும் அது வந்தபோது வரவேற்கக்கூடியதாக இல்லை.

பகைவனிடம் பத்துதிங்கள் வரை இருந்து திரும்பியவளிடம் தூய்மை இருக்க முடியாது என்று சரியாகவோ தவறாகவோ ஆனால் நிச்சயமாக அயோத்தி மக்கள் நினைத்தார்கள்.

"மக்கள் பேசிக்கொள்வது காதுகொடுத்து கேட்கக்கூடியதாக இல்லை. நம்முடைய மனைவியரும் சீதையைப்போலானால் நாமும் சகித்துக் கொள்ள வேண்டியதுதான். அரசன் எவ்வழியோ அவ்வழிதானே குடிகளும் என்றெல்லாம் கேவலாகப் பேசுகிறார்கள்.

நேற்றுகூட ஒரு வழக்கு விசாரணைக்கு வந்தது. ஆடை வெளுப்பவன் ஒருவன்...!"

"போதும் பரதா, போதும். என்னை சித்திரவதைசெய்யாதே." காதுகளைபொத்திக்கொண்டு அலறினான் இராமன். மற்றவர்களுக்கெல்லாம் ஒரு "மாதிரி" யாகப் புகழப்பட்ட அந்த "உதார புருஷன்" அப்போது தனக்குள்ளே புழுவாக நெளிந்தான்.

"போ பரதா போ, என்னை தனிமையில் விட்டுவிட்டுப் போ!"

பரதன் அவ்விடத்தைவிட்டுச் சென்றான். இராமனுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. போர்க்களத்தில்கூட கலங்காதவன் இப்போது அஞ்சி அஞ்சி வியர்த்தான்.

நீண்ட நேரத்துக்குப்பின்னர் ஏதோ ஒரு முடிவோடு அவன் சீதையின் அந்தப்புரம் நோக்கிச் சென்றான்.

∴ ∴ ∴

சீதை அந்தப்புரத்தில் சேடியர் சூழ அமர்ந்திருந்தாள்! தாய்மையின் மினுமினுப்பு அவள் உடலெங்கும் மெருகிட்டிருந்தது. அப்போது அவளுடன் கைகேயியும் இருந்தாள்.

ஏதேதோ பேசிக்கொண்டிருந்த கைகேயி திடீரென்று சீதையைப் பார்த்துக் கேட்டாள்.

"ஏன் சீதா இலங்காபுரி செல்வச் செழிப்புள்ளதாமே. மாடமாளிகைகள் பிரமிக்கவைக்குமாமே. அங்குள்ளவர்கள் வீரத்திலும் அழகிலும் சிறந்தவர்களாமே!"

கைகேயின் நோக்கத்தைச் சீதையால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"எனக்கென்ன தெரியும், நான்தான் அசோக வனத்திலே சிறைவைக்கப்பட்டிருந்தேனே"

"மறந்துவிட்டேன்...இராவணன் போரில் புலியாம். அவன் போர் வீரத்தைப்பற்றி வீரர்கள் கதைகதையாகச் சொல்கிறார்கள்."

சீதை பதில் பேசவில்லை.

"ஏன் சீதா நீ இராவணனைப் பார்த்திருக்கிறாயே, அவன் எப்படி இருப்பான்? அழகானவனா? அல்லது பயங்கரமாக இருப்பானா?"

"என்னை ஒன்றும் கேட்காதீர்கள். இப்போது அதெல்லாம் எதற்கு?" மறக்க விரும்பிய மறக்க முயன்றுகொண்டிருந்த—இலங்கைநினைவுகளை மீண்டும் கிளறிவிட சீதைக்கு துணிச்சலில்லை.

"இராவணனைப்பற்றி சொல்வதென்றால் உனக்கு கஷ்டமாகத்தான் இருக்கும் அவனது உருவத்தையாவது படமாக வரைந்துகாட்டேன். ஒரு பெண்ணுக்காக தனக்கும் தன் நாட்டுக்கும் அழிவு தேடிக்கொண்டவன் எப்படி இருப்பான் என்பது எங்களுக்கும் தெரியவேண்டாமா?"

சீதை ஆனமட்டும் மறுத்துப் பார்த்தாள். கைகேயி விடுவதாக இல்லை. சாமர்த்தியமாகப் பேசி சீதையின் உறுதியைக் கலைத்துவிட்டாள்.

வேறு வழியின்றி, திரைச்சீலையை எடுத்து வைத்து தூரிகையை வர்ணங்களில் தோய்த்து இராவணன் உருவை எழுதலானாள் சீதை. அப்போதுதான் இராமன் உள்ளே நுழைந்தான். படத்தை அப்படியே போட்டுவிட்டு சீதை எழுந்து நின்றாள்.

கைகேயியை வணங்கிவிட்டு இராமன் அங்கிருந்த ஆசனத்தில் அமர்ந்தான். சீதை அரைகுறையாக வரைந்திருந்த அந்தப் படம் அவன் கண்களில் தட்டுப்பட்டது. எடுத்துப் பார்த்தான்.

இராவணன் படம்!

"யார், சீதையா இதை எழுதியிருக்கிறாள்! அற்புதமாக இருக்கிறதே" அவன் குரலில் தொனித்த ஏளனத்தை சீதை உணர்ந்தாள்.

"இராமா மனிதர்களுக்குப் பிரியமானவர்கள் அடிக்கடி அவர்கள் நினைவுக்கு வருமாம். பெண்களின் மனதை கண்டறிந்தவர்கள் யார்!" இதைச் சொல்லிவிட்டு கைகேயி அகன்றாள். குறிதப்பாது அம்பெய்வதில் அவள்எப்போதுமே கெட்டிக்காரிதான்.

இராமன் நெஞ்சில் கனன்றுகொண்டிருந்த நெருப்பு இப்போது கொழுந்துவிட்டெரிந்தது. கையிலிருந்த இராவணன் படத்தை வீசி எறிந்தான்.

"ஜானகி! நீ இன்னும் இராவணனை மறக்கவில்லை போலிருக்கிறதே."

"பிரபோ நான் பாபமறியாதவள். இராவணனுடைய உருவை வரைந்து காட்டும்படி அவர்கள் வற்புறுத்தினார்கள். மறுக்கமுடியாமல்..."

"புரிகிறது சீதா, புரிகிறது. அயோத்தி மாந்தர் பேசுவதிலும் அர்த்தமிருக்கத்தான் செய்கிறது. நான்தான் தவறு செய்துவிட்டேன்."

"வேண்டுமானால் என்னை உங்கள் கையாலேயே கொன்றுவிடுங்கள். இப்படி அபாண்டமாக பழியல் சித்திரவதை செய்யாதீர்கள்" கண்களில் மழைபெ பொழிய கெஞ்சினாள் சீதை.

"உன்னைக் கொல்லும் இன்னொரு பாவத்துக்கு நான் ஆளாகமாட்டேன். செய்த பாவத்துக்கு பரிகாரம் தேடவேண்டியதுதான் பாக்கி."

சேடியர்களைக் கூப்பிட்டு இலக்குமணனை அழைத்துவரச் சொன்னான் இராமன். வந்த இலக்குமணனிடம் "இலக்குமணா சீதையைக் காட்டில் கொண்டு விட்டுவிட்டு வா" என்றான்.

இலக்குமணன் திகைத்து நின்றான்.

"நீங்கள் என்னண்ணா சொல்கிறீர்கள்"

"இதுதான் பாபவிமோசனம்!

"யார் செய்த பாவத்துக்கு யாருக்கு தண்டனை"

"அயோத்தி மக்கள் அப்படி நினைக்கவில்லையே!"

"அதற்காக இந்தக்கொடுமையா? தர்மத்தை நிலைநாட்டவந்தவர் நீங்கள். அதர்மத்துக்கு அடிபணிவது விந்தையிலும் விந்தை"

"செய்த முடிவு செய்ததுதான்—சரியானாலும் தவறானாலும் இனி மாற்றுவதற்கில்லை."

சீதைக்கு இப்போது திகைப்பும் சோகமும் நீங்கிவிட்டன. ஆத்திரம் பீறிட்டு வந்தது.

"நானே போய்விடுகிறேன்...செல்வமும் செல்வாக்கும் நிறைந்த இடத்தில் பிறந்தேன். சீரும் சிறப்போடும் அயோத்தியில் புகுந்தேன், இராவணனால் சிறைபிடிக்கப்பட்டேன். அதுகூட பெரிதல்ல. இப்போது நிறைவயிற்றோடும் நீங்காப் பழியோடும் துரத்தப்படுகிறேனே இது தான் கொடுமையிலும் கொடுமை..."

இராமன் தலைகுனிந்து நின்றான். சீதை வார்த்தைகளைப் பொரிந்து தள்ளினாள்.

நான் அசோகவனத்தில் உயிர்விடாதிருந்தது அரசு வீற்றிருந்து ஆள்வதற்கல்ல; ஆய்மணிப்புரசை யானையின் வீதியில் போகவல்ல; விரசு கோலங்கள் காணவுமல்ல; உங்கள் அன்பு கிடைக்கும் என்பதற்காகத்தான் காத்திருந்தேன் ஆனால் என் பொறுமையும் நம்பிக்கையும் அர்த்தமில்லாமலே ஆகிவிட்டன. தசரத குமாரனின் வில்லும் ஆற்றலும் இராவணன் உயிரை மாய்க்கத்தான் பயன்பட்டதே தவிர, சீதைக்கு வாழ்வளிக்கத் தவறிவிட்டன!"

இராமனுக்குத் தலை சுற்றியது.

"அறம் வெல்லும் என்று நினைத்தேன். இதோ அறம் அபவாதத்தின் முன் புழுப்போல் நெளிகிறது. இராவணனோடு போரிட்டபோது உங்கள் தோள் வலிமை தெரிந்தது. இப்போது உங்கள் உள்ளத்தின் பலவீனம்தான் பளிச்சிடுகிறது."

ஒரு கணம் இராமனின் நெஞ்சு நெகிழ்ந்து கலங்கிற்று. ஆனால் மறுகணமே பரதனோடு நிகழ்ந்த உரையாடலும் இராவணன் சித்திரமும் பின்னணியில் எழுந்தன.

இளகிய இதயம் இறுகிற்று.

'இலக்குமணா' என்றான் இராமன்.

"இதோபோய்விடுகிறேன். போகுமுன்என் மனதிலுள்ளதையும் சொல்லிவிடுகிறேன்... இராவணன் பெற்றது தோல்வி அல்ல—அது வீரச்சாவு. அவன் எண்ணமும் செயலும் தவருயிருக்கலாம். ஆனல் அதற்காகத் தன் உயிரையும் பணயம் வைத்தான். இராவணனிடம் நீங்கள் பெற்றது எல்லா வீரர்களுமே போர்க்களத்தில் பெறக்கூடிய சாதாரண வெற்றிதான். ஆனல் இப்போது அபவாதத்தை எதிர்த்து நம்பியவளை காப்பாற்றி இருந்தால் உலகம் உங்களை, மாபெரும் வழிகாட்டியாக—'உதார புருஷனக'—கொண்டாடுவதில் அர்த்தமிருக்கிறது. இராவணனிடம் பெற்ற வெற்றியைவிட இப்போதுநீங்கள் பெற்ற தோல்வி மகத்தானது. இலங்கை வெற்றியினும் அயோத்தியில் அடைந்த தோல்வி பெரிது"

"சீதா நீ எல்லை மீறிப் பேசுகிருய்" என்று கோபத்தால் முகம் சிவக்க கத்தினன் இராமன். தேவ அருள் சித்தித்த அந்த, ஆதர்சபுருஷனுக்கு கூட தன்னிடமுள்ள குறைபாடுகளைக் கேட்கப் பிடிக்கவில்லை.

"மன்னித்துவிடுங்கள் பிரபோ! இதோ போகிறேன். இதை மட்டும் மறந்துவிடாதீர்கள். இரக்கமற்ற அரக்கனை இராவணனின் ராஜ்யத்தில்கூட எனக்குஒரு அசோகவனம் இருந்தது. ஆனல் இந்த இராம ராஜ்யத்தில் அதுகூட எனக்குக் கிடைக்காமல் போய்விட்டது"

சீதை திரும்பிப்பாராமல் சென்ருள். இலக்குவன் பின் தொடர்ந்தான்.

சிலைபோல் நின்றிருந்த இராமன் திரும்பினன். அவன் கண்களில் சீதை வரைந்த இராவணனின் படம் தென்பட்டது. அதையே உற்றுப் பார்த்தான். இராவணனின் உதடுகளில் வெற்றிப்புன்னகை உறைந்திருப்பதுபோலதென்பட்டது.

நம்பர் - 10

சனநாயகவாதிகள் ஒப்புக்கொள்ளும் வகையில் மன்னர் ஆட்சிமுறையை அமைத்துக்கொண்டு மன்னர்களுக்கு மரியாதை செலுத்தி வரும் மக்களை நாம் இங்கிலாந்தில் மட்டும்தான் காணலாம்.

தொன்றுதொட்டு இருந்துவரும் சம்பிரதாய முறைகளை விடாப்பிடியாகக் கடைப்பிடித்து அதனல் பெருமை கொள்ளும் நாடு இங்கிலாந்து நாடாகும்.

நம்பர் பத்து என்ருல் அது லண்டன் மாநகரிலுள்ள பிரதம மந்திரி வசிக்கும் மாளிகையைக் குறிப்பதாகும். டவுனிங் தெரு (Downing street) வில் 10-வது எண்கொண்ட அந்த மாளிகை தான் கடந்த இருநூறு ஆண்டுகளாக இங்கிலாந்து நாட்டின் பிரதம மந்திரியின் மாளிகையாக விளங்கி வருகிறது.

இப்பொழுது அது ஒரு சரித்திரப் புகழ்பெற்ற இடமாக விளங்குகின்றது. உலக சரித்திரத்தில் எற்பட்ட பல திருப்பங்களுக்கு அந்த மாளிகையில் நடைபெற்ற பேச்சுக்கள் காரணமாகின்றன,

அங்கேதான் வால்போல் (Walpole) திறமையான ஆட்சிமுறைக்கொள்கைகளை வகுத்தார்; அந்த மண்டபத்தில்தான் பெரிய வில்லியம் பிட் (William Pitt the Elder) அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுக்கு ஏற்பட்ட இன்னல்களைக் களைய திட்டம் தீட்டினர். அமெரிக்கப் புரட்சி தோன்றக் காரணமாகிய ஸ்டாம்புச் சட்டம் சியார்சு கிரென்வில் (George Crenville) என்பவரால் உருவாக்கப்பட்டதும் அங்கேதான். அண்டத்தை ஆட்டிப்படைத்த அடால்ப் இட்லரின் கொட்டத்தை அடக்க வெடிகுண்டு வீச்சைக்கண்டும் வெளியேருமல் அந்த மாளிகையில் இருந்துகொண்டுதான் வின்சுடன் சர்ச்சில் வெற்றிக்கான வழிவகைகளைக் கண்டார்.

இங்கிலாந்தின் சிறப்புச்சின்னமாக விளங்கிவரும் நம்பர்-10. மாளிகை சியார்சு டவுனிங் (George Downing) என்பவரால் 17-ம் நூற்ருண்டின் மத்திய காலத்தில் கட்டப்பட்டதாகும், அதற்கான இடத்தை இரண்டாம் சார்லசு மன்னனிடமிருந்து 99 ஆண்டுக் குத்தகையின் பேரில் பெற்ருர். குத்தகைக்காலம் முடிந்தவுடன் கட்டிடங்கள் அரசினரின் உடமைகளாக மாறின.

இரண்டாம் சியார்சு மன்னன் அந்த மாளிகையை பிரதம மந்திரி ராபர்ட் வால்போலுக்குப் பரிசாக அளித்தார். ராபர்ட் வால்போல் அதைத் தனக்குமட்டும் உரிய உடமையாகக் கொள்ளாமல் இங்கிலாந்து நாட்டின் பிரதமர்களின் மளிகையாகும்படியான முறையை ஏற்படுத்தினர்.

தமிழ்த் தாயின் ஆணை

[இந்தி எதிர்ப்பு இயக்கத்தின் எழுச்சியும், இந்திமொழி அகற்றப்பட வேண்டியதன் 'இன்றியமையாமையும், தமிழ் மொழியின் சிறப்பும், செழுமையும், அதுபேணி வளர்க்கப்பட வேண்டியதன் இன்றியமையாமையும் நாட்டினர் ஆற்ற வேண்டிய கடப்பாடுகளும் பாட்டுமொழியில் பகரப்பட்டிருக் கின்றன.]

1. அன்னை வணக்கம்

1. அன்றும் இன்றும் அவனியெலாம்
அடியு முடியுங் காணவொணு
தொன்று தொட்டு வாழ்கின்ற
தூய இளமைப் பெருமாட்டி
என்றும் இனிமை யெழில் கொஞ்ச
இருக்கும் நமது தமிழன்னை
நன்றுந் தீதுங் காட்டி நிற்கும்
நயத்தைக் கண்டு வணங்குதுமே!

2. அன்னையின் கவலையும் கட்டளையும்

1. தெள்ளு தமிழ்ப்பெரு மக்காள்–நீங்கள்
திரவே யோசித்துப் பார்த்திடு மிக்கால்;
தள்ளப் பட்டாளுங்கள் தாயும்–இதன்
சாரம் விளங்கினல் வீரமும் பாயும்

2. இந்தியாம் இந்நாட்டுப் பாடை–ஆனுல்
இதர மொழியெலாம் ஏற்குமே பாடை!
தந்திரமானயிவ் வேலை–தன்னைச்
சதமென நம்பினுல் சாருவோம் மூலை!

தஞ்சைவாணன்

3. 'சர்க்கா ரெ' லாமிந்தி பேசும்—அன்றிச்
சார்ந்த விடமெலா மவள் மணம் வீசும்;
நிற்க எனக்கிட மில்லை—இதை
நீர் நினைக் காவிடின் நேருமே தொல்லை.

4. 'சுயராச்யம்' வந்துமக் கென்ன—உங்கள்
சொல்லை யிழந்தபின் சூடேது பின்னே?
பயந்துநீர் வாழவே வேண்டும்—வட
பல்லவி பாடிப் பசியாற வேண்டும்.

5. புதினத் தாளவள் கையிற்போகும்—நல்ல
புத்தகம் யாவும் அவள் வளர்ப்பாகும்
நிதியெல்லா மவள்கையை நாடும்-பலர்
நித்தமுஞ் சென்றவள் நேசத்தைத்தேடும்

6. அவள்பெற்ற கோபாலர்கூட—வந்து
ஆட்டிவைப் பாருங்கள் ஆன்றோர்களாட;
அவமாகும் உங்களின் கல்வி—அதில்
ஆட்டமில்லை நீரடைகுவீர் தோல்வி!

7. அத்தனை தீமைகளோடு—நம்மை
ஆளவே வந்திடும் அரசியல் கேடு;
சுத்த விடந்தரு வோரில்—எவர்
தோழர்? எவரில்லை? சொல்லுவீர்பாரில்

8. மொழியொன்றே மக்களைத் தூக்கும்—அதை
மூலையிற் போட்டிடில் மோசமே நோக்கும்;
விழித்தெழு வீரெந்தன் மக்காள்—கூடி
மேலைக்கே யாவதை விளைத்திடு மிக்கால்.

3. இந்தி வரவோ இத்துணை தியாகம்

1. உலகம்புகழ் பெரியாரெம தினிமைநிறை காந்தி
உடலத்தினைத் துளைத்தேயுயர் ஒளிபோக்கிட வந்த
கலகத்துறு துப்பாக்கியின் கனல்கக்கிடு குண்டை
கடிதோச்சிய வெள்ளைமகன் கணியாமுனம்சென்று
திலகத்திரு வள்ளிக்கனி திருமேனியி லேற்று
சீலம்நிறை நமதன்னையின் சிறைநீக்கிட வைத்த
உலகம்புகழ் தியாகந்தரும் ஒளிதந்திடு மிருளாய்
ஒளிந்தே வரும் இந்திக்கவர் உடம்பாடுள தாமோ?

2. மிடிதாங்கிய திருநாட்டினை மீட்கப்புரி போரில்
வெளிநாட்டுறு பறங்கிப்படை வேற்றூர்படை யோடு
வெடிதாங்கிய துப்பாக்கிகள் வேறும்பல வாலும்
மிரட்டிப்பதை பதைக்கப்புரி மீளாவுயிர்வேலை,
படிதாங்கிடு வேளைதுயர் படிதாண்டிய காலை
பரிந்தோடியே முனைநின்றுயிர் பறிபோயிடுமளவும்
கொடிதாங்கிய திருப்பூர்மகன் குமரன்புரிதியாகம்
கூறும்வட இந்திக்கிடம் கொடுக்கும்படிக்கேயோ?

3. மேகந்தொடு வரையும்பனி விண்முட்டிடு திசையும்,
வேகந்தரு புனலும்பல வீரஞ்செறி நகரும்,
பாகந்தொடு தமிழும்பயில் பாண்டித்திரு நாட்டில்
பாங்காயுயர் குடியிற்பல படித்தேநலமுற்றும்,
சோகந்தொடு சிறையிற்பல தொல்லை யனுபவித்தும்,
துயரந்தரு செக்கின்நுகம் சுமந்துமுயிர் விட்ட
மாகந்தொடு தியாகத்துரை வ. உ. சி. பெரியாரும்
வானேகிய தூஉம் வட இந்திக்கிடம் தரவோ?

4. சொல்லாலுயிர் ஊட்டிப்பல சூரர்களை யாக்கி,
சொந்தத்திரு நாட்டின்சிறை தூளாக்கிட ஊக்கி,
வில்லாலடித் தாலும்வழி விட்டேவில காத
வீரர்களை நாடெங்கிலும் விக்கித்துயர்திர
கல்லால்மலர் அடிக்கும்பிற கயவர்களை யோட்டக்
காரைக்காலிற் பாரதியார் காலத்தினிற் செய்த
பல்லாயிரந் தியாகத்தொடு பாயுந்தமிழ்ப் பாட்டும்
பந்திக்கிடந் தேடும்வட இந்திக்கிடம் தரவோ?

5. புலமையொடு நலமும்பல புதுமையொடு செறிவும்
பொருந்துபெருந் தமிழைமிகப் போற்றிப் பலகாலும்
இலகுநயக் கவியும்பல வினிமைமிகு உரையும்
எளியநடை பயின்றுவரும் ஏற்றமிகு நூலும்
பலபலவாய்ச் செய்துதமிழ்ப் பண்ணைவளர்பெரியார்
பண்பும்பொது நலமுமுயர் பணிகள்பல சிறந்த
திலகத்திரு தமிழரொளி திருவி—கவும் இருந்தால்
திருடவரும் இந்தியிடர்ச் சேரவிடு வாரோ?

4. தமிழ்நாட்டுத் தலைவர்கள் கடன்

1. உலகமுதல் மொழியான தமிழுமந்த
உயரினத்து மக்களுமே யொதுக்கப்பட்டுப்
பலவகையில் துயருழலும் போதுவந்த
பண்புடைய புத்துயிராம் தலைமையோரே,

கலகமுதல் இந்தியெனுங் கருநாகத்தைத்,
கடிக்காது, பாருமென்று கழித்தில்மாட்ட
பலவகையில் முயன்றுவரும் பகைமேலேறிப்
பாய்ந்தவண்ண மிருக்குமெங்கள் காவல்நீரே

2. பொல்லாத சூழ்நிலையில் இந்தியிங்கே
புகுத்தப்படு வதைத்தட்டி மடக்காவிட்டால்
இல்லாத தீமையெல்லாம் எம்பால் வந்தே
எய்திவிடும், மானம்போம்; ஏதுங்கெட்ட
கல்லாத மூடரெல்லாம் தமிழர்வாயில்
கடிவாளம் போட்டேறிப் பெரியோனுகும்;
செல்லாத காசாகும் தமிழர் வீரம்;
செத்தவரே போலாவார் தமிழரெல்லாம்.

3. நையாது போராடும் நல்லீருங்கள்
நல்லபெருஞ் சேவையெலாந் தமிழுக்காக்கி,
செய்யாத தில்லையெனச் செகத்தோர் மெச்ச
சீருடனே முயன்றுசெந் தமிழினத்தை,
மெய்யான தமிழ்மொழியை முன்பிருந்த
மேநிலையில் வைக்குமட்டும் வேறுவேலை
கையாலே தொடமாட்டேன் உறுதியென்று
கங்கணத்தை, உடைவாளைக் கட்டிக்கொள்வீர்!

4. எய்யாத அம்பினைப்போ லிருக்குமிந்த
இருந்தமிழர் குலமெழுப்பி, இடரைக்காட்டி,
பொய்யாத தமிழ்மறையில் புகன்றவீரம்
புரியும்படி பலவகையில் புகட்டி அன்று
செய்யாத போரில்லை தமிழரென்று,
சேர்த்தவரைப் படைவீட்டில் வைத்துநின்று
நையாத பெருவலியாய் நாளுமோங்கி
நாட்டுநலங் காத்தின்பம் நல்கிவாழ்வீர்!

5. தமிழ் வீரம்

1. கையெடுத்தால் வாளெடுப்பான் தமிழன் எந்தக்
காலத்தும் தலைவணங்கி நின்றானில்லை!
மொய்யெடுத்தே வாழும்பல கட்சிப்பேரால்
முறிந்துவிட்டான் தமிழனின்று சுக்குநூருய்!
மையெடுத்த பலரின்றவ் இந்திப்பேயை
மறைவாகக் கொணர்ந்திங்கே திணிக்கநின்ருர்;
மெய்யெடுத்த தமிழரினம் தூங்கிவிட்டால்
மேதினியிற் பின்னவர்க்கு வாழ்வேயில்லை!

2. கப்பல்விட்டான்; கடல்கடந்தான் கருமம்பேணி
கத்திமுனையிற் 'டலவாம் யுத்தங்'கண்டான்;
செப்பல்விட்டுச் செய்வதனை உறுதியாகச்
செய்துகின்றான்; செகத்தினிலே அன்றுமின்றும்
ஒப்பவிட்டுப் போரென்றால் உடனே பாய்வான்;
ஒளிந்துவந்த குள்ளநரி வெள்ளைகள்போல்
செப்பம்விட்ட தமிழரொரு சிலரைத்தம்பால்
சேர்த்திங்கே வருமிந்தித் திருட்ட நியான்!

3. குள்ளநரிக் கூட்டங்கள் உலகிலுண்டாம்,
குறித்தவர்க்குக் கங்காணிக் கும்பலுண்டாம்,
கள்ளநெறி படைத்தவரின் கயமையெல்லாம்
காணாதே மனம்போல காலம்போக்கின்
வெள்ளம்வரும் இந்தியலை வீசிக்கொண்டு
வேல்வீரன் அசோகனுமே வெல்லவொண்ணா
மள்ளர்வரும் தென்னாட்டு மாண்பதெல்லாம்
மண்ணாகிப் போகுமந்தோ, மாளுந்தமிழ்!

4. திக்கெட்டுங் கட்டியர சாண்டுவந்த
செந்தமிழ்க்குத் தன்னாட்டிற் சிறுமையென்றால்,
எக்கெட்டும் இந்தநிலை மாற்றிடாமல்
இருக்குமொரு தமிழனுமே தமிழனன்றோ?
சொக்கட்டான் ஆடிவரும் இந்தியுடன்
சூதினுக்குத் துணையான பலருமோட
கக்கட்டும் வெடிமருந்தாம், தமிழரெல்லாம்
கலந்தபெரும் பீரங்கி, கோட்டைமேலே!

6. ஆட்சித் தலைவர்களின் சொல்லும் செயலும்

1. இணங்காத மக்களிடை இந்தியினைப்
புகுத்துதற்கு நாங்களென்று மிசையோமென்று
இணங்காத மொழிபேசி எம்மிடையே
இந்தியினைத் திணிக்கின்றார் வடக்குநாட்டுக்
குணங்கமழும் காங்கிரசுத் தலைவர் தாமும்
கூடியவர் காலடியில் குவிந்தோர் தாமும்
வணங்காத தமிழர்களை வணங்கவைக்க
வாயொன்றும் செயலொன்று மானநல்லோர்!

2. புகைவண்டி நிலையங்களில் பொறிக்கப்பட்ட
போம்பலகை வரும்பலகை போன்றவெல்லா
வகைவந்த பலகையிலும் வடநாட்டிந்தி;
மற்றுமதில் வேலைசெய்யத் தமிழர்க்கிந்தி

முகையான அஞ்சலகம் முழுதுமிந்தி;
முந்துதமிழ் ஊழியர்க்கு முன்னுமிந்தி;
மிகையான இதுவுமன்றி விண்ணிலேறி
விளம்புகின்ற வானொலியில் வெளியாரிந்தி!

3. அந்தமானில் அகரமுதல் அத்தனைக்கும்
இந்தியென்றே அமைத்துளதாய்அறையுஞ்செய்தி
இந்தவிதம் திட்டமிட்டே எல்லாம் செய்தும்,
இதற்கான குழுவகைகள் எடுத்தமைத்தும்,
இந்திமொழி நூல்நிலையம் எழுப்புதற்கும்
எடுத்தெடுத்துப் பெருநிதியை ஈந்துநிற்கும்
சொந்தமொழி வடநாட்டுத் துணைவர்கூத்து
சொல்லொன்றும் செயலொன்றுமானதன்றோ?

வேறு

4. இன்றில்லை யென்றே ஏமாற்றுவார்கள்;
இன்னும்பல் லாண்டுகள் சென்றபினென்பர்
நன்றில்லா இந்த வார்த்தையை யாரும்
நம்பிடிலோ மோசம்; நாணயமில்லார்!
கன்றில்லா ஆவைக் கறப்பது போலக்
காலத்தைக் கட்டிக் காரியம் செய்வார்;
இன்றில்லையேனும் நாளையுங்கூட
ஏனிந்த இந்தி? ஏன் வரவேண்டும்?

வேறு

5. இந்தியா வெங்கணும் சாலையி னோரம்
இருக்குந் தொலைக்கல் மேலெழுத,
அந்தியங் கொண்டிடும் இந்தியின் எண்ணே
ஆகிடு மென்றதோர் ஆணையிட
மந்த மதியினால் வந்தது மன்றி
மற்றுமிந் நாட்டுக் கணக்கரெலாம்
சொந்த மொழிவிட் டிந்தி பிலேபெயர்
சொல்லி யெழுதவுந் தூண்டுகிறார்.

வேறு

6. சிரங்கொய்து வாழ்த்தியவர் செய்நியைப்போல்
சென்னையினை வெட்டிவிட முன்னே வந்தார்;
இரங்காத சிந்தையராய் இன்றுமுன்னே
ஏற்றநின்றார் 'தெக்ஷிணதேஷ்' என்றபாரம்!

கறங்காத தமிழ்ச்சிங்கம் காத்துமிற்கக்
கண்டதுமே கதிகலங்கிப் பிதற்றுகின்றார்;
தரங்கொய்த வடநாட்டுச் சழக்கர்திட்டம்
தன்மானத் தமிழனிடம் சாயாதென்போம்

7. நாட்டில் வழங்கிடும் நாணயத்தின்பேர்
'நாயாப் பே'யா மாற்றிவிட்டார்
ஏட்டின் வழக்கி லிருக்கின்ற நாளை
எண்ணிக் கணக்கிடும் நாட்குறிப்பேடு
கோட்டிக் கணக்க னெழுத்தென மாறி
கூறுது 'சாக சகாப்த' மென்றே;
திட்டிக் கணக்கிடுந் திங்க ளெலாம் போய்ச்
செத்துத் 'தசுப்புசு' வாகியவே!

8. ஆட்டிப் படைக்க வந்திருப்போர்தம்
ஆணவச் செயலிது காணும்போது,
மேட்டு நிலத்தில் ஆடுமேய்த் தோர்களில்
மிடுக்கன், திண்ணன், மேலெழுந்தே
ஆட்டுக் குழுவுக்கு நானிடும் பேரினை
அகிலமெங்கு முரைக்க வென்றே
கோட்டுக் கறுப்பை 'வெள்ளா(டு)' என்றவன்
கூறிவிடுத்த கட்டளைபோல்,

9. ஓட்டுக்கு வந்தோ ருரைப்பது கேட்டுளம்
உடைந்து நொந்து வேகுதம்மா!
ஆட்டுக் கிடையினைக் காவல் புரிந்திடும்
ஆணையை ஏற்ற நரியினைப்போல்,
கூட்டுக் குளேதமிழ் குலையப் பாய்ந்திடும்
கொடுமை ஈதலால் வேறுமுண்டோ;
நாட்டுப் பலமொழி யாளரை யிங்ஙனே
நலியச் செய்வதும் நன்மைக்கேயோ?

10. பந்தமுடன் நடக்குமிந்த நாடகத்தின்
பகல்காட்சி யொன்றிங்கே பார்ப்பாயன்பா:
வந்தபிற நாட்டினர்க்கு வரவேற்பிய
வளமான தமிழின்றி வறண்ட இந்தி
தந்தயிதழ் வாசியெனத் தமிழர்க்கிங்கே
தாக்கிது போக்கி நின்றார் தறுகணாளர்;
சொந்தநாட்டில் இந்தவிதி கேட்டபின்னும்
சூடின்றித் தமிழரென்போர் தூங்கலாமோ?

7. இந்தியின் உருவுந்திருவும்

1. காலினிலே இரவலான கண்டாங்கி யுடுத்தது;
    மேலினிலே ஏதுமின்றி வீசிவீசி நடக்குது;
தோலினிலே இரவல் சாயம் சொட்டுவிட்டு நெளியுது;
    வாலினிலே சதங்கை கட்டி வளைய வளைய வருகுது.

2. காதுமில்லை கண்ணுமில்லை, காலெத்தே யாடுது;
    தோது சொல்லிக் கோலெடுத்தோர் துணையைக் கொண்டு சாடுது;
பாதுகாவல் செய்து நிற்கும் பண்டிதரைக் கூடுது;
    ஏதுமில்லை என்றவர்தாம் எம்பாலேற்ற நாடுது!

3. எழுத்துமில்லை சொல்லுமில்லை எல்லா மங்கே இரவலே;
    வழுத்து மொழி மங்கைக்குள்ள வாறுமங்கே யில்லையே;
முழுத்து முற்றும் முதநூலாக முடித்தவொன்றும் சொல்லவோ;
    இழுத்துக்கட்டி ஒலியெழுப்பி யெம்மை ஏய்க்கப்பார்க்கிறார்!

4. அதிகமிந்தி பேசுகின்றார்; ஆக இந்தி! என்கிறார்;
    சதிகள்செய்து புள்ளிசேர்த்தார்; தள்ளிக்கணக்கை நோக்கிடில்
விதிகள் ஒப்பப் பேசும்நாடு விளம்பில் நான்கு மட்டிலே;
    இதிலிருக்கும் மக்கள் எண்ணோ இரண்டுபத்து சதமதே!

5. அங்குமிங்கும் சேர்த்துக் கொண்டே அதுவு மீதுமொன்றென
    வங்கு வாதம் பேசுவோரின் வாயை ஓபச் செய்யவே
தொங்குவாலைச் சேர்த்துக் கொண்டு தொகையைக் கூட்டிப் பார்க்கினும்
    தங்கும் எண்ணோ மூன்றுபத்து சதத்தின்மேலே இல்லையே!

6. ஆங்கிலத்தை அயல தென்றே ஆத்திரத்தால் பேசலேன்?
    ஆங்கிலத்தைத் தாயதாக அன்றுமின்றுங் கொண்டவர்
ஈங்கிருக்கக் குடிகளாக, ஏனதிங்கே அயலதாம்?
    வீங்த மீதே அயலதென்றால் வேடயிந்தி உரியதோ?

7. சட்டமென்றே அரசியல்தாம் சுட்டிக்காட்டிச் சொல்பவர்
    இட்ட சட்டந் திருத்தி நின்ற இடங்கள் முற்றும் நோக்குவர்;
எட்டுமட்டும் திருத்திக் கொள்ள இடங்கொடுத்த சட்டமும்
    தெட்டு மிந்தி இல்லை யென்று திருத்தமட்டுந் தட்டுமோ!

8. வடக்கும் தெற்கும்

1. நாட்டுக்குத் தலைநகரம் வடக்கிலன்றி
நாடாளும் தலைவருந்தாம் வடவராகும்
ஓட்டுக்கு வருங்கட்சி காங்கிரசின்
உயர்தலைவர் செயலரெலாம் வடவராகும்
நாட்டுக்குப் பெரியதொரு ஆட்சிதன்னில்
நாளுமுள்ள பேரமைச்சர் வடவராகும்
மேட்டுக்குத் தானெடுத்த தூதருடன்
மேலவராய் ஆளுநரும் வடவராகும்

2. இத்தனையு மெடுத்தெமதாய் ஆக்கியோர்கள்
எமக்கிட்ட வேலையையும் காணுவீரே:
சொத்தனைத்துங் காத்துயிரும் நாடுமங்கே
துப்பாக்கி முனையினிலே காப்பதற்கும்
எத்தனையும் இரந்துவாங்கிக் கொண்டுவந்து
எடுத்தெடுத்துத் திட்டமென்று வடக்கதனை
முத்தனைய நாடதாக்க, இந்தியெனும்
மொழிவளர்க்கக் கொடுப்பதற்குந் தென்னவராம்!

3. அடுத்தடுத்தே யுள்ளதான இரண்டுவீட்டின்
ஆண்பிள்ளை இருவருமாய்க் கூடினராம்;
துடுக்குடைய வடக்கத்தி வீட்டுமகன்
சொன்னனும், "தென்னவனே ஒன்றுகேளாய்
கடுக்குடைய முறுக்கவலைக் கொண்டுவா நீ
கலங்காதே யுமிகொண்டுவருகிறேன் நான்
தொடுத்திரண்டும் சேர்த்தூதி நான் சுவைப்பேன்
சுகம்பெறலாம் பார்த்துநீயும்" என்றுதானே!

4. அன்னதைப்போல் இருக்குமிந்த வடவர்கூத்தை
அறிந்திருந்தும் தமிழகத்துக் காங்கிரசார்,
மின்னதைப்போல் உருவெடுத்துப் பெருங்கரியும்
மிரண்டிடவே கடித்ததனைக் கொல்லுநாகம்
மின்னதைப்போல் அழிந்திடவே படங்கிழிக்கும்
மிடுக்குடைய மயிலதுவும் மீண்டுமீண்டும்
தன்னிறத்தை மாற்றிவரும் ஓந்தியிடம்
தடதடத்து நிற்பதுபோல் தாமுமானர்!

5. வடக்கொன்றும் வாழவில்லை என்றுநித்தம்
வாய்கிழியப் பேசுவோரே சிந்தியீரோ?
படக்கொண்டு கோலோச்சி வாழ்வார்போல்
பருந்தூரத் தில்லியினைத் தலையாக் கொண்டார்;

நடக்கின்ற பதவிகளில் நல்லதெல்லாம்
நாட்டாண்மை யுள்ளதெல்லாம் தாமேகொண்டார்
தடங்கொண்ட திட்டமங்கே; அன்றியிங்குத்
தாண்டிவரும் இந்தியையுங் காண்கிலீரோ!

6. தமிழ்நாட்டுத் தலைவர்களை இழித்துக்கூறித்
தாக்குகின்ற அளவுக்கு வளர்ந்துவிட்ட
இமிழ்திரையின் நலமில்லா வடக்குநாட்டின்
எத்தர்தாம் செய்கின்ற இந்தியேற்றம்
தமிழ்நாட்டுத் தலைமேலே ஏற்றுங்கல்லாம்;
சார்ந்தபெரும் ஆந்திரமும் மற்றநாடும்
அமிழ்ந்திடவே சூழ்ச்சிசெயும் அவர்களாட்டம்
அடங்கவகை செய்திலமேல் ஆபத்தாகும்!

9. இனிய தமிழ்மேல் இந்தி ஏற்றம்

1. எழுத்தில்லா மொழிய தொன்றே
இந்த நாட்டுத் தலைமையாம்;
எழுத்திரவல் கொண்டதோடு
இருந்துவிட்டால் தொலையட்டும்;
வழுத்திடவோ ரிலக்கியந்தான்
வைத்துவாழா மொழிதன்னை
இழுத்திழவு கொட்டிநிற்கும்
இழிவுகண்டு வேகுதுள்ளம்!

2. இந்தநாட்டு மொழிகளென்றே
ஏற்றுக்கொண்ட பதிநான்கில்
இந்திமட்டும் தலைமையென்றே
எழுதவில்லை சட்டத்தில்
அந்தமட்டும் புரிந்துகொண்டால்
அவர்கள்வேடம் புலனாகும்;
வந்தமட்டும் சுருட்டிக்கொள்ள
வடவர்செய்யும் பெருமோசம்!

3. தலைமையன்று, பொதுமையென்று
தட்டுக்கெட்டுச் சொன்னாலும்
நிலைமையெல்லாம் ஒன்றேயென்று
நேரிற்கண்ட மக்கள்முன்
தலைமையோரே இந்திதன்னை
தாங்கிநின்று நாளெல்லாம்
புலைமையாலே புகுத்தநிற்கும்
புன்மையென்ன புன்மையே!

4. நாட்டிற்பேசும் மொழியைவைத்து
நாட்டைப் பிரித்தே எல்லேயிட்டு,
நாட்டுக்கந்த மொழியைத்தானே
நாயகமாகச் செய்துவிட்டு,
கூட்டுக்குள்ளே வந்துநுழைந்து
கொள்ளையடிக்க இந்திதன்னை
ஆட்டிவிட்டே, நாட்டுமொழியை
அழிக்கவந்தார் ஆட்சியாளர்!

5. நாட்டுக்கு நாடு போகுமஞ்சல்
நடுவுக்குநாடு போடுமஞ்சல்
ஏட்டுக்கு மட்டும் இந்தியென்றே
இட்டதுசட்டம்; ஆனலிங்கோ
வீட்டுக்குவீடு இந்தியென்றே
வேற்றுமொழியின் நாட்டினுள்ளே
போட்டிக்குவந்து புகுத்தவந்தார்
போதும்; இதுவோ மக்களாட்சி?

6. பள்ளிச்சிறுவர் படிக்கவென்றே
பதுங்கிப்பதுங்கி நுழைக்கின்றார்;
பிள்ளைக்கிந்திப் படிப்பெதற்கு,
பிஞ்சுநெஞ்சு பொறுக்காது
கொள்ளுந்தமிழும் ஆங்கிலமும்
குறையை நிறைக்கப்போதுமென்றால்,
கொள்ள மறுத்தே திணிக்குமாட்சி
குடியரசாம் பேர் சொல்லுகின்றார்!

7. நாட்டுத் தொடர்பு கொள்ளுதற்கும்
நன்றாகாத இந்திதன்னை
போட்டுத்தொலைக்க அரசியல்தாம்
புதுக்கிவேறு சட்டம்செய்ய
நாட்டுப்பெரியோர் கூட்டங்கூடி
நாளுமிங்கே கேட்கும்போது
ஓட்டைப்பானை யொத்தஎழுத்தில்
உயர்ந்தசெம்மொழி யாக்கெனலாமோ?

8. ஒருவன் பிறனில் மாறுபட்ட
உருவுந்திருவும் காட்டிநிற்க
கருவில் உதித்த முகத்தையிந்தக்
கற்றமேதைகள் ஒன்றுசேர்க்க
அறுவை செய்தே மூக்குங் கண்ணும்
அங்குமிங்கும் மாற்றிவைத்தே
ஒருவன்போலச் செய்கவென்ற
ஊறுபோதம் ஊழித்தியாம்.

9. நாட்டுமொழிகளை ஓட்டையெழுத்தில்
நாட்டிவிட்டால் ஒற்றுமையென்று
போட்டுக்கணக்கைப் புரட்டிப்பார்த்துப்
பூரித்துநிற்கிருர் போதைமிக்கார்
வேட்டு மருந்திஞல் கோட்டையைக்கட்டும்
விதத்தைக்கண்ட மேதைகள்போல்
நாட்டுக் கிடையிற் பிளவையூட்டி
நாசம்புரிய முனைந்துவிட்டார்?

10. எச்சரிக்கை

இத்தனையும் எதற்கென்று பார்த்தோமானுல்
இந்தியினைப் புகுத்தியெம தின்பம்பண்பு;
அத்தனையும் அழித்தேறி யதன்மேல்நின்றே
ஆணவத்தைக் கோட்டையாக்கியாட்சிசெய்து
முத்தனைய தமிழிருந்த இடத்தைமூடி
மூங்கைகளாய்த் தமிழினத்தை யாட்டிவைக்கும்
எத்தன மென்பதுகாண்பாய், தமிழாநீயும்
இனிப்பொறுத்தா விடார்ப்படுவா யெழுந்துவாராய்

11. போரணி

1. அயர்ந்த வேளையில் ஆருயிர்கொண்டிட
ஆர்த்தெழு தியன் அன்னதகைமையில்
உயர்ந்த தீந்தமிழ் ஊறுமிந்நாட்டினில்
ஓடிவந் திந்தியுள்ளே புகுந்ததை
அயர்ந்திடாத நம் அந்தமிழ்க் காவலர்
அன்றே கண்டெமையண்டி யெழுப்பியே,
உயர்ந்த தம்படை ஒல்லையிற் சேர்த்ததை
ஓட்டிய பெரியோரையே வாழ்த்துவோம்!

2. இன்பந் தங்கிடு மீடிலா நாட்டினில்
ஏதிலா தாரெடுத்தெறிதியென,
அன்பு பொங்கிடு மாரருள் மாந்தரை
ஆணவப் பேய தாட்டிட வந்ததாய்
முன்பு வந்திடிமுட்டிய இந்தியை
மோதியோடென முட்டிய போரினில்
முன்பு நின்றுயிர் முற்றிய காளைகள்
மூரி வெங்கனல் ஆவி வணங்குவாம்

3. மன்றம் மூன்றுயர் மறைமலையடிகளார்,
குன்ற வந்திடு குறைமலி இந்தியே
பொன்று மீங்கிது: பொதுமொழியாகுமோ
ஒன்று போர்க்கொடி ஏற்றினு ரன்றரோ!

4. வணிகர்; தொழிலவர், மாண்புள நாவலர்,
பணிபல செய்திடும் பற்பல சங்கத்தார்,
பிணிநீக் குழவரும் பெண்கள் குழாங்களும்
அணியணி யாகவே ஆற்றிடும்போரிதே

5. செய்தித் தாள்களும் சிறந்த அறிஞரும்,
பொய்யில் புலவரும் பொதுநலக் கலைஞரும்
கையும் கருத்துமாய்க் காரியம் செய்யினும்,
உய்ய வழியிலா ஊழியர் யாவரும்,

6. இன்னும் ஞாலத்தின் எல்லாத் தமிழரும்
உன்னும் மற்றை யுயர்மொழித் தோழரும்,
பன்னும் பற்பல நாட்டுப் பெரியரும்
முன்னே நின்று முனைந்திடு போரிதே

12 முரசு

1. கட்சிகளால், சாதிகளால், கழறுமற்றக்
காரணத்தால் பிளவுபட்ட தமிழா, இன்று
வெட்சியுடன் தமிழர்கோட்டை வேலிக்குள்
வந்துவிட்ட இந்தியினை விரட்டுதற்குக்
கட்சிகளை விட்டுயர்ந்து தமிழைக்காக்கக்
கட்டுண்ட பெரும்படையாய் நொச்சிசூடி
மட்சிதறல் போலெற்றி மலந்துதாக்க
மறத்தமிழா நேரமிது, வந்துசேர்வாய்!

2. செந்தமிழின் இனிமையெல்லாம் சிறக்கப்பாயும்
தேன்தமிழர் நாட்டின்பேர் சென்னையென்று
நந்தமிழின் இனிமையெலாம் நலியச்செய்யும்
நலங்கெட்ட சூழ்ச்சியிது நடத்துகின்ற
சந்தமிலா வடநாட்டுச் சதியின்திட்டம்
சரிகவெனக் காலெடுத்த தமிழரொடு
பந்தமுடன் ஓடிவந்து படையிற் சேரா
பையலில்லை நாட்டிலெனப் பாய்ந்துவாரீர்!

3. வளமிகுந்த தமிழனுக்கு மறலியாக
வந்ததடா இந்தி இனி வாழ்வுபோதும்;
களம்புகுவோம் இனித்தறியேம், காப்போம்தமிழ்:
கண்டுவிட்டோம் ஆளவந்தார் கருத்தையெல்லாம்
மளமளெனத் தமிழர்படை மண்டி, ஏறி
மார்தட்டிக் களம்புகுதல் வேண்டும்வேண்டும்!
களத்தலைவர், படைத்தலைவர் கிளம்பிவிட்டார்
காளைகளே களம் நோக்கிப் பாய்ந்துவாரும்!


ஜமீன்

மாளிகை

நாடக உறுப்பினர்

❖

சாமித்துரை	—	வல்லியூர் ஜமீன்தார்
கண்ணம்மாள்	—	ஜமீன்தார் மனைவி
செல்வநாயகம்	—	ஜமீன்தார் மகன்
வீரப்பன்	—	ஜமீன் விவசாயி
மாணிக்கம்	—	வீரப்பன் மகன்
அல்லி	—	வீரப்பன் மகள்
முனியாண்டி	—	ஜமீன்தாரின் வேலைக்காரன்

மற்றும், ஜமீன்ஏஜண்டு, ஜமீன் கணக்கப்பிள்ளை, டாக்டர், போலீஸ்காரர்கள், குடியானவர்கள், ஊர்ப்பெரிய மனிதர்கள்.

இரா. செழியன்

காட்சி : 1

இடம் : மாளிகையின் ஒரு ஹால்.

உறுப்பினர்: விழாக் காண வந்திருப்போர்.

நிகழ்ச்சி: விழாவின் சிறப்புப் பற்றிப் பேசப்படுதல், சங்கரலிங்கம், ஒரு நிலைக் கண்ணாடியின் முன்நின்று பார்த்துக்கொண்டே பின்னால் வருகிற கணக்குப் பிள்ளையின் மீது மோதிக் கொள்கிறார்.

கண: மாளிகையின் அழகைப் பார்க்கும் முயற்சியில், உமது மண்டையை உடைத்துக் கொள்ளுவீர் போலிருக்கிறதே!

சங்: நானும் காலையிலிருந்து சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். கால் கடுத்துவிட்டது, கண்களும் வலியெடுத்துவிட்டன.

கண: மாளிகை எப்படியிருக்கிறது?

சங்: மாளிகையா? அரண்மனை என்று சொல்லுங்கள். பொன்னையும் இரத்தினத்தையுமே வைத்து இழைத்துவிட்டார். ஒவ்வொன்றையும் பார்த்துக் கொண்டே இருக்கலாம்போலிருக்கிறது. பளிங்கு படிக்கட்டு, பனிபோன்ற சுவர்கள், கண்ணாடி கதவுகள் கண்ணைக் கவரும் ஓவியங்கள், விருந்துண்ணும் கூடம் வேடிக்கை பார்க்கும் மாடம், கலா மண்ட

பம், நிலாமுற்றம், நீலவொளி வீசும் விளக்குகள் அடாடா!

கண: இவ்வளவையும் சேகரிக்க எவ்வளவு கஷ்டமென்பது உங்களுக்குத் தெரியுமா? இந்தக் கட்டிடத்துக்குரிய சலவைக்கல் இத்தாலி தேசத்திலிருந்து வந்தது. மரச்சாமான்கள் நார்வே நாட்டில் வாங்கப்பட்டன. நிலைக் கண்ணுடிகள் பெல்ஜியத்தில் செய்யப்பட்டவை. மின்சார சாமான்கள் ஜெர்மனியிலிருந்து, விருந்து மேஜை அமெரிக்காவிலிருந்து, அழகுப் பொம்மைகள் பிரான்சிலிருந்து இதைக் கட்டிமுடித்த காண்ட்ராக்டர் ஒரு இங்கிலீஷ் கம்பெனியார்.

சங்: இதற்கு ஏராளமான பணம்...

கண: செலவாயிற்று, அந்தப் பணம் எங்கிருந்து வந்தது என்று மட்டும் கேட்டுவிடாதீர்கள்.

சங்: அதை யார் கவனிக்கப் போகிருர்கள். நாலாபக்கத்திலிருந்தும் சாமான்கள் வந்திருக்கிற மாதிரி நாலாவழியிலும் பணம் வந்திருக்கும். நமக்கேன் பெரிய இடத்தைப் பற்றிய பேச்செல்லாம்.

கண: ஆமாம். யாராவது கேட்டால்கூட ஆபத்து. அதோ வருகிருனே பார்த்தீர்களா? அவன் தான் ஜமீன்தார் மகன் செல்வநாயகம்...

சங்: அமெரிக்காவுக்குப் போயிருந்தானே எப்போது வந்தான்.

கண: அவன் வருவதற்காகத்தான் இந்த விழாவையே ஒத்திப்போட்டிருந்தார்கள். வாருங்கள் போவோம். (போகின்றனர்.)

(விழாவுக்கு வந்தவர்களை ஜமீன்தாரின் மகன் செல்வநாயகம் வரவேற்று உபசரித்துக்கொண்டிருக்கிருன். அப்போது ஏஜண்ட் அங்கு வந்து)

ஏஜண்ட்: குடியானவர்கள் வந்திருக்கிருர்கள். வேட்டித் துணிமணி கொடுக்கவேண்டும்.

செல்: கொடுத்து அனுப்புவதுதானே!

ஏஜ: சின்ன எஜமான் கையால் கொடுக்க வேண்டும்.

செல்: சரி, சீக்கிரம் அழைத்து வாருங்கள். (ஏஜண்ட் திகைக்கிருர்)

செல்: ஏன் தயங்குகிறீர்கள்.

ஏஜ: அவர்கள் எப்படி உள்ளே வரமுடியும்?

செல்: எல்லோரையும்போல் காலால் நடந்துதான். ஏன்? இந்த நல்ல நாளில் வாயில் தேடிவந்திருப்போரை உள்ளே அழைக்காமலிருப்பது அவமதிப்பதாகும். உங்களுக்குப் பயமாயிருந்தால் நானே போய் அழைத்து வருகிறேன். அவர்களுக்கும் விருந்து இலைகள் போடுங்கள்.

(செல்வநாயகம் சென்று அவர்களை அழைத்துவந்து விருந்து செய்விக்கிருன். மற்ருெரு சார்பில் விருந்துக்கு வந்த ஜமீன்தரப்பினர் அதை வெறுத்துப் பேசுகின்றனர்.)

ஒருவர்: என்ன அநியாயம்.

2-வது: இது நம்மை அவமானப்படுத்துவதாகும்

3-வது: மாளிகையில் குடியானவர்களுக்கு விருந்து நடக்கிறது.

ஒருவர்: இதற்குப் புதுக்கட்டிடம் எதற்கு திறப்புவிழா எதற்கு?

2-வது: எல்லாம் பரம்பரையாகச் சொத்து வந்திருந்தால் தராதரம், கௌரவம் தெரியும். எங்கபாட்டனுர் காலத்தில் இந்த ஜமீன் இருந்த இடம் தெரியாமல் இருந்தது.

3-வது: நான் விருந்துக்கு தங்கப்போவதில்லை.

2-வது: நான் கிளம்பப் போகிறேன். காரை எடுக்கச்சொல்கிறேன்.

1-வது: நானும் உங்ககூட வந்துவிடுகிறேன்.

3-வது: எல்லோரும் போகவேண்டியதுதான். (ஜமீன்தார் வருகிருர்.)

ஜமீன்: யாரும் போகவேண்டியதில்லை.

1-வது: இல்லை, இப்படி காற்ருட உலவிவரலாமென்று கிளம்பினேும்.

ஜமீன்: விருந்துக்கு இலை போட்டாகிவிட்டது.

3-வது: அதேபோல் மாளிகைக்குள் எங்களுக்குச் சமமாய், எங்களைவிட முதன்மையாய் குடியானவர்களுக்கும் உபசாரம் நடக்கிறது.

ஜமீன்: நடந்தது நடந்துவிட்டது என்ன செய்யலாம். வாருங்கள். விருந்துக்கு வந்துவிட்டு இப்படிச் செல்லலாமா? தங்கிவிட்டுப் போங்கள். உங்களுக்குத் தனியாக விருந்து ஏற்பாடு செய்திருக்கிறேன்.

2-வது: இருக்கட்டும் இருக்கட்டும். அதையும் சாப்பிட ஊருக்குள்ளிருந்து யாராவது கிடைக்காமலா போகப்போகிருர்கள்.

ஜமீன்: நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன். தங்கமுடியாது என்று நினைப்பவர்கள் போகலாம். ஆனல் அவர்கள் மறுபடியும் என் மாளிகைப் பக்கம் அடியெடுத்து வைக்கக்கூடாது.

(மற்றவர்கள் திகைக்கிருர்கள். ஜமீன்தார் திரும்பிக்கொள்கிருர்.)

2-வது: ஒரு புறம் பெருமைக்கு அவமானம்! குலத்துக்குத் தகாதது! மற்ரெரு புறம்நமக்கே ஆபத்து! என்ன செய்வது.

1-வது: விருந்தைச் சாப்பிட்டுவிட்டே போகலாம்.

(போகிருர்கள். அவர்களுக்குப் பின்னல் கைத்தடியை சுழற்றிக்கொண்டு சாமித்துரை போகிருர்.)

காட்சி 2

இடம்: குடிசை

உறுப்பினர்: மாணிக்கம், வீரப்பன், அல்லி, குடியானவர்கள்.

நிகழ்ச்சி: விழாவுக்குச் சென்ற குடியானவர்கள் பெற்ற பரிசுகளுடன் திரும்பி வருகின்றனர். மானிக்கம் குடிசையின் வாசவில் இருந்தவாறே அவர்களுடன் பேசுகிருன்)

மாணிக்: இந்த வருஷம் பொங்கல் மிக முன்னதாகவே வந்துவிட்டது போலிருக்கிறதே!

ஒருவன்: புது மாளிகைக்குப் போனதுக்காக ஜமீனில் குடுத்தாங்க. நீதான் வரவில்லையே!

(வீரப்பன் வந்து)

வீர: ஏஜண்டு கூட கேட்டாரு. "எங்கேடா வீரப்பா! உன் மகனைக் காணே" மென்று அவனுக்குக் காய்ச்சலன்னு சொல்லிவைச்சேன். இந்தா உனக்குக் கொடுத்த வேட்டி துண்டு!

மாணி: எனக்கு வெண்டாம் நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்.

வீர: ஜமீன் கிட்டபோறதுக்கு வரலேண்ணே, இன்னைக்குப் புதுத் துணி கொடுத்தால்வேண்டாங்கிறே! என்ன வெறுப்போ...

மாணி: வெறுப்பில்லை. நான் கட்டியிருக்கிற வேட்டிகூட கிழிந்துவிட்டது...

வீர: பின் ஏன் வேண்டாங்கிறெ! பசி எடுத்தவனுக்குச் சோத்தைப் போட்டால் சாப்பிடமாட்டேன் என்று சொல்வதைப் போலிருக்கிறது.

மாணி: உண்மைதான். ஆனல் பத்துநாள் சாப்பிடாமல் பசியால் வாடினுல்கூட, பிச்சைக்யெடுக்க நான் போகமாட்டேன்.

ஒரு: பிச்சையா? அவர்களாகச் சந்தோஷப்பட்டு இனமாகக் கொடுத்தது. அதை வேண்டாமென்று சொல்லுவது ஜமீனை அவமதிப்பதாகும்.

மாணி: அவர்களைச் சந்தோஷப்படுத்தி, அவர்களுக்காக மனம்வந்து கொடுப்பதைப் பெற்று திருப்தி அடையவேண்டிய துர்பாக்கிய நிலையில் நாம் இருக்கிறேம். நமக்கென்று தனியாக வாழ்வு கிடையாது. நம்மைப்பற்றிய கவனம் வருஷத்தில் ஒன்று அல்லது இரண்டு தடவைகள் அவர்களுக்கு வரும்! அதற்காக வருஷம் பூராவும் மாடுபோல உழைத்து மண்டியிட்டு வாழவேண்டும்.

வீர: எல்லாமே உனக்கெனத் தனி நியாயம் தான். உன்னைத் தவிர மற்றவர்களெல்லாம் வந்திருந்தார்கள். இனும்தான் வேண்டாம். வேடிக்கை பார்க்கக் கூடவா வரக்கூடாது மாளிகை எவ்வளவு பிரகாசம்...

மாணி: பிரகாசம்! நானும் இங்கிருந்து கொண்டே கவனித்தேன். அங்கே ஒளி! இங்கே இருள்! அங்கு குதூகலம்! ஆரவாரம்! விருந்து வினேதங்கள் கண்கொள்ளாக்காட்சி; இங்கே ஏழ்மை, துயர், கொடுமை, கண் கலங்கும் நிலை இவ்வளவு வேதனைகளைத் தாங்கிக் கொண்டு அங்கு நடக்கும் வேடிக்கைகளை எப்படிப் பார்க்க முடியும். மாளிகையா அது! நம்மைப்போன்ற ஏழைகளின் எலும்பையும் இரத்தத்தையும்குழைத்துக்கட்டப்பட்டகொடுமைக் கோட்டை.

வீர: மாணிக்கம்! இப்படித் தாறுமாருகப் பேசாதே. அவர் ஜமீன், நாம் அவருடைய குடிபடைகள். அவர் நன்ருக வாழ்ந்தால்தான் நமக்கும் ஏதாவது பிழைக்க வழியிருக்கும். வீணுக ஆத்திரப் படும்படி பேசி சேரியில் விரோதத்தை வளர்க்காதே! அது பொல்லாதது!

மாணி: (அங்கே குழுமியுள்ள மற்றவர்களைப் பார்த்து) வேடிக்கை பார்க்கப்போனீர்களே! நீங்கள் என்னதான் பார்த்தீர்கள்? அந்த மாளிகையைக் கட்டிமுடிக்க கல்லும் மண்ணும் சுமந்து கஷ்டப்பட்டோம்; மண்மேடு மாளிகையாயிற்று. ஆனல் கட்டிமுடித்ததும், எட்டி நின்று பார்க்க முடியுமே தவிர கட்டிடத்திற்குள் நாம் நுழைய முடியாது.

1-வது: அதுதான் கிடையாது. மாளிகைக்குள் நாங்களும் போனேம்.

மாணி: மாளிகைக்குள்ளா? கட்டுக்காவல்களை மீறிக்கொண்டா?

1-வது: நாங்களாகப் போகவில்லை. கட்டாயப் படுத்திக் கூப்பிட்டதின் பேரில் போனேம்.

2-வது: எங்களுக்குக் கூட விருந்துச்சோறு கிடைத்தது.

3-வது: ஜமீன்தார் மகன்தான் எங்களைக் கூப்பிட்டுக்கொண்டுபோனர்.

2-வது: நான் கும்பிட்டபோது அவரும் திரும்பி எனக்குக் கும்பிடு போட்டார்.

1-வது: ஆச்சரியமாக இருந்தது.

மாணி: ஆச்சரியமில்லே? ஏதோ சூழ்ச்சி! இதில் ஆபத்து இருக்கிறது.

வீர: கண்டிப்பாக நடத்தினுல் கொடுமை என்கிருய், அன்பாக நடத்தினுல் ஆபத்து என்கிருய்...

மாணி: கொடுமை வெளிப்படையாக இருக்கிறது. ஆனுல் அன்பாக இருப்பதுபோல் நடிப்பது நம்மை ஏமாறச் செய்யும் சூழ்ச்சி! நாம் இதில் மயங்கிவிடக்கூடாது.

1-வது: ஜமீன் எப்படியோ? அவருடைய மகன் நல்லவர் என்றே தெரிகிறது.

மாணி: விஷப்பாம்பின் குட்டி நல்ல ஜந்துவாகிற கதையை நான் எங்கும் கேட்டதில்லே.

வீர: ஜமீனேப்பற்றிய பேச்சு வந்தாலே, உன்னுடைய பங்காளியைப்பற்றி பேசுவதுபோல உனக்கு ஆத்திரம் வருகிறது.

மாணி' ஒருவகையில் என் சொத்தை எடுத்துக் கொண்ட பங்காளிதான் இந்த ஜமீன்தார்.

(கூடையுடன் அங்கு வந்த அல்லி அங்கு குழுமியிருந்தோரைப் பார்த்து)

அல்லி: அண்ணன் பேசுறதெக் கேட்க ஆரம்பிச்சுட்டீங்கள்ளே! இனிமே நீங்க வேலேக்குப் போனமாதிரிதான்.

1-வது: ஆமாண்டா! எம்மா வேலே கிடக்கு, அதை மறந்துட்டோமே! வாங்க போகலாம்.

(எல்லோரும் போகின்றனர். மாணிக்கம் ஒரு பக்கம் செல்கிருன். இரு திசையும் மாறிப் மாறிப் பார்த்து; சிலேபோல் நிற்கும் கும் தந்தையிடம்)

அல்லி: அப்பா! அம்மாவுக்கு கஷாயம் குடுத்திருக்கிறேன்...

வீர: இப்போ காய்ச்சல் எப்படியம்மா இருக்குது?

அல்லி: விட்டிருக்குது. உச்சிவேளேக்குக் கஞ்சி வைத்திருக்கிறேன். ஊத்திக்குடுங்க. நான் பூ வித்துவிட்டு வருகிறேன்.

வீர: சீக்கிரமா வந்திடு அல்லி! நேத்து ஒரு செல்லாத காசு வாங்கி இருக்கிறியே. பார்த்து வாங்கு.

(கூடையுடன் அல்லி செல்கிருள். குடிசைக்குள் வீரப்பன் போகிருன்.)

காட்சி-3

இடம்: மாளிகையின் ஒரு சார்பு.

உறுப்பினர்: கண்ணம்மாள், செல்வநாயகம், ஜமீன்தார் சாமித்துரை.

நிகழ்ச்சி: மகனே அழைத்துக் கண்ணம்மா பேசிக்கொண்டிருத்தல்.

கண்: செல்வா!

செல்: அம்மா!

கண்: காலேயில் அப்பாவைப் பார்த்தாயா?

செல்: அவர் இருக்கும் அறைப்பக்கமே போகவில்லே.

கண்: செல்வா! வந்து பத்துநாள் கூடச் சரியாக ஆகவில்லே. அதற்குள் வீட்டில் சண்டையிட்டுக்கொள்கிருயே! உன் பிடிவாதம் இன்னும்போகவில்லே.

செல். நீங்களே சொல்லுங்களம்மா! குடியானவர்களே உள்ளே அழைத்து விருந்து கொடுத்ததில் என்ன தவறு இருக்கிறது. நமக்காகக் கஷ்டப்படுவதற்கு மட்டுந்தானு அவர்கள் இருக்கிருர்கள். நம்முடைய மகிழ்ச்சியில் நல்லகாரியங்களில் அவர்களுக்குப் பங்கு கிடையாதா?

கண்: அப்பாவுக்குப் பிடிக்காது என்று தெரிந்திருந்தும் ஏன் அப்படிச் செய்கிருய்? மற்றும் விருந்துக்கு வந்திருந்தவர்கள் தங்களே அவமானப்படுத்தியதாக நினேக்கிருர்கள்.

செல்: அவர்கள் நினேத்தது சரியோ தவருே எனக்குச் சரியென்று பட்டதைச் செய்தேன். இவ்வளவு கோப தாபங்கள் வருமென்று தெரிந்திருந்தால் இன்னும் பத்து வருஷங்களுக்கு இந்தப் பக்கமே வராமல் இருந்திருப்பேன்.

கண்: அப்படிச் சொல்லாதே கண்ணு! நீ எப்பொழுது திரும்பி வருவாய் என்று எவ்வளவு ஏங்கிக் கிடந்தேன் தெரியுமா? உன்னேப் பிரிந்தது கண்பார்வையை இழந்ததுபோலிருந்தது. மீண்டும் ஒளிபெற்று உன்னேப் பார்த்துக் களிப்படையும் நேரத்தில் மறுபடியும் இருட்டில் என்னேத்தள்ளி விட்டுப்போகாதே!

செல்: நீங்கள் இப்படிச் சொல்லுகிறீர்கள். ஆனுல் ஜமீனில் நடக்கும் ஒவ்வொரு காரியமும என்னே விரட்டியடிக்கின்றன.

கண்; எது எப்படிப் போனுலும் அப்பாவின் மனங்கோணுமல் நடந்து கொள்.

செல்; அப்பா செய்வதில் தவறு இருந்தால் நாம் தானே திருத்தவேண்டும்.

(சாமித்துரை வருகிறார்)

சாமி: அப்பா செய்ததில் அப்படி என்னடா மகா தவறைக் கண்டு பிடித்தாய். நேற்று நீ செய்த அடத்தக்கு மற்ற இடமாயிருந்தால் காரி யுமிழ்ந்து வெளியேறியிருப்பார்கள். என்னு டைய செல்வாக்குக்குக் கட்டுப்பட்டு அடங்கி யிருந்தார்கள்.

செல்: அது அவர்கள் கோழைகள் என்பதைக் காட்டுகிறது.

சாமி: உனக்குப் பிடிக்காதபடி நடந்தால் அது தவறு, உன் சொல்படி நடந்தால் அது கோழைத் தனம் அவ்வளவுதானே!

செல்: நான் சொல்லுகிறபடி மற்றவர்கள் நடக்க வேண்டும் என்று சொல்லவில்லையே! மற்றொருவன் முதுகில் ஏறிச் சவாரி செய்வது, இல்லையானால் அவன் முன் மண்டியிட்டு வாழ்வது இந்த இரண்டைத் தவிர உலகில் வாழவேறு வகை கிடையாதா? அவரவர் மன துக்குச் சரியென்று பட்டபடி அதே சமயத் தில் மற்றவர்களை அடக்கியாளாமல் இருப்பது தான் சரி!

சாமி: நீ பேசுகிற வேதாந்தமெல்லாம் நடை முறையில் வராது.

செல்: நடைமுறையில் இல்லாததால் தான் இவ்வளவு தொல்லைகளும்.

சாமி: மகனைப் படிக்க வைத்ததன் பலன் அப்பாவிடமே எதிர்த்துப் பேசுகிறான்.

செல்: அப்பா! நீங்கள் கோபிக்காதிருந்தால் நான் ஒன்று சொல்லுகிறேன்.

சாமி: கோபித்துக் கொண்டுதான் என்ன பயன் எல்லாம் உனக்காகத் தெரிய வேண்டும்

செல்: இந்த ஜமீன் முறையே எனக்குப் பிடிக்கவில்லை.

சாமி: கண்ணம்மா கேளடி! உன் மகனுக்கு ஜமீன் முறையே பிடிக்கவில்லையாம். எங்கே சந்நியாசம் போவதாக உத்தேசமாம்?

செல்: சென்னை அல்லது பெங்களூர்......

கண்: மறுபடியும் வெளியூருக்கா?

சாமி: அவனென்ன செய்வான். இவ்வளவு நாளும் அவனிஷ்டப்படிச் சுற்றவிட்டது நம் மேல் பிசகு. இப்பொழுது கிராமமே வெறுப் பாகி விட்டது, ஜமீன் முறையே பிடிக்கவில்லை. பட்டணத்தில் போய் உட்கார்ந்துகொண்டு குஷாலாய் செலவு செய்ய வேண்டும். இதற் குத்தான் இந்த வேதாந்த விசாரணையெல் லாம்.



செல்: உங்களிடமிருந்து ஒரு காசு கூட எனக்கு வேண்டாம்.

சாமி: வரப்போகிற மாமனார் வீட்டுச் சொத்து கரையும்

செல்: இல்லை! நானாகவே வேலை செய்து பிழைத்துக் கொள்வேன்!

சாமி: வேலை செய்வதா?

செல்: இதுவரை உங்களிடம் நான் சொல்ல வில்லை. ஒரு சமயம் அமெரிக்காவில், ஒரு சூழ் நிலை ஏற்பட்டபோது தொழிற்சாலையில் கூலி யாக வேலை செய்திருக்கிறேன்.

கண்: நீயா? உனக்கேண்டா அந்தக் கஷ்ட காலம்.

சாமி: என்னுடைய மகனா கூலிவேலை செய் தான்.

செல்: உங்களுடைய மகன் தான். அதுமட்டு மல்ல, உலகில் எல்லா இடங்களிலும், கூலி வேலை செய்து பாடுபடும் ஒவ்வொருவனுக் கும் அப்பா அம்மா இருக்கத்தான் செய்கிறார் கள்.

சாமி: வேடிக்கை பார்க்கப் போனவன் கூலி வேலை செய்யக் கிளம்பினால், அதற்கு நாமென்ன செய்ய முடியும்?

செல்: நானாக ஏற்றுக் கொண்டதல்ல, அசந் தர்ப்பத்தால் அவ்வாறு நேர்ந்தது. காரணம் என்னிடமிருந்த பணத்தை இழந்துவிட்டேன். அதனால் ஹோட்டலுக்கு-மற்ற கொடுபட வேண்டிய வகையினங்களுக்குப் பணம்

தேவைப் பட்டது. உங்களுக்கு எழுதினல் கூட பணம் வந்து சேர இரண்டு வாரமாகும். அப்படி எழுதவும் எனக்கு அவமானமாகத் தோன்றியது. அந்தச் சமயத்தில் ஒரு மோட்டார் தொழிற்சாலையில் கூலியாட்கள் எடுப்பதாகக் கேள்விப்பட்டேன். உடனே நானும் ஒரு அன்றாடக் கூலியாக வேலைக்கமர்ந்தேன். காலையிலிருந்து மாலைவரை தொழிற்சாலையில் உழன்றேன். வேலையிலிருந்து திரும்பும் பொழுது தான் கைவிரல்களின் நோவு, கால்களிலுள்ள சோர்வு, கண்களிலும் கருத்திலும் உள்ள அலுப்பு இவை தெரியும். அப்பொழுது தான் தெரிந்தது வேலை செய்து வயிர் வளர்ப்பது எவ்வளவு கடினமானதென்று. இரண்டு மாதங்கள் அவ்வாறு இருந்தேன்.

சாமி: அப்படியானல் மோட்டார் தொழிலில் நேரடியான பழககம் இருக்கிறது என்று சொல்.

செல்: ஆம்! பின் அவசியமில்லையென்ற போதிலும், ஓய்வு நேரத்தில் அதை முழுமையும் கற்றுக் கொண்டேன்.

சாமி: மெத்த சந்தோஷம். நாளைக்கே தொடங்குகிறேன் ஒரு மோடடார் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கான காரியங்களை.

செல்: ஆரம்பித்து

சாமி: உன்னை டைரக்டராக ஆக்கி, உன் பொறுப்பில் விடுகிறேன். உனக்குத்தான் ஜமீன் பொறுப்பு பிடிக்கவில்லை என்கிருயே!

செல்: ஏராளமாக லாபம் வரும். ஜமீன்தாரென்பதுடன் மோட்டார் முதலாளி என்ற பட்டமும் வரும்.

சாமி: அதற்குத்தான் நானும் சொல்கிறேன். ஒரு கோடி ரூபாய் மூலதனத்தில் பங்குகள் சேர்த்து...

(செல்வநாயகம் மறுக்கும் பாவனையில் தலையசைக்கிருன்)

சாமி: ஏண்டா! அந்தப் பணம் சேர்க்க முடியாதென்று நினைக்கிருயா?

செல்: சேர்க்கமுடியும். ஆனல் என்னுல் நடத்த முடியாது.

சாமி: ஓஹோ! நீ கற்றுக் கொண்ட அனுபவம் போதாதா

செல்: இல்லை! தொழில் புரிந்து அதனுல் வாழும் முறையைக் கற்றுக் கொண்டேனே யொழிய பிறரை உழைக்கச் செய்து அதனுல் வரும் லாபத்தைக் கொண்டு வாழும் முறையை நான் கற்றுக் கொள்ளவில்லை.

சாமி: பின் என்னதான் செய்யப்போகிருய்.

செல்: நான் தான் முதலிலேயே சொன்னேனே இந்த ஜமீனை விட்டுப் போய் ஒரு சாதாரண ஆளாகப் பிழைப்பேன் என்று.

சாமி: இந்த ஜமீன் என்னுவது.

செல்: யாருக்காவது கொடுங்கள்

சாமி: கேட்டால் கூட சிரிப்பு வருகிறது. என் மகன் இருக்கும் பொழுது வேறுயாரிடம் என் சொத்தைக் கொடுப்பது.

செல்: நம் குடியானவர்களிடமே பிரித்துக் கொடுத்து விடலாம்.

சாமி: வெகு சுலபத்தில் சொல்லி விட்டாய். கஷ்டப் பட்டிருந்தால் தானே தெரியும். என் பாட்டன் காலத்தில் இந்த ஜமீன் உண்டாயிற்று. என் அப்பா வளர்த்தார். என் காலத்தில் அதை ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கினேன். வல்லியூர் ஜமீன் என்ற பெயரை நாட்டில் விளங்கச் செய்தேன். என்னுடைய அப்பா எனக்குத் தந்தார். அதைப்போல என்னுடைய மகனுக்கு இந்தச் சொத்தும் ஜமீனும் சேரும். அவனுக்குப் பின் அவனுடைய மகனுக்குப் போய்ச் சேரும். இதைத் தடுக்க உன்னுல் முடியாது.

செல்: உங்கள் மகனைப் பற்றி நீங்கள் கவலைப் படும் பொழுது என்னைப் பற்றிக் கவலைப் படஎனக்கு உரிமையில்லையா? இந்த ஜமீன் வாழ்க்கையில் எனக்குக் கொஞ்சங்கூட விருப்பமில்லை. அது......

சாமி: உன் விருப்பத்தை யார் கேட்டது? நான் இறந்ததும் இந்த ஜமீன் உன்னையடையும். உன்னை என்று பேசும்பொழுது இந்த ஜமீனை எதிர்காலத்தில் ஆளப்போகிறவன் என்ற முறையில் பேசுகிறேன். என்னுடைய இருதயத்தை வெட்டியெடுத்தால் கூட இந்த ஜமீன் என்பரம்பரையை விட்டுப் போகாது. என் மூச்சு, உயிர், இரத்தம், சதை, ஆசைக்கனவுகள் அனைத்தும் இந்த ஜமீனில், அதன் பெருமையில், பலத்தில், இந்த மாளிகையில் கலந்திருக்கின்றன. உன் காலத்தில் அவை இன்னும் அதிகரிக்க வேண்டும். இப்பொழுது விருப்பப்படிதான் நடப்பேன் என்று சொல்லுகிருயே பின்னுல் செய்யவேண்டியதைச் செய்துவிட்டு அதுதான் என் விருப்பம் என்று சொல்வாய். அதற்குள் வீணுன வேதாந்தங்கள் பேசி, பைத்தியக்காரபட்டம் வாங்கிக் கொள்ளாதே!

(போகிருர்)

செல்: அப்பாவிடம் பேசிப் பயனில்லை. ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முடியாது.

கண்: எதிர்த்துப் பேசினால் அவருக்குக் கோபம் வந்துவிடுகிறது. நீதான் ஏன் அவருடன் எதிர்த்துப்பேசவேண்டும்.

செல்: நேற்று அந்தக் குடியானவர்களைத் பார்த்ததும், தொழிலாளியாயிருந்த என்னைப்பற்றியே எனக்கு நினைவு வந்தது. நான் இந்த இடத்தைவிட்டுப் போவதைத் தவிர வேறு வழியே கிடையாது

கண்: செல்வா! நீ சொல்வதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அப்பா ஜமீன்தார். அவர் திரண்ட செல்வத்தை உனக்குத்தர முடியும், நானோ மகனைத்தவிர வேறு செல்வம் எதையும் பெறுதவள். அதனால் என்னை விட்டுப்பிரிந்து போகாதே! போனால் "மகனைப் பிரிந்த துயரத்தால் தாய் இறந்தாள்" என்ற செய்திதான் உனக்கு வரும்.

(செல்வம் செல்கிறான்.)

காட்சி 4

இடம்: மாளிகையின் வெளிப்பக்கம்.

உறுப்பினர்: அல்லி, செல்வநாயகம்.

நிகழ்ச்சி: செல்வநாயகம் ஒரு காரின் அடியில் படுத்துக்கொண்டு பழுது பார்த்துக் கொண்டிருக்கிறான். அல்லி வருகிறாள்.

அல்: டிரைவர்! டிரைவர்! உன்னை ஜமீன்தாரம்மா கூப்பிடுறாங்க.

(கீழே கிடக்கும் கார் ஹாரனை எடுத்து சத்தம் செய்கிறான். கரியும் எண்ணெயும் படிந்த உடையுடன் செல்வநாயகம் வருகிறான்.)

அல்: டிரைவர்! உனக்குக் காதடைத்தா போச்சு. உன்னை வரச்சொல்றாங்க!

செல்: யார் வரச் சொன்னது?

அல்: ஜமீன்தாரம்மா! நான் பூக்கொண்டுபோய் கொடுத்தபோது "அந்தப் பக்கம் டிரைவர் சுந்தரம் இருப்பான் வரச்சொல்லுண்ணு" சொன்னாங்க.

செல்: அம்மா எதற்காக வரச்சொன்னாங்க!

அல்: என்னைக் கேட்டால்; எனக்கென்ன தெரியும்?

செல்: அப்போ உனக்குத் தெரிந்ததைக் கேட்டால் சொல்லுவாய். முதலில் உன் பேரென்ன?

அல்: என் கிட்டெ பேச்சு வச்சுக்காதே! ஜமீன்தாரம்மா கிட்டெ சொல்லிடுவேன்.

செல்: அவங்க என்ன செய்வாங்களாம்.

அல்: அவர்களிடம் ஊழியம் செய்துகொண்டு அவர்களையே உதறிப்பேசுறியே! அவர்களிடம் சொன்னால் உன் டிரைவர் வேலையே போய் விடும்.

செல்: ஐயயோ! நான் என்ன செய்வேன் (வருந்துவதுபோல் பாசாங்கு செய்கிறான்.)

அல்: (சிரித்துக்கொண்டு) பயப்படாதே! நான் சொல்ல மாட்டேன். அதுபோவுது இங்கே இன்னும் இரண்டு கார் இருக்கே எதுக்கு?

செல்: நான் பதில் சொல்லமாட்டேன்.

அல்: சொல்லாவிட்டால் போயேன் உன்னிடம் யாரும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருக்கப் போவதில்லை.

செல்: உன் பெயரென்னவென்று சொன்னால் நானும் உனக்குப் பதில் சொல்வேன்.

அல்: நான் சொல்லமாட்டேன்.

செல்: நான் எப்படியும் கண்டுபிடித்து விடுவேன். இப்படி வந்து நில்.

(அவளை உற்றுக்கவனித்தபடி இருக்கிறான்)

அல்: பெயர் கண்டு பிடித்தாயா?

செல்: உஸ்! பேசாமல் இரு.

அல்: சீக்கிரம் சொல்.

செல்: ஆ!

அல்: என்ன?

செல்: உன் பேர் மூளி!

அல்: சே! எவ்வளவு அசிங்கமான பேர். என் பேர் அல்லி!

செல்: பார்த்தாயா? உன் பெயரைக் கண்டு பிடித்துவிட்டேன்.

(அல்லி கூடையை எடுத்துக்கொண்டு புறப்படுகிருள்)

செல்: அதற்குள் அவசரப்படுகிருயே!

அல்: எனக்கு வேறு வேலையில்லையா? இந்தக் கூடைப்பூவை உச்சிப் பொழுதுக்குள் விற்று விடவேண்டும்.

செல்: எனக்கும் கொஞ்சம் பூ வேண்டும்.

அல்: எம்மா வேணும். ஒரே விலை. சரம் ஒரணு! இதோ குண்டுமல்லி, மருக்கொழுந்து, ரோஜா, சம்பங்கி, கனகாம்பரம்.

செல்: எல்லா மலர்களும் ஒன்று சேர்ந்த.........

அல்: கதம்பம்கூட இதோ இருக்கிறது. என்ன பேசாமலிருக்கிருயே! உனக்கு வேண்டாமா?

செல்: மணமுள்ள மலர் என்று தெரிந்தும் வேண்டாமென்று சொல்பவன் யாராவது இருக்கிருனு?

அல்: அது போவுது! நீ ஏன் பூவாங்கிறே! உன் பெண்சாதிக்கா!

செல்: பெண்சாதி இல்லை!

அல்: (கண்ணைச் சிமிட்டி) வேறு யாராவது தெரிந்த பெண்ணுக்கா?

செல்: போக்கிரி! வாயாடி மட்டுமல்ல, வம்புக்காரியாகவுமிருப்பாய்போலிருக்கிறதே!

அல்: ஒரு சரம் வேண்டுமா? இரண்டு வேண்டுமா? அல்லது அறை வேண்டுமா?

செல்: என்ன?

அல்: இல்லை பாதிச்சரம் வேண்டுமா என்று கேட்டேன்.

செல்: இரண்டு சரம்கொடு.

அல்: காசு? (எட்டணு கொண்டுவந்து கொடுக்கிருன்) சில்லரை இல்லையே...

செல். இங்கேயே இரு. (மறுபடியும் திரும்பி வந்து இரண்டணு கொடுக்கிருன்.)

அல்: (காசைத் தட்டிப் பார்த்து) இரண்டணு கொடுத்திருக்கிறீர்களே!

செல்: இரண்டு சரத்துக்கும் இரண்டு அணு! அதற்குமேல் தரமாட்டேன். கணக்குச் சரி தானே.

அல்: (சிரித்துக்கொண்டு) முழுக்கமுழுக்கத் தப்பு! சொன்ன விலையை அப்படியே கொடுத்து யாராவது வாங்குவார்களா?

செல்: நீதானே சரம் ஒரணுன்னு சொன்னே!

அல்: வியாபாரத்தில் அப்படித்தான் சொல்லு வார்கள். ஒரணு சொன்னல்தான் அவர்கள் காலணுவிலிருந்து ஆரம்பித்து அரைடணுவுக்குத் தீர்ப்பார்கள். அதற்கே இரண்டு நாழிகைக்குமேல் ஆகிவிடும். இரண்டு சரத்துக்கும் ஒரணுபோதும். இதோ பாக்கி ஒரணு! (போகிருள்)

செல்: இந்தா! இந்தா! விலை அநியாயமாயிருக்கிறதே சரம் காலணுத்தான்பெறும்.

அல்: நாழியாகிவிட்டது. (ஓடுகிருள்)

செல்: நாளைக் காலையிலும் கொண்டு வா! இங்கேயேதான் இருப்பேன்.

(மலரைக் கையில் எடுத்து முகர்ந்து பார்க்கிருன்.)

காட்சி 5

இடம்: ஜமீன் மாளிகைத் தோட்டம்.

உறுப்பினர்: செல்வநாயகம்.

நிகழ்ச்சி: செல்வநாயகம் அல்லி வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிருன். அவன் கண்கள் நாலாபக்கங்களிலும் சுழன்று தேடுகின்றன. சிறிது நேரங் கழித்து அலுப்போடும் சலிப்போடும் ஏமாற்றத்தோடும் வெளியே செல்கிருன்.

வெளியில் வந்த அவன் ஜமீன் எல்லையின் பல இடங்களிலும் தேடித்திரிந்து, இறுதியில் ஆற்றங்கரையோரம் வந்து சேருகிருன். அங்கே அல்லி ஒருபுறம் உட்கார்ந்திருக்கிருள். மெள்ள அவள் அருகில் வருகிருன். அவள் தனக்குள்ளாகவே பாடிக்கொண்டிருப்பதை நிறுத்திவிட்டுத் திரும்பிப்பார்க்கிருள்.

அல்: (எழுந்து) நீங்களா?

செல்: இன்று நீ ஏன் வரவில்லை?

அல்: வயலில் வேலை ஆரம்பமாகிவிட்டது. நடவு நடப்போயிருந்தேன்.

செல்: எந்த வயலில்

அல்: அதோ தெரிகிறதே கரும்புத் தோட்டம், அதற்குப் பக்கத்திலிருப்பதுதான்.

செல்: எவ்வளவு அழகாயிருக்கிறது. காற்றின் அசைவில் இளம்பயிர்கள் ஆடுவது பச்சைக்

கம்பளத்தை அசைப்பதுபோலிருக்கிறது. அதன்மீது மாலை வெய்யல் படிவது பச்சைக் கம்பளத்தின்மீது தங்கப்பொடி தூவுவது போலிருக்கிறது.

அல்: இங்கிருந்து பார்ப்பதற்கு அழகாயிருக்கிறது. ஆனால் எங்களுக்கு அவ்வளவு உல்லசத்தை அவை தருவதில்லை. ஏனென்றால் நாங்கள் இடுப்பொடியப் பாடுபடும் இடம் அது. அவை வயல்களல்ல. என் அண்ணன் கூறுவதுபோல எங்களை வரவேற்கும் சாவின் வாடல்கள். காலையில் வயலில் இறங்கினால், எப்பொழுது வேலை முடிந்து வீடு திரும்புவோமென்றுதானிருக்கும்.

செல்: ஆனால் நீ மட்டும் ஏன் வீட்டுக்குப் போகாமல் இங்கு உட்கார்ந்திருக்கிறாய்?

அல்: சேரிப்பக்கம் போனால் அங்கு நடக்கும் சண்டைகளையும் சச்சரவுகளையும் தான் கவனிக்க வேண்டியிருக்கும்.

செல்: சேரியில் அவ்வளவு சச்சரவு இருக்குமா?

அல்: அடுப்பின் நெருப்பு தூரவிழும், கஞ்சிக் கலயங்கள் உடைபடும், அடியும் பிடியும் கூக்குரலும் அழுகையும் இருக்கும். நான் "மாரியாத்தா! எப்படியாவது இந்தச் சேரியைச் சமாதானமுள்ள இடமாக ஆக்கிவிடு" என்று வேண்டிக்கொள்வேன்.

செல்: தூய உள்ளத்துடன் மற்றவர்களுடைய நன்மைக்காகக் கடவுளை வேண்டிக்கொள்ளும் ஒருவரை இன்றைக்குத்தான் நான் பார்க்கிறேன். மற்றவர்களெல்லாம் வேண்டிக்கொள்வது மோசடியை எப்படி மறைப்பது, பொய் வழக்கில் எப்படி வெற்றிபெறுவது, கொள்ளையடித்த பொருளை எப்படிக் காப்பாற்றுவது என்பதற்காகத்தான் இருக்கும். தான் செய்யும் பாவங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள பக்தி பயன்படுத்தப்பட்டதேயன்றி, ஊரார் வாழ, உலகு இன்புற பாடுபடவில்லை. ஆனால் இதில் ஆச்சரியமானது அவர்களுடைய பிரார்த்தனைகள் நிறைவேறிவிடுகின்றன. உன் போன்றாரின் பிரார்த்தனைகளுக்குப் பதிலே கிடைப்பதில்லை.

அல்: வரவர அதுவே பழக்கமாய் போய்விட்டது. தீர்க்க முடியாத வியாதி, சகித்துக் கொள்ள வேண்டிய வேதனை.

செல்: இவையெல்லாம் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சிக்கல்கள். மனிதனால் திருத்த முடியும் அவைகளை.

அல்: அமைதியிழந்த வாழ்வு! அதனின்றும் மீள முடியுமென்ற நம்பிக்கையில்லை.

செல்: அப்படிச் சொல்லாதே! கலங்கா உள்ளமும், கனிந்த இதயமும், வாழ்விற்குத்தேவை. அவையிருந்தால் அநீதிகள் அழியும், கொடுமைகள் மறையும், வாழ்வு வெற்றிபெறும்.

அல்: நீங்கள் இப்படி வேடிக்கையாகப் பேசுவது ஜமீன்தார் காதில் விழுந்தால் முதலில் உங்கள் வேலை போய்விடும்.

செல்: ஜமீன் வேலையை எப்பொழுது விடலாமென்று நான்தான் காத்துக் கொண்டிருக்கிறேனே.

அல்: ஜமீன் கோபம் அவ்வளவு சுலபமானதல்ல. இந்த ஊருக்கே பெயர் வல்லியூரல்ல, கொல்லியூரென்பர். ஊரல்ல இது ஜமீன் வேட்டைக்காடு இந்தக் காட்டில் அவரிட்டதுதான் சட்டம்.

செல்: அந்தக் காட்டில் மலர்ந்த முல்லை என் கருத்தைக் கவர்ந்தது.

அல்: அதற்காகக் கல்லையும் முள்ளையும் தாண்டிக்கொண்டு யாராவது கஷ்டப்படுவார்களா? தடுமாறி வருபவர்கள்கூட தூரத்தில் நின்று நமக்கு வேண்டாம் என்று போய்விடுவார்கள். அந்த மலரும் கவனிப்பாரற்று மறைந்துவிடும்.

செல். மறைந்துவிடுவதால் அந்த மலர் இழப்பதைவிட, அந்த மலரைக் கண்டும் அதன் மணத்தைப் பெறாதவன் இழப்பதுதான் அதிகம். கவனிப்பாரற்று மறைந்திடும் காட்டுமுல்லை, எடுப்பாரற்று கிடக்கும் ஒளிமுத்து, இசையில் தொடுக்கப்படாது இருதயத்தில் முடிக்கிடக்கும் பாட்டு, என்னுடைய ஆசைக் கனவுகள் அந்த விதமாக வேண்டியதுதானா?

அல்: மலர் வாடிவிடுகிறதே! எடுக்கிற சிப்பிகளனைத்தும் முத்தைத் தருவதில்லை. இசை நின்றுவிட்டால் ஏக்கம் தானே பிறக்கும்?

செல்: முத்தைக் கண்டெடுத்தவனிடம் ஆயிரம் சிப்பிகளைத் தந்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டான். இருதயம் ஏமாற்றத்தை அளிக்காத ஒளி முத்து, வாடாத மலர், நிற்காத இசை! அது அழிவில்லாதது, அளவற்றது அல்லி...! நான் கூறுவதில், என்னுடைய காதலில் நம்பிக்கையில்லையா?

அல்: நம்பிக்கையில்லையா? ஐயோ! என்னை ஏன் துன்புறுத்துகிறீர்கள். நீங்கள் கூறுகிறீர்கள் காதல் அழிவில்லாதது, அளவற்றது என்று. நான் அவ்வளவு அதிகம்கூடக் கேட்கவில்லை! ஒரு நொடியில், அழிந்துபோவதாகக் கூட இருக்கட்டும். ஆனால் அந்த நொடிப் பொழுதில்கூட காதல் உண்மையானது என்றிருந்தால் போதும். மலர் மறைந்து போனால் கூட அதன் ஒருபொழுது வாழ்வில் தரும் நறுமணம் நமக்குத் திருப்தியளிக்கிறது. இசை நின்று போனால்கூட இன்று நான் கேட்ட இசை என் இருதயத்தில் எப்பொழுதும் எதிரொலித்துக்கொண்டிருக்கும்.

செல்: உன்னைச் சந்தித்த நாளிலிருந்து ஒரு புது உலகையே அமைத்துக்கொண்டுவிட்டேன். இன்று காலை உன்னைக் காணாததும், அந்த உலகமே இருண்டு விட்டது. கொந்தளிப்பில் நான் தத்தளித்தேன். உன்னுடைய இனிய சொற்கள் அந்தப் புயலை ஓட்டிவிட்டன. கருமேகம் சூழ்ந்த இடத்தில் கதிர்மதியம் தோன்றிவிட்டது. அதோ, நான் சொல்வதை ஆமோதிப்பதுபோல நிலா பிரகாசிக்க ஆரம்பித்துவிட்டது. நிலாச்செல்வன் இன்று ஏன் இவ்வளவு அழகாகப் பிரகாசிக்கிறான் தெரியுமா? அதோ! அசைந்தாடுகிற அல்லியைக் கண்டதால் தான். ஆனால் அந்த அல்லிக்குத் தெரிகிறதா தன் காதலன் எவ்வளவு புயலையும், இருளையும் தாண்டிக் கொண்டு தன்னைச் சந்திக்க வருகிறானென்று.

அல்: அல்லி மட்டுமென்ன உல்லாசபுரியிலிருக்கிறாளா? அவளுடைய கால்கள் சேற்றிலும், சகதியிலும் சிக்கிக்கிடந்த போதிலும் தலையை தண்ணீருக்குமேல் நீட்டி தன் காதலனைக் கண்டு களிக்கிறாள்.

(இருவரும் சிரித்துக்கொண்டு எழுகின்றனர். நிலவு தனியாட்சி செய்கிறது)

காட்சி-6

(அல்லி வெளிக்கிளம்புகிறாள், கையில் பூக்குடலையுடன், உதட்டில்புன்னகையுடன். கீற்று முடைந்துகொண்டிருந்த வீரப்பன் கூப்பிடுகிறான்.)

வீரப்பன்: ஏ குட்டி! சீக்கிரமா வந்துவிடு. உன் மாமன் வீட்டில் பரிசம்போட வரப்போகிறார்கள்.

அல்லி: [திடுக்கிட்டு] பரிசமா?

வீர: ஆமாம்! மாநதைக்குக் கல்யாணத்தை இந்த மாசத்திலேயே முடித்துடனும்னு உன் மாமன் சொல்கிறான்.

மாணி: பெண்ணு!

வீர: அத்தை மகள் அல்லி இருக்கும்பொழுது வேறு யாரைக் கல்யாணம் செய்துகொள்ள முடியும்? அப்புறம் அவன் சேரிப்பக்கம் வர முடியுமா?

அல்லி: எனக்குக் கல்யாணமா?

வீர: உன்கல்யாணத்தைப்பற்றித்தான் சொல்லுகிறேன். இல்லை என் கல்யாணத்தைப் பற்றியா உன்னிடம் யோசனை கேட்கப் போகிறேன்.

மாணி: உங்களுடைய கல்யாணத்தின் முன் எங்களை யோசனை கேட்டிருந்தால், எவ்வளவோ தொல்லைகள் மிச்சமாயிருந்திருக்கும்.

வீர: சீக்கிரம் போய்விட்டு, வரும்பொழுது சைக்கு இரண்டு வளையலும், மஞ்சத்துண்டு, தேங்காய், குங்குமத்தையும் வாங்கிக்கொண்டு வா?

அல்லி: அப்பா! எனக்கு இந்தக் கல்யாணமே வேண்டாம்.

மாணி: அப்படிச் சொல் என் தங்கையே! அப்பா சொல்வதை மகள் அப்படியே கேட்க வேண்டுமென்ற விதி மாறிவிட்டது.

வீர: நான் நிச்சயித்துவிட்டேன்.

அல்லி: நான் ஒப்புக்கொள்ளவே மாட்டேன். எனக்குப் பிடிக்காத கல்யாணத்தை என்மீது ஏன் கட்டாயப்படுத்துகிறீர்கள்?

வீர: மாமன் வருவதும் நிச்சயம், கல்யாணம் நடக்கப்போவதும் நிச்சயம்.

அல்லி: எனக்கு வேண்டவே வேண்டாம். அண்ணா! நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்.

மாணி: அவளுக்குப் பிடிக்கவில்லையென்றால், இந்தக் கல்யாணத்தை விட்டுவிடுவதுதானே.

வீர: அவளுடைய பிடிவாதத்துக்கு பயந்து நான் கொடுத்த வார்த்தையை மாற்றிவிடுவதா?

மாணி: மகளைக் கட்டாயப்படுத்திக் கல்யாணம் செய்துகொடுப்பதில் என்னப்பா வீரதீரம் இருக்கிறது. அப்படியே கட்டாயப்படுத்திக் கல்யாணம் செய்துவைத்தால்கூட அவள் மனம் வெறுத்து ஆறு குளத்தில் விழுந்து இறந்தால் என்ன செய்வது?

அல்லி: ஆமாம்! எதிர்பாராமல் நடந்தால் நான் ஆற்றில் விழுந்து இறந்துவிடுவேன்.

வீர: நீயே அவளுக்கு எல்லாம் சொல்லித் தருகிறாய். நானென்ன செய்வது? உன் அம்மாவோ படுத்தபடுக்கையாயிருக்கிறாள். எனக்கோ வயதாகிவிட்டது. ஏர் பிடிக்க இன்னும் ஒரு ஆண்பிள்ளை இருந்தால்தானே முடியும்?

மாணி: அதற்கு வேறு அவளுக்கு இஷ்டமான கல்யாணத்தைப் பண்ண வேண்டும்.

அல்லி: எனக்கு இப்பொழுது கல்யாணமே வேண்டாம்.

மாணி: அப்படித்தான் ஒவ்வொரு அல்லி ராணியும் ஒரு அருச்சுனனைப் பார்க்கிறவரை சொல்லிக்கொண்டிருப்பது வழக்கம்.

வீர: நான்தான் கேட்கிறேன், மருதைக்கு என்ன குறைவு! அன்னைக்கு நடந்த தெருக்கூத்தில் கூட அவன்தான் அருச்சுன மவராசாவா துரோபதை புடவையைப் பிடித்து இழுத்தான். மருதையை விட்டுவிட்டால், வேறு யார் கிடைப்பார்கள். ஜமீன்தார் மகன் உனக்கு மாலை சூட்ட வருவானா?

அல்லி: ஜமீன்தார் வீட்டில் வேலை பார்க்கும்...

மாணி: யார் அந்த தைரியசாலி உன்மீது வலை வீசியவன்?

வீர: முனியாண்டியாகத்தானிருக்கும். அவன்தான் நம் குடிசைப்பக்கம் அடிக்கடி வந்து போகிறான்.

அல்லி: முனியாண்டியல்ல, ஜமீன்தார் மாளிகையில் கார் டிரைவராக இருக்கும் சுந்தரத்தை.

மாணி: சுந்தரமா! (என்று தாங்க முடியாமல் சிரிக்கிறான்.)

வீர: (அலுத்துக்கொண்டு) கல்யாணப் பேச்சு எடுத்தால் கேலிப் பேச்சாக்கிவிடுகிறீர்கள்!

அல்லி: உண்மையாகத்தான் சொல்லுகிறேன். சுந்தரம் என்னைக் காதலிக்கிறார். கல்யாணம் செய்வதென்றால் அவரைத் தான நான் கல்யாணம் செய்துகொள்வேன்.

மாணி: அவன் உன்னைக் காதலிப்பதாகச் சொன்னானா, தன்னுடைய பொக்கை வாயால்.

அல்லி: கேலி செய்தால் எனக்குக் கோபம் வரும். அவருக்கு முத்துப்போன்ற பற்கள் இருக்கின்றன.

மாணி: இல்லை, அல்லி! சுந்தரத்துக்கு முத்து போன்ற பற்களல்ல. முத்து நிறமான மீசை இருக்கிறது.

வீர: யாராவது கேட்டால்கூட சுந்தரத்தைக் கேலி செய்கிறோம் என்று நினைத்துக்கொள்வார்கள்.

மாணி: இல்லை, அது தெய்வீகக் காதல்!

வீர: அவனுக்கு வயது ஐம்பதுக்குமேலிருக்கும் ஒரு பேத்தி கூட இருக்கிறது அவனுக்கு.

அல்லி: அவருக்கு வயது இருபத்தைந்துக்கு மேலிராது. உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் ஏன் வீண் பேச்சு?

(போவதற்கு அடியெடுத்து வைக்கிறாள்)

மாணி: அப்பா! அவள் வேறு யாரையோ சொல்லுகிறாள். அல்லி நீ சொல்லுகிறவன் எப்படியிருப்பான்.

அல்லி: அவரை நினைத்ததும் உருவம் மனக்கண் முன் வருகிறது. அதை எப்படி விவரிப்பேன். இருங்கள் (தன்னிடமிருந்த பையை அவிழ்த்து அதிலிருக்கும் படத்தைக் காண்பிக்கிறாள்) இவர்தான்.

மாணி: யாரது? எங்கேயோ பார்த்தது மாதிரியிருக்கிறதே!

வீர: (வாங்கிப்பார்த்து) வேறு யாருமில்லை. ஜமீன்தார் மகன்.

மாணி: ஜமீன் மகனா?

வீர: அவரேதான். இரண்டு வாரத்துக்கு முன்னே ஜமீன் மாளிகைக்கு நாங்க போனோமில்லையா அன்னைக்குப் பார்த்தேன், இவரை.

மாணி: என்னுடைய ஒரே தங்கை! அவளும் ஜமீன் வேடிக்கைக்குப் பலியாகிவிட்டாள்.

அல்லி: அவர் ஜமீன்தார் மகனல்ல, அவர் எவ்வளவோ நல்லவர், குணசீலர்! எனக்கு எத்தகைய தீங்கும் செய்யவில்லை. அவர் என்னை உண்மையாகவே காதலிக்கிறார்.

மாணி: காதல் அவர்களுக்கு அன்றாடப் பொழுதுபோக்கு, பழக்கமான பாடம்.

அல்லி: அவர் என்னைக் கல்யாணம் செய்து கொள்வதாகக் கூறியிருக்கிருர். நிச்சயம் நிறைவேற்றுவார்.

மாணி: கல்யாணம்! ஒரு இரவுக்கு அது நிலைத்து நிற்கும். அதற்குப் பின் உன் கதி என்ன? அல்லி! அந்த வஞ்சகனின் ஆசை வார்த்தைகளில் ஏமாந்து விடாதே! ஆறுகுளத்தில் விழுந்து நீ இறந்தால் கூட நான் சகித்துக்கொள்வேன். ஜமீனின் போகப் பொருளாக ஆவதை நான பொறுத்துக்கொள்ளமாட்டேன்.

அல்லி: இதில் சூது ஏதும் இல்லை. வஞ்சகம் அவர் வார்த்தைகளில் காண முடியாதது. கள்ளம் அவர் உள்ளத்தில் இடம் பெருதது, தீயும் குளிரும், ஒளியும் இருளும் ஒன்ருக வாழ முடியுமா? அவர் சொல்லியபடி நிச்சயம் செய்வார்.

மாணி: நீ கனவு கண்டால் நானென்னசொல்ல முடியும்? சூது உனக்கு உண்மையாகக் காடசியளிக்கிறது. கபடப்பேச்சு காதல் மொழியாகக் கேட்கிறது. அல்லி! நீ சொல்லும் காதல், வாக்குறுதி, உண்மை இவை ஜமீன் வீட்டார் அறியாத சொற்கள். நீ சொல்லுவதெல்லாம் உண்மையென்று வைத்துக்கொண்டாலும்நான் இதை அனுமதிக்க மாட்டேன். சேரியிலே பிறந்தவள் ஜமீன் மாளிகைக்குக்குடிபேறுவது பெருமை தரத்தக்க செய்தி அல்ல, அதை அவமானமாகவே நான் நினைப்பேன். இதற்

கெல்லாம் வேறு வழிகிடையாது. பேசாமல் மருதைக்கு உடனே இவளைக் கல்யாணம் செய்துவிடுவதுதான் நல்லது. (போகிறான்)

வீர: வீணாக இதைப் பற்றிக் கவலைப்படுவதில் என்ன பலன்? முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோலத்தான்.

அல்லி: அவருடைய பெயரும் சுந்தரம்தானா?

வீர: அவர் அப்படிச் சொன்னாரா?

அல்லி: நானாக நினைத்துக்கொண்டதுதான்.

வீர: அவர் பேர் ஜமீன்தாருடைய அப்பா பெயர்தான். ஆமா செல்வநாயகம். எல்லா வற்றையும் மறந்துவிடுவதுதான் நல்லது. சீக் கிரம் போய் வேலையைப் பார்த்துவிட்டு வா!

அல்லி: பூவிற்க நான் போகப் போவதில்லை. வயலிலே வேலையிருந்தால் போய் பார்க் கிறேன்.

(பூக்கூடையை வைத்துவிட்டு கூடையை எடுத்துக்கொண்டு போகிறாள். பூக்கூடையை எடுத்துக்கொண்டு வீரப்பன் நகருகிறான்.)

காட்சி 7

இடம்: ஜமீன் மாளிகை.

நிகழ்ச்சி: ஏஜண்ட் வேகமாக வருகிறார்.

ஜமீ: என்ன ஆற்று வெள்ளம் எப்படியிருக் கிறது.

ஏஜ: அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது. பாலத் தைத் தொடக்கூட ஆரம்பித்துவிட்டது.

ஜமீ: P.W.D. என்ஜினியர் என்ன சொன்னார்.

ஏஜ: பயப்பட வேண்டாம் காலையில் தண்ணீர் குறைந்துவிடும் என்று சொன்னார்.

ஜமீ: காலை! அதற்குள் என்ன கதியாகுமோ. அவருக்கென்ன? கரும்புத்தோட்டம் எப்படி யிருக்கிறது.

ஏஜ: அதுதான் பயமாயிருக்கிறது. தண்ணீர் தேங்கி விடாமல் இறைத்துக் கொண்டிருக் கிறோம். ஆனால் இன்னும் கொஞ்சம் வெள் ளம் உயர்ந்தால் கரை தாங்காது. கரும்புத் தோட்டம் தண்ணீரில் மறைந்துவிடும்.

ஜமீ: இந்த வருஷம்தான் கரும்புத்தோட்டத்தை ஆரம்பித்தேன். எவ்வளவு பணச்செலவு. எரு வாங்கினதே இன்னும் மூன்று வருஷத்துக்குத் தாங்கும். மற்றவர்கள் பயந்த நேரத்தில் இதை ஆரம்பித்து, சர்க்கரை உற்பத்தி செய்வ தெனத் தீர்மானித்தேன். ஆனால் நான் போட்ட திட்டங்கள் இந்த ஆற்று வெள்ளத் தில் கரைந்துவிடும்போலிருக்கிறதே! அந்தத் தோட்டம் தண்ணீரில் அழுந்துவது என்றால் அது என்னையே தண்ணீருக்குள் அழுத்து வது போலிருக்கிறது.(சற்று யோசித்து) ஆம்! அதுதான் சரி! இரண்டு ஆட்களைக் கூட்டிக் கொண்டு புறப்படலாம்.

ஏஜ: வெள்ளத்தின்முன் நாம் நாலைந்து பேர் என்ன செய்ய முடியும். எதிர்த்து நிற்க முடியுமா?

ஜமீ: முடியாது! தடுக்கமுடியாது - அதன் போக்கை மாற்றியமைக்கலாம் ஆபத்து நம்மைவிட்டு அகலும் விதத்தில்

(மேஜையின்மீது, தன் திட்டத்தை வரைந்து காட்டுகிறார். ஏஜண்ட் திகைக் கிறார்)

ஜமீ: ஏன் திகைக்கிறீர்! நான் சொல்லுகிறபடி செய்தால்தான் நாம் தப்ப முடியும்.

ஏஜ: வெள்ளம் சேரிப்பக்கம் போகுமே!

ஜமீ: பாதகமில்லை. எல்லோரும் நொடிப்பொழு தில் வெளியேறிவிடுவார்கள். புறப்படும், நானும் வருகிறேன்.

(போகின்றனர்.)

காட்சி-8

இடம்: ஊர்ப்புறம்.

நிகழ்ச்சி: அல்லியும் மாணிக்கமும் பேசிக் கொண்டிருத்தல், செல்வநாயகம் வருகை.

மாணி: அல்லி! நான் ஜமீனைப்பற்றிப் பேசு கின்றவேளைகளிலெல்லாம் என்னைக் குறை கூறுவீர்களே. இப்போது புரிகிறதா ஜமீனின் திருவிளையாடல்.

அல்: ஆற்று வெள்ளம் கரையுடைத்து சேரிக் குள் வந்ததற்கும் ஜமீனுக்கும் என்ன சம்பந்த மிருக்கிறது.

மாணி: இருக்கிறது. வெள்ளம் கரையுடைத்து வரவில்லை. கரும்புக்கொல்லை பாதுகாக்கப் பட சுயநலம் ஒன்று மட்டுமே கொண்டு ஆதிக்க உணர்ச்சியோடு வெள்ளம் கரை பெயர்த்து வழிதிருப்பப்பட்டது.

அல்: அப்படியா? கொடுமைதான். ஆனல்...

மாணி: வெள்ளத்தை அனுப்பிய செயலில்கூட கொடுமையில்லை. வெள்ளத்தை அனுப்பினுல் குடிசைகள் அழியும், குடியானவர்கள் தவிப்பார்கள், பஞ்சம் வரும், பசியால் வாடுவார்கள், பெண்களின் மானம் பறிபோகும் என்று தெரிந்தும் அதைச் செய்தாரே அந்த எண்ணத்தில்தான் கொடுமை, யாருமே மன்னிக்க முடியாத கொடுமை இருக்கிறது. ஜமீன்தார் தெரியாமலா செய்தார்? சேரி அழந்தாலும் சரி, தன்னுடைய கரும்புத் தோட்டம் தப்பினுல் போதும் என்று செய்தார். அவருடைய வாழ்வு அவ்வளவு கரும்பு போன்றது. நம்முடையது கவலைப்பட வேண்டாதது. அதோ ஜமீன்தார் மகன் செல்வநாயகம் வருகிருன்.

அல்: (மகிழ்ச்சியடைந்தவளாய்) எங்கே?

செல்: அல்லி! அல்லி உன்னைக்காணுமல்...

மாணி: (இடைமறித்து) உன்னைக் காணுமல் நான் கூடத் தவித்துக்கொண்டிருக்கிறேன.

செல்: வெளியூருக்குப்போய் இன்று காலையில் தான் வந்தேன. எல்லாவற்றையும் உன்னிடம் சொல்லி முடிவு செய்யலாம் என்று வந்தேன் அல்லி!

மாணி: மறுபடியும் அப்படிக் கூப்பிடாதே!

செல்: நீ யார் அதைச் சொல்ல!

மாணி: அவளுடைய அண்ணன்.

செல்: மாணிக்கமா? நல்ல வேளை உன்னையும் இன்றைக்குப்பார்க்கிறேன். உன்னைப்பற்றி அல்லி மிகவும் சொல்லியிருக்கிருள்.

மாணி: சொல்லியிருப்பாள்! படித்தவன், சத்தம் போடுபவன், ஓயாமல் வாதாடுபவன என்று. ஆனல் அவள் சொல்லியிருக்கமாட்டாள் மனம் வைத்தால் அவன் கொலைகாரனுகவும் ஆவான் என்று.

அல்லி: அண்ணு!

மாணி: என் தங்கையைக் கைப்பற்றும் நினைவை அகற்றிவிடு. இருந்தால் நீ பிணமாவாய்; அல்லது நான் பிணமாகவேண்டும்.

செல்: நீ பிணமாகவேண்டுமென்று கேட்க நான் வரவில்லை. நான் பிணமாவதற்கும் எனக்கு விருப்பமில்லை. வீணுகக் கோபித்து ஏன் பேசுகிருய்? உன் தங்கையை நான் உளமாறக் காதலிக்கிறேன.

மாணி: அழகிய பெண்களைக்கண்டால் "உன்னை மனமாறக் காதலிக்கிறேன்" என்று சொல்லத் தவறிய ஆடவன் யாருமே கிடையாது. தேவர் மூவரிலிருந்து திருப்புகழ் பாடும் சட்டிச்சாமியார் வரை அதே பாடத்தைத் தான் ஒப்பிக்கிருர்கள்.

செல்: அவளும் என்னைக் காதலிக்கிருள். நாங்களிருவரும் திருமணம் புரிந்துகொள்வோம்.

மாணி: ஜமீன்தாரின் மகன்...

செல்: ஜமீன்தாரின்ஒரேமகன்ஏழைப்பெண்ணை மணந்துகொள்வானு என்று சந்தேகப்படுகிருயா? என் அப்பா ஒப்புக்கொண்டாலும் சரி, அல்லாவிட்டாலும் சரி, யார் தடுத்தாலும் எது சேர்ந்தாலும் நான் இவளைமணந்துகொள்வது நிச்சயம்.

மாணி: இவ்வளவு தியாகம்...

செல்: தியாகம் அல்ல, உண்மையான மதிப்பீடு. இசைந்த காதலியுடன் நடத்தும் வாழ்விலுள்ள இன்பம், ஜமீன் வாழ்விலே கிடைக்காது என்பதைக் கண்டுகொண்டேன்;

மாணி: எது எப்படியிருந்தாலும் என் தங்கை உனக்கு கிடைக்கமாட்டாள்.

செல்: என்ன?

மாணி: எங்களை அடக்கி எங்களிடமிருந்து நெல்லை எடுத்துக்கொண்டு போவதுபோல், என்னுடைய அருமைத் தங்கையை உன் மாளிகைக்கு அழைத்துக்கொண்டு போகமுடியாது. சேரிக்கும் மாளிகைக்கும் இடையே தாண்டமுடியாத தூரம் இருக்கிறது. ஜமீன்தார் எங்களுக்குச் செய்யும் கொடுமைகளுக்குப்பதில் எங்களுடைய பெண் அங்கு பணிவிடைசெய்ய வரமாட்டாள்.

செல்: (சிரித்து) ஜமீன்தாருக்குப் பெண் கேட்க வரவில்லை.

மாணி: (செல்வநாயகத்தின் கன்னத்தில் அறைகிருன்) என்ன சிரிப்பு. கடைசி முறையாகச் சொல்லுகிறேன். இது ஒரு போதும் நடைபெருது. நான் சம்மதிக்கமாட்டேன்.

செல்: நான் உன் சம்மதத்தையல்ல, அல்லியின் சம்மதத்தைப் பெறவந்தேன்.

மாணி: நான் குறுக்கே நிற்பதாக நினைக்கிருய். நான் போகிறேன். அவன் இனிப்பாகப் பேசுவான், அதைக் கேட்டு நீ மயங்கினுல் நான் தடைசெய்வதாக நினைக்கவேண்டாம். உனக்கு விருப்டமிருந்தால் போ! இவனை மணந்து

கொண்டு அடிமையாக வாழு! சேரியை விட்டு மாளிகையின் சுகவாழ்விற்குப் புறப்படு! ஆனால் என்னுடைய மனத்தை எதுவும் மாற்ருது. ஜமீன், ஜமீன்தார், ஜமீனைச் சேர்ந்தவர்கள், ஜமீன்மாளிகை, ஏன் அது இருக்கும் திக்கையே நான் வெறுக்கிறேன். உனக்குப் பிடித்தால் ஜமீன்தார் மகனைக் கல்யாணம் செய்துகொள். ஜமீன்தார் யார் தெரியுமா? நம் சேரிமீது வெள்ளத்தை அனுப்பியவர், குடிசைகளை அழித்தவர், நாம் செய்த தொண்டுகளுக்கு பஞ்சத்தையும் பட்டினியையும் பரிசாகத் தந்தவர்! மறந்துவிடாதே! வெள்ளத்தின் கொடுமையால் உயிரிழந்தோரில் உன் தாயும் ஒருத்தி! பசியின் கொடுமையால் மானத்தை இழந்தோர் உன்போலும் இளம்பெண்கள். இவையெல்லாம் சரிதானு? ஏன் பேசாமலிருக்கிருய் பதில் கூறு.

அல்: நானும் வெறுக்கிறேன்.

(ஓடிவிடுகிருள்)

மாணி: அவளும் பதில் கொடுத்துவிட்டாள். போகலாமே, தானும் உன்னை வெறுப்பதாகச் சொல்லிவிட்டாள். நீங்கள் எங்களுக்குச் செய்கிற கொடுமைக்கு வெறுப்பு ஒன்றைத் தவிர வேறு எந்த பதிலை நீ எதிர்பார்க்க முடியும். ஏன் நின்றுகொண்டிருக்கிருய்? வழியனுப்பிவைக்கட்டுமா?

செல்: வேண்டாம். உனக்கு அவ்வளவு சஷ்டம் வேண்டாம். (போகிருன்)

காட்சி-9

இடம்: மாளிகை.

நிகழ்ச்சி: சாமித்துரை உட்கார்ந்திருக்கிருர். கண்ணம்மா வருகிருள்!

சாமி: செல்வனைக் காணுேமேயென்று பார்க்க வந்தேன். இன்னும் அவன காப்பிகூடச் சாப்பிடவில்லை.

சாமி: செல்வம் எப்படியிருக்கிருன்.

கண். இருக்கிருன் எப்பொழுதும்போல்.

சாமி: வந்த புதிதில் இருக்கவே பிடிக்கவில்லை. வெளியூர் போகணும் என்று சொல்லிக்கொண்டிருந்தானே.

கண்: இப்போது கிராமம் மிகவும் பிடித்திருக்கிறதென்று சொல்லிக்கொண்டிருக்கிருன்.

சாமி: அப்படியா? இன்னும் வரவர அந்த எண்ணமே நிலைத்துவிடும். ஒரு கல்யாணத்தையும் பண்ணிவிட்டால் பொறுப்பும் வந்துவிடும்.

கண்: பெண்ணு.

சாமி: பெண்ணுக்கா குறைச்சல்! குருவித்துரை ஜமீன்தார் தன மகளைக் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிருர்.

கண்: பெண் லட்சணமாயிருக்காதே.

சாமி: நமக்குத் தகுதியான ஜமீன் வீடு வேறு கிடையாது.

கண்: படித்த பெண் கூட இல்லை.

சாமி: ரொக்கமாகவே பத்து லட்சத்துக்குமேல் இருக்கும்.

கண்: ஆனல் அகம்பாவக்காரி.

சாமி: பெயர்கூட அழகான பெயர் 'வத்சலா' என்பது.

கண்: நடந்தால் வாத்து நடப்பது போலிருக்கும்.

சாமி: நாலு காருக்குமேல் அவர்கள் வீட்டில் இருக்கிறது.

கண்: நமக்கு இருக்கும் ஒரே மகன்.

சாமி: இவ்வளவு சொத்துக்கும் அந்தப் பெண் தான் ஒரே மகள்.

கண்: செல்வத்தின் சம்மதத்தைக் கேட்டீர்களா?

சாமி: கல்யாணத்துக்கு நாள் வைத்து, தாலிக் கயிற்றைக் கையில் கொடுத்தால் பையன் தானுகவே சம்மதிக்கிருன்.

கண்: எனக்கென்னவோ பிடிக்கவில்லை. சொத்துக்கு ஆசைப்பட்டு வீணுக அவன்வாழ்வைக் கெடுத்துவிடாதீர்கள்.

சாமி: எனக்குத் தெரியாதா? எல்லாம் இப்பொழுதில்லாவிட்டாலும் பின்பு உணர்வான்; தனக்குள்ள அதிகாரமும் அந்தஸ்தும் அப்பா பாடுபட்டதால்தான் வந்தது என்று. மழைச் சாரல் அடிக்கும்போலிருக்கிறது. அந்தக் கதவைச் சாத்து. மழை இப்படிக் கொட்ட ஆரம்பித்துவிட்டதே. மறுபடியும் வெள்ளம் வருமோ?

கண்: வெள்ளம் வந்தால் வேருேரிடத்தில் கரையை உடைத்துவிட்டால் போகிறது.

சாமி: என்ன சொன்னாய்?

கண்: நான் சொல்லவில்லை. ஊரில் ஒவ்வொருவரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஏன் இப்படி ஊராரின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொள்ளவேண்டும். இருப்பதை வைத்துக்கொண்டு எவ்வளவோ நன்றாக வாழலாமே!

சாமி: வரவர அதிகப் பிரசங்கியாகிவிட்டாய். போபோ! போய் சாப்பாடு ஆகிவிட்டால் இலை போடச்சொல்லு. வந்துவிட்டாள் பேச. அடக்கவொடுக்கமில்லாமல். முனியனை இன்னும் காணோமே! தடியன் அதோ வருகிறான். ராஜ நடைபோட்டுக்கொண்டு, மழை பெய்வது கூடத் தெரியாமல் எருமை மாடு மாதிரி.

கண்: அய்யோ! அது செல்வனல்லவா! ஏன் மழையில் நனைந்துகொண்டு வருகிறான்.

(ஓடிப்போய் அழைத்துவந்து தலையைத் துடைக்கிறாள்)

கண்: ஏனிப்படி வந்தாய்? மழை நின்ற பிறகு வருவது? அல்லது எங்கேயாவது குடை வாங்கிக்கொண்டு வருவது. நல்ல ஜுரம் அடிக்கிறதே. உடனே டாக்டரை வரச்சொல்லுங்க! என்ன கஷ்டகாலமோ...

(அழைத்துக்கொண்டு போகிறாள்)

காட்சி-10

இடம்: வீதி.

நிகழ்ச்சி: முனியாண்டி, குடியானவர்கள் நின்று பேசிக்கொண்டிருக்கின்றனர்.

குடி: இந்தப் பக்கம் கார் மேல் கார் வந்து போனபடி இருக்கிறதே! ஜமீன்தார் வீட்டில் கல்யாணம் கார்த்திகை ஏதாவது விசேஷமா?

(அங்கு வந்த அல்லி அவர்கள் பேசுவதைக் கவனிக்கிறாள். அவர்கள் அல்லி நிற்பதைக் கவனிக்கவில்லை)

முனி: கல்யாணமா? எழவுச் செய்திவரவேண்டிய நிலையில் இருந்தது: சின்ன எஜமான் பிழைப்பார்னு யாரும் நம்பவில்லை. அவ்வளவு கடுமையான காய்ச்சல். இப்போ காய்ச்சல் மட்டுப்பட்டு குணமாகி வருகிறது. இனிமேல் பயமில்லை. ஆனால் அடையாளமே தெரியவில்லை. தங்க நிறமா இருந்த உடம்பு வெளுத்து, தரும்பா இளைச்சுப் போயிட்டுது. டாக்டரும் நல்ல கைராசிக்காரரு. ஊசியாலே குத்திக் குத்தி ஜுரத்தைக் கொஞ்சங் கொஞ்சமா எடுத்துடுறாரு.

குடி: இதுக்கு இவ்வளவு கஷ்டமே தேவையில்லே. நம்ம வயித்தியரு மன்னார்சாமிகிட்டே காண்பிச்சிருந்தா ஒரு நொடிலே போக்கியிருப்பார்.

முனி: எதை? உயிரையா?

குடி: இல்லே நோயைத்தான். வயித்தியமின்னு மருந்து மாத்திரம் போதாது, மந்திரதந்திரமும் தெரிஞ்சிருக்கணும். ஏதாவது தோஷம் இருந்தாலும் இருக்கும்:

முனி: இருக்கும். சின்ன எஜமான் பிரக்ஞையில்லாமல் இருந்தபோது அல்லிப் பூ-அல்லிப் பூவுண்ணு உளறிக்கொண்டே இருந்தாரு.

(அல்லியின் கண்கள் கலங்குகிறது)

குடி: ஆ! அல்லி! தாமரைக் குளத்திலேதான் இருக்குது. சரிதான். அந்தக் கரையிலே இருக்கிற வீரன்தான் அடிச்சிருப்பான்.

முனி: ஜமீன்தாரம்மாவைப் பார்த்தால்தான் பாவமா இருக்கு. சின்ன எஜமான் படுத்திருக்கிற இடத்தைவிட்டு அசையாமல் பைத்தியம் பிடிச்சவங்கமாதிரி உட்கார்ந்திருக்காங்க.

(அல்லி மனவேதனையுடன் ஓடுகிறாள். மற்றோர் பக்கமிருந்து மாணிக்கம் வருகிறான்)

மாணி: என் தங்கச்சியைப் பார்த்தியா?

முனி: இப்போதான் இந்த மதகுப்பக்கம் போச்சுது. ஆனா முன்னே இருந்த கலகலப்பைக் காணோம்!

மாணி: அம்மா செத்ததிலிருந்து அவ அப்படித்தான் இருக்கிறாள்.

முனி: வயசான பெண்ணைத் தன்னந்தனியா அனுப்பக்கூடாது. நாலுபேர் என்னைப் பார்த்து ஏன் இன்னும் அல்லியோட கல்யாணம் ஆகலேண்ணு கேட்கிறாங்க.

மாணி: கல்யாணத்தைப் பண்ணிவிடவேண்டியதுதான்.

முனி: அவசியம் செஞ்சுடணும்.

மாணி: இந்த வருஷத்திலாவது நடத்தணும்.

முனி: இந்த மாதத்திலேகூட வச்சுக்கலாம்.

மாணி: அவ்வளவு அவசரப்படக் கூடாது. பொறுத்துதான் போகணும்.

முனி: எனக்குத் தெரியாதா? இவ்வளவு நாள் காத்திருந்தது கொஞ்ச நாளில் என்ன ஆகப் போகிறது. ஆனால் என் அப்பாதான் அவசரப் படுத்துகிறார்.

மாணி: கல்யாணத்துக்கு நீ...

முனி: என்னைக் கேட்கணும் என்கிற அவசியமே கிடையாது.

மாணி: கல்யாணத்துக்கு நீ அவசியம் வந்திருந்து நடத்தித் தரணும்.

முனி: பையன்?

மாணி: மருதைதான். (ஏஜண்டு வருகிறார்)

ஏஜ: டேய்! அவனோடே என்னடா ரகசியம் பேசிக்கிட்டிருக்கிங்க!

முனி: சும்மா பேசிக்கிட்டிருந்தேன்.

ஏஜ: அந்தக் களவாணிப்பயலோட என்ன பேச்சு வேண்டியிருக்கு?

மணி: ஏனய்யா! எங்களைப் பார்த்தால் களவாணிப்பயலாட்டமாவா இருக்கு? களவாடினதால்தான் கையில் தங்கப்பூண் பிரம்பும், மேலே பட்டுப் பீதாம்பரமும் இருக்கிறதோ?

ஏஜ: காலிப் பயலே—என்ன சொன்னே!

மாணி: காலியில்லாத ஆசாமியையே பார்க்க முடியாது. நான் ஒரு காலி, நீங்க ஒரு காலி, ஜமீன்தார் ஒரு காலி

ஏஜ: என்ன சொன்னே!

மாணி: கோபப் படாதிங்க! எனக்கு வயிறு காலி ஜமீன்தாருக்கு இருதயம் காலி, உங்களுக்கு (தலையைத்தட்டி) மூளைகாலி இப்போ இருக்கிற உலகத்தில் ஏதாவது ஒரு இடத்தை நிரப்பினால், இன்னொரு இடம் காலியாகி விடுகிறது. இருதயமும் மூளையும் இருந்தால் வயிறு காலி. மூளையும் வயிறும் நிரம்பினால், இருதயம் காலி, ஆனால் வயிறு இருதயம் மூளை மூன்றையும் ஒன்றையொன்று பாழ்படுத்தாமல் நிரப்புகிற வழிதான் காலியில்லாத வழி நல்லவழி, வேண்டிய வழி

ஏஜ: மட்டுமரியாதை இல்லாமல் என்னடா பேச்சு?

மாணி: மரியாதை! ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கிக் கொள்ள வேண்டிய பொருள்.

ஏஜ: என்னடா நீ சொல்றே!

மாணி: நீ என்னடா சொல்றே!

ஏஜ: அவ்வளவு திமிரா?

(கைத்தடியை ஓங்குகிறார். மாணிக்கம் அதைத் தடுத்து)

மாணி: அதட்டிப்பாருங்க, பேசிப்பாருங்க, ஆனால் இந்தக் கம்பு வேலை மாத்திரம் வச்சுக்காதிங்க.

ஏஜ: ஐயோ ஐயோ அடிக்கிறான், அடிக்கிறான். ஓடியாங்கடா?

(ஆட்கள் ஓடி வந்துபிடிக்கிறார்கள்)

ஏஜ: பிடிச்சுப்போய் ஜமீன் மாளிகையில் கட்டி வைங்க, ஜமீன் தாரரைப் பார்த்து என்ன செய்கிறேன் பாரு.

காட்சி-11

இடம்: மாளிகையின் ஒரு அறை.

(நிகழ்ச்சி: செல்வநாயகம் படுக்கையில் படுத்திருக்கிறான். டாக்டர் ஸ்தஸாஸ்கோப் வைத்து பார்த்துக்கொண்டிருக்கிறார் பக்கத்தில் கண்ணம்மாள், சாமித்துரை நின்றுகொண்டிருக்கிறார்கள்)

கண்: எப்படியிருக்குறது.

டாக்டர்: காய்ச்சல் முற்றிலும் நீங்கிவிட்டது. இரண்டு நாளைக்கு முன் டெம்பரேச்சர் உயர்ந்தவுடன் மறுமறையும் ஜுரம் வருமோ என்றுபயந்தேன். இப்பொழுது ஆபத்து நீங்கி விட்டது. இனி பல வீனத்தைப் போக்க வேண்டும்.

கண்: செல்வன் பிழைத்துக் கொள்வானு?

டாக்: பிழைத்துக் கொண்டுவிட்டான். ஆனுல் நான் கொடுத்தமருந்துகளைவிட நீங்கள் செய்த பணி விடைகள் தான் அவனுக்கு உயிர்கொடுத்தன. ஆனுல் இதற்கு மேலும் இப்படிஉங்கள் உடம்பை அலட்டிக் கொள்ளக் கூடாது. பையன் குணமடைந்ததும் உங் களுக்கு வைத்தியம் செய்ய வேண்டிய நிலையி லிருக்கிறது.

கண்: இல்லை டாக்டர் நான் நன்ருகத்தானிருக் கிறேன். என் மகன் பிழைக்காதிருந்தால், நானும்.........

டாக்: நாங்களிருக்கிறவரை செத்துப்போவது அவ்வளவு சுலபமான காரியமல்ல அம்மா!

சாமி: எப்பொழுது அவன் எழுந்து நடமாட முடியும்?

டாக்: ஏன்? இப்பொழுதேகூட நடமாடலாம். ஆனுல் அதிகமாக உடம்பை அலட்டிக்கொள்ள வேண்டாம்.

(பேசிக்கொண்டே ஒரு ஊசி போடுகிருர்)

டாக்: வலிக்கிறதா என்ன?

செல்: கட்டெறும்பு கடிக்கிற மாதிரி

டாக்: நேற்றுக் கொடுத்த மருந்து இருக்கிறதா?

செல்: இன்னும் இரண்டு வேளைக்கு இருக் கிறது.

டாக்: கசப்பான மருந்து. இனிமேல் இனிக்கிற மருந்து கொடுக்கிறேன். சரியா? நாழிகையாகி விட்டது. நான் போகிறேன். நீங்கள் சந்தோஷ மாயிருந்தால் தான் அவனுக்கும் சீக்கிரமாகக் குணமடையும்.

(போகிருர்)

சாமி: எப்படியோ பையன் குணமடைந்து விட் டான்.

(ஏஜண்டு வருகிருர்)

சாமி. என்ன ஏன் இப்படி அவசரமாக ஓடியா ரிங்க

ஏஜ: அதையேங்க கேட்கிறீங்க

சாமி: இல்லை அதைத் தான் கேட்கிறேன்.

ஏஜ: வீரப்பன் மகன் மாணிக்கம் என்னை அடிக்க வந்தான்.

சாமி: அடிக்க வந்தானு? ஜமீன் ஏஜண்டையா? எங்கே அடிவிழுந்தது?

ஏஜ: அடிவிழவில்லை, என் கையிலிருந்த தடி யைப் பிடுங்கிக் கொண்டான்,

சாமி: அவ்வளவுக்கு மிஞ்சிவிட்டதா?

ஏஜ: என்னை அடிச்சா கூட பாதகமில்லை. ஆனுல் ஜமீன்தாரரையே இழிவாகப் பேசினுன்.

சாமி: என்ன சொன்னுன் (இன்னொரு ஆளைப் பார்த்து) என்னடா சொன்னுன்.

ஏஜ: (தூரநின்று) ஜமீன் ஒரு காலின்னு சொன் னுன்.

சாமி: ஆ! அப்படியா சொன்னுன். நீங்களும் அதைக் கேட்டுக் கொண்டு எங்கிட்டே வந்து சொல்றீங்க!

ஏஜ: அந்த வார்த்தையைச் சொன்ன பிறகு நான் சும்மா விடுவேனு? அவனைக் கைப்பிடி யாகக்கட்டி, இங்கே இழுத்து வந்து, தூணில் கட்டிவைத்திருக்கிறேன். போலீஸுக்கு ஆள னுப்பியிருக்கிறேன்.

சாமி: சும்மாவிடக்கூடாது. அந்தத் துடுக்குக் காரனை இவனுல் தான் சேரியே பாழ்பட்டுக் கிடக்கிறது.

(ஏஜண்டும் ஜமீன்தாரும் போகின்றனர். கூடவந்த ஆள் அங்கேயே நிற்கிருன்)

செல்: (உட்கார முயன்று) அம்மா!

கண்: ஏண்டா! என்னவேணும். இப்படி எழுந் திருக்கக் கூடாது.

செல்: ஏஜண்டு என்ன சொல்லிக் கொண்டிருந் தார்.

கண்: யாரோ ஒரு முரடன் ஜமீன்தாரைத் திட்டி ஏஜண்டையும் அடிச்சானும். அவனைப் பிடிச்சு வைத்திருக்கிருர்களாம். நீ ஒன்றும் பயப்பட வேண்டாம்.

செல்: அவன் பேரென்ன?

கண்: எனக்குத் தெரியாதே! வெளியில் நிற் பனைப் பார்த்து) நீங்கள் பிடித்து வந்தவன் யாருடா?

ஆள்: வீரப்பன் மகன் மாணிக்கம் நம்ம குடியா னவன்தான்.

செல்: அம்மா! நீங்கள் உடனே போய் அவனை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடச் செய்யுங்கள்.

கண்: அவனையா? ஏஜண்டை அடித்து, ஜமீ னையே திட்டினுனும். அவனை எப்படி விட்டு விடுகிறது.

செல்: அவனைப்பற்றி உங்களுக்கு அதிகம் தெரியாது. என்னால் நடக்க முடிந்தால் நானே போய் அப்பாவிடம் சொல்லி, அவனை விடு விப்பேன்.

கண்: அவருக்கு இருக்கும் கோபத்தில், நான் என்ன சொன்னாலும் அவர் காதில் போட்டுக் கொள்ள மாட்டாரே!

செல்: சரி! நானே போகிறேன் (எழுந்திருக்க முயற்சிக்கிறான்)

கண்: நீ பேசாமல் படுத்துக் கொள். நான் எப்படியும் அவனைத் தொந்தரவு செய்யாமல் அனுப்பிவிடுகிறேன்.

(போகிறாள்)

(தோட்டத்தில் மாணிக்கம் கட்டப்பட்டிருப்பதைப் பார்த்து அவன் பக்கத்திலிருக்கும் முனியாண்டியிடம்)

கண்: உன்னைத்தான் தேடிக் கொண்டிருந்தேன். ஓடிப்போய் வாழைக் கொல்லையில் ஒரு வாழையிலை நறுக்கிக் கொண்டுவா.

முனி: காலையில் தான் ஒரு கட்டு கொண்டு வந்தேனே.

கண்: புது இலையாக வேண்டும். சீக்கிரம்போ!

முனி: இவனைப் பார்த்துக்கச் சொல்லி ஏஜண்டு என்னை இங்கேயே இருக்கச் சொன்னார்.

கண்: எனக்கு அவசரமாக வேண்டும். நீ வருகிற வரைக்கும் நான் இங்கேயே இருக்கிறேன்

முனி: அப்படியானால் சரி! பத்திரமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்.

(முனியாண்டி போகிறான். போனபின். கண்ணம்மாள் மாணிக்கத்தின் கட்டுகளை அவிழ்த்துவிட்டு)

கண்: கட்டுகளை அவிழ்த்துவிட்டேன் நீ ஓடிப்போ?

மாணி: போலீஸ் வந்து விட்டார்களா?

கண்: இன்னும் வரவில்லை. யாரும் பார்ப்பதற்குள் ஓடிப் போய்விடு.

மாணி: ஏதோ சூது இருக்கிறது. உண்மை என்ன? நான் ஓடினால் அதைச் சாக்காக வைத்து என்னைச் சுட்டுக் கொல்ல போலீஸ் தயாராயிருக்கிறார்களா?

கண்: அதெல்லாம் ஒன்றும் கிடையாது. உன்னைக் கட்டி வைத்துத் துன்புறுத்துகிறார்களே என்று பாச்சாத்தாபப் பட்டு விடுவித்தேன்.

மாணி: (சிரித்து) பச்சாத்தாபம்! . வாயில் கௌவிய ஆட்டிடம் புலிபச்சாத்தாபம் காட்டுவது கிடையாது. நீங்கள் செய்வது என்ன என்பது எனக்குப் புரியவில்லை.

கண்: எனக்கும் புரியவில்லை! ஆனால் செல்வன் பிடிவாதமாகச் சொல்லுகிறான்.

மணி: அந்த வஞ்சகன் வேலையா?

கண்: வஞ்சகனா? என் மகனா? உதவி செய்தவனுக்கு இந்த வசை மொழிதான் பலனா?

மாணி: அவனிடம் போய்ச் சொல்லுங்கள். அவ்வளவு சுலபத்தில் என்னை ஏமாற்றி விட முடியாது என்று

கண்: உன்னை அவன் ஏன் ஏமாற்ற வேண்டும்! உனக்கு உதவி செய்வதாக நினைத்துத் தன்னையே ஏமாற்றி கொள்கிறான். உன்னுடைய நன்றி கெட்ட தன்மைக்கு எவ்வளவு தண்டனை கிடைத்தாலும் தகும் உன்னை ஏன் நான் அவிழ்த்து விட்டேன்.

மாணி: யாரோ வருகிறார்கள். இனி காலால் பேசவேண்டியது தான்.

(மாணிக்கம் ஓடிவிடுகிறான். சப்இன்ஸ்பெக்டரும் நாலுஜவான்களும் வருகிறார்கள்)

சப்: எங்கே அந்த கலகக்காரன்.

கண்: கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டான்.

சப்: ஓடி விட்டானா! 82, 103 சீக்கிரம் தேடிப் பாருங்கள். எங்கே ஓடி விடுவான்?

(ஜவான்கள் போகின்றனர் ஜமீன்தார் வருகிறார்)

ஜமீ: கடைசியாக அவன் அகப்பட்டுக்கொண்டான்.

சப்: அவன் வந்து

ஜமீ: திமிராகப் பேசுவான். இரண்டு கொடுத்தால் அடங்கிவிடுவான்.

சப்: இங்கிருந்து

ஜமீ: நேரா ஸ்டேஷனுக்கு இழுத்துக் கொண்டு போயிடுங்க.

சப்: நாங்கள் வருவதற்குள்

ஜமீ: நம்ப ஆட்களே உங்கள் வேலையைச் செய்து விட்டார்களா?

சப்: அந்த மாணிக்கம்

ஜமீ: விட்டு விடாதீர்கள்; இது தான் சரியான சமயம், சரியாகத் தண்டிக்கணும்.

சப்: அவன் ஓடிவிட்டானுங்க.

ஜமீ: ஓடிவிட்டான?

சப்: ஆம் தேடுவதற்கு ஜாவான்கள் போயிருக்கிறார்கள்

ஜமீ: உங்களிடமிருந்து தப்பித்துக்கொண்டாலும் என்னிடமிருந்து அவன் எப்படியும் தப்பிக்க முடியாது. அவன் என் கையில் சிக்கியதும் என்ன பாடு படுத்துகிறேன் பாருங்கள்.

காட்சி-12

இடம்: தோட்டம்

நிகழ்ச்சி: கண்ணம்மாள் சாய்வு நாற்காலியில் தலையணைகளைப் போட்டு ஒழுங்கு படுத்திக் கொண்டிருக்கிறாள். செல்வநாயகம் வருகிறான்.

(டாக்டர் வருகிறார்)

டாக்: அதிக நேரம் உலவவிட வேண்டாம். சிறிது நேரம் இங்கு காற்றாட உட்கார்ந்து இருக்கட்டும். வெய்யல் வந்ததும் உள்ளே அழைத்துப் போய் விடுங்கள்

கண்: என்ன செய்தும் செல்வனுடைய உடம்பு இன்னும் பழைய நிலைக்கு வரவில்லையே!

டாக்: செல்வனுடைய உடல் நலமாகி விட்டதே தவிற உள்ளத்தில் உற்சாகத்தைக் காணோம். வாழ்க்கையை வெறுத்தவன் போல் காணப்படுகிறான். மருந்து எவ்வளவு தான், காப்பாற்றிய போதிலும் அவனுக்கே வாழவேண்டுமென்ற நம்பிக்கையும் ஆவலும் வேண்டும். அது இல்லாவிட்டால் நாம் எவ்வளவு பாடு பட்டபோதிலும் பலன் கிடைக்காது. அவனுக்குப் பிடிக்காத காரியம் ஏதாவது நடந்ததா? அல்லது அவன் விரும்பியது கிடைக்காமற் போயிற்று

கண்: அப்படியொன்றும் நாங்கள் செய்ய வில்லையே! காய்ச்சல் வந்த அன்று காலை கூட நன்றாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தான்

டாக்: எப்பொழுதும் ஏக்கத்துடன் உட்கார்ந்திருக்கிறான். நோய் தீர்ந்து விட்டது, ஆனல் மனத்தில் ஓர் நோய் மறைந்திருக்கிறது. ஏதோ அதிர்ச்சி தரும் சம்பவம், எதிர்பாராத ஏமாற்றம் அவன் வாழ்க்கையை சூன்யமாகச் செய்து விட்டது. அவன் மனத்தை அரித்துவரும் நோயைப் போக்கி, மகிழ்ச்சியை உண்டாக்கினல் தான் அவனை நாம் காப்பாற்ற முடியும்

(போகிறார்)

கண்: இந்த ஊரை விட்டு, வெளியூருக்கு எங்கேயாவது அவனை அழைத்துக் கொண்டு போகலாமா?

(டாக்டரைப் பின் பற்றி அவளும் போய் விடுகிறாள். அவன் கையில் ஒரு படத்தை வைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான். இன்னும் ஒரு தலையணையும் கொண்டுவந்து தலைக்குப் பின்னல் வைக்கிறான் கண்ணம்மா)

கண்: அந்தப் படம் யாருடையது?

செல்: ஒருபெண்ணுடையது.

கண்: அது தெரிகிறது. அந்தப்பெண்யார். இந்தப் படம் உனக்கெப்படிக் கிடைத்தது.

செல். அவள் பெயர் அல்லி! அவளைக் காதலித்தேன். அவளையே மணந்துகொள்வதாக இருந்தேன். கடைசியாக எனக்குக் கிடைத்ததெல்லாம் இந்தப்படம்தான்.

கண்: இவளை நானும் பார்த்தமாதிரியிருக்கிறது. எங்கே என்று ஞாபகம் வரவில்லை.

செல்: இவளை எந்த ஜமீன் வீட்டிலும் பார்த்திருக்க முடியாது. இவள் நம் சேரியைச் சேர்ந்தவள். வீரப்பன் மகள் அல்லிதான்.

கண்: அவளா? அவள் உனக்கு எந்த வகையிலும் ஏற்றவளல்லவே!

செல்: அவள் ஏழை! தாழ்ந்தகுலம். அதிகம் படிக்காதவள் இருந்தும் அவளுக்கு நான் ஏற்றவனல்ல என்பதைத் தெரிந்துகொண்டேன்.

கண்: அவளைவிட அழகாக, படித்த பெண்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தியை நீ கல்யாணம் செய்துகொள்ளலாம்.

செல்: கல்யாணம்செய்துகொள்ளலாம். ஆனல் காதலிக்க முடியாதே!

கண்: அவளையே கல்யாணம் செய்து கொள்வேன் என்கிறாய். யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்களே. முதலில் உன் அப்பா சம்மதிக்கமாட்டார். மிகவும் சங்கடமான நிலையில் கொண்டுவந்து வைத்து விட்டாயே!

செல்: சஞ்சலமடைய வேண்டாம். இந்தக் கல்யாணம் நடைபெருது.

கண்: ஏன்?

செல்: நான் கோடீசுவரனின் மகன், எனினும் அந்தக் கோமளவல்லியைப் பெற முடியவில்லை. பொன், வெள்ளி ஆபரணங்களைக் குவித்தால்கூட அவளுடைய புன்சிரிப்பை இனிக் காண முடியாது.

கண்: அவள் இறந்துவிட்டாளா?

செல்: அவள் இருக்கிறாள். அவள் இறந்தால் நான் உயிருடன் இருந்திருப்பேனா? ஆனால் என்னுடைய கனவு இறந்துவிட்டது, என்னுடைய காதற்களஞ்சியமே என்னை வெறுத் தொதுக்கிய பிறகு, வாழ்க்கையில் வேறு என்ன எனக்கு இருக்கிறது.

(கண்ணம்மாள் யோசிக்கிறாள்)

காட்சி 13

இடம்: ஆற்றங்கரை.

நிகழ்ச்சி: அல்லிதனியாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கிறாள்.

அல்: நான் ஏன் பெண்ணாய் பிறந்தேன்? என் குடும்பத்தின்மீது பேரிடிகள் ஒன்றன்பின் ஒன்றாக விழுகத வண்ணம் இருக்கின்றன. தாய் வெள்ளத்தில் இறந்தாள்; தந்தை குண்டுக்குப் பலியானார்; அண்ணன் எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை. ஒரு பெண்ணால் எவ்வளவு வேதனைகளைத்தான் தாங்கிக் கொள்ள முடியும்?

என்னுடைய ஒரே காதல். அதுவும் எங்களால வெறுக்கப்படுகிற ஒரே ஜமீன் குடும்பத்தில் படர்ந்தது. கையில் கிடைத்த கனியை உண்ணப்போகும் நேரத்தல் அது கையிலிருந்து தட்டிப் பறக்கப்பட்டுவிட்டது.

என் செல்வமே! நீ ஏன் ஜமீன் குடும்பத்தில் பிறந்தாய்? ஜமீன் மாளிகையை விட்டு வந்துவிடு. என் இதய மாளிகையில் இருக்கலாம். புன்னகைப் பூஞ்சோலையல உலவலாம். அந்த இனிமையும் மகிழ்ச்சியும் உனக்கு எப்பொழுதும் கிடைக்கும். பகல் இருண்டாலும் இருள் சூழாத இடம். புயல் வீசினாலும் தென்றல குறையாத இடம்.

என் காதற்களஞ்சியமே! நான் உன்னை இனி என்று காண்பேன். நினைவற்ற நிலையில் ''அல்லி'' ''அல்லி'' என்று பிதற்றிக்கொண்டிருந்தாய்என்றுசொல்லுகிறார்கள். நினைவு வந்ததும் என்னென்ன கூறி என்னைத் தூற்றுகிறாயோ? காலப்போக்கில் என் பெயர் உன் நினைவிலிருந்தே மறைந்து விடலாம். பெரிய ஜமீன் வீட்டுப் பெண் உனக்கு மாலையிடுவாள்; அவளை உன் மாளிகையில் அமர்த்தி மகிழ்ச்சியடைவாய். ஆனால் என்னுடைய இதய மாளிகையில் வேறு எவரும் நுழைய முடியாது. சோகம் நிறைந்த அமைதியில் அதைத் தாங்கிக் கொண்டு நான் திரிந்து கொண்டிருப்பேன்.

(கண்ணம்மாவருகிறாள்)

கண்: அல்லி

அல்: யாரது

கண்: நான்தான்

அல்: ஜமீன்தாரம்மாவா? எங்கு இவ்வளவு தூரம் வந்தீர்கள்

கண்: உன்னிடம் ஒரு உதவியை எதிர் பார்த்து வந்தேன்.

அல்: இந்த ஏழையால் என்ன உதவி செய்ய முடியும்

கண்: உன்னைவிட மிக ஏழ்மையான நிலையில் நானிருக்கிறேன். (அல்லி பேசாமலிருக்கிறாள்) என்னுடன் வா போகலாம்.

அல்: ஜமீன் மாளிகைக்கா?

கண்: ஆம்.

அல்: அதுமுடியாதகாரியம்.

கண்: ஏன்?

அல்: எங்களுடைய சேரிக்கும் உங்களுடைய மாளிகைக்கும் நெடுந்தூரம், கடக்க முடியாத தூரம் இருக்கிறது. வழியில் வியர்வை, கண்ணீர், இரத்தம், பிணம் இவைகள் கிடக்கின்றன. இவைகளைத் தாண்டிக் கொண்டு என்னால் வர முடியாது.

கண்: நீ படுகிற வேதனைகளைவிட அதிகமாக நான் அனுபவித்து வருகிறேன். எனக்காகவாவது நீ மன்னித்துவிடு. என்னோடு வா!

அல்: மன்னிப்பு! வெகு சுலபத்தில் சொல்லிவிட்டீர்கள். எந்தக் கொடுமையை மன்னிக்க முடியும்? எங்கள் குடிசைகள் வெள்ளத்தால் அழிக்கப் பட்டதையா? பஞ்சம் எங்களை அணைத்துக் கொண்டதையா? பசி எங்களை

வேட்டையாடியதையா? போங்கள் அம்மா! என் வேதனையைக் கிளராதீர்கள்.

கண்: (அருகில் வந்து) நான் மன்னிக்கும் படி சொன்னது என் மகன் செல்வநாயகத்தை. அவன் செய்த ஒரே ஒரு தவறு ஜமீன் குடும்பத்தில் பிறந்தது தான் அல்லி! நானும் ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். செல்வன் ஒரு ஏழையின் மகன் என்று நினைத்துக் கொள். அவன் உன்னைக் காதலிக்கிறான். அதற்காக அவனைக் கொடுமைப்படுத்தாதே!

அல்: கொடுமைகளை ஏற்று வேதனைப் படுகிறவளே பொழிய, கொடுமை செய்து அறியாதவள் நான். அவர் இன்னும் என்னை மறககவில்லையா?

கண்: உன்னை நினைத்து தன்னையே இழந்தபடி உட்கார்ந்திருக்கிறான். இப்படியே இருந்தால் அவன் இறந்து போவது நிச்சயம். ஒரு முறை வந்து பார். பார்த்தால் எவ்வளவு பரிதாபமாக இருக்கிறது என்று.

அல்: வருகிறேன்......ஆனால் சீக்கிரம் திரும்பி விடுவேன்.

கண்: வா போகலாம்.

(அழைத்துக் கொண்டு வேகமாக நடக்க ஆரம்பிககிறாள)

அல்: இவ்வளவு வேகமாக என்னால் நடக்க முடியாது மெதுவாகப் போகலாம். இந்த வழியாக வேண்டாம். எங்களைச் சேர்ந்தவர்கள் யாராவது பார்த்து விடுவார்கள். இந்தப் பக்கமாகப் போகலாம்.

(போகின்றனர். ஜமீன் தோட்டத்தையடைந்ததும்)

அல்: (ஆவலுடன்) அவர் எங்கே!

கண்: அதோ அந்த அறையின் ஜன்னல் ஓரத்தில் நின்று கொண்டிருக்கிறானே அது அவன் தான்.

(அல்லி ஓடுகிறாள்)

காட்சி 14

இடம்: தனி அறை.

நிகழ்ச்சி: செல்வநாயகம் ஜன்னல் ஓரம் நின்று கொண்டிருக்கிறான். அல்லி வருகிறாள். செல்வநாயம் திரும்பிப்பார்க்கிறான்.

செல்: அல்லி!

(அல்லி ஓடிவந்து தழுவி நிற்கிறாள்)

செல்: நான் காண்பது கனவா? நனவா? என்று கூடப் புரியவில்லை. என்னுடைய மனதில் ஏற்பட்ட பிரமை, கற்பனை உருவங்களை என் அருகே நிறுத்துகின்றதா? அல்லி! நீ உண்மையாக என் எதிரில் நிற்பதானால் ஏன் ஒன்றும் பேசாமலிருக்கிறாய். உன்னுடைய இனிய குரலைக் கேட்டால் நான் காண்பது கனவல்ல என்று நம்ப முடியும்

அல்: கண்ணாளா!

செல்: போதும்! அது ஒன்றே போதும். என் பயம் நீங்கியது. மனக்கஷ்டங்களெல்லாம் பறந்து விட்டன! எந்த செவ்விதழ்கள் "வெறுக்கிறேன்" என்று என்னை விரட்டியடித்தனவோ-அவைகளே தேன்மொழியால் எனக்குப் புத்துயிரளித்துவிட்டன. ஏன் அவ்வாறு என்னை வேதனைக்குள்ளாக்கினாய்?

அல்: உங்களை வெறுப்பதாக நான் சொல்லவில்லையே. ஜமீன் செய்த கொடுமைகளை வெறுப்பதாகச் சொன்னேன். இவ்வளவு கஷ்டங்களையும், கட்டுப்பாடுகளையும் மீறி, உங்களைக் காதலிக்கக் கற்றுக்கொண்ட என்னைத் தவிர, வேறுயாரை நான் வெறுக்க முடியும்!

செல்: அப்படிச் சொல்லாதே! என் காதலியை வெறுப்பவர்களை நான் சும்மா விடமாட்டேன். போதும்! அந்த வேதனை கலந்த வார்த்தைகளை மீண்டும் சொல்லவேண்டாம். ஆற்றங்கரையில் அன்றுன்னைச் சந்தித்தேனே ஞாபகம் இருக்கிறதா?

அல்: நானெப்படி மறக்க முடியும்? நினைவு என்னைவிட்டு அகலும்பொழுது, மறையும் கடைசி நினைவு அதுவாகத்தானிருக்கும்.

செல்: அன்று நான் கூறினேன் நம்முடைய காதல் குறையாத மணம், குன்றாத முத்து, நிற்காத இசை, நீடித்த இன்பமென்று. நீ கூடச் சிரித்தாய் கேலியாக. அது எந்த அளவும் பொய்த்துப் போகவில்லை. நான் இழந்த முத்து மீண்டும் பிரகாசிக்கிறது. நின்றிருந்த இசை மீண்டும் தொடங்குகிறது. புயல் அடங்கி தென்றல் வீச, குளிர் நீங்கி இளவேனில் தொடங்கிவிட்டது. மலர் தோன்றி மணம் வீசுகிறது.

அல்: சென்றதை நினைத்தால் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது தெரியுமா? உல்லாசம் என்று நினைத்துக்கொண்டிருக்கிற நேரத்தில் கொந்தளிப்பு உண்டாகியது. போராட முடி

யாமல் தத்தளித்தேன். கடைசியாக முடியாத காரியமென்று அடங்கிவிட்டேன். நமக்குக் கிட்டாத நினைவு என்று மனதில் முளைக்கும் இன்பக் கனவுகளையெல்லாம் வெட்டித் தள்ளினேன். ஆனால் அந்தக் காடு அழிக்கமுடியாததாக வளர்ந்தது. எவ்வளவு நாட்கள் ஆற்றங்கரையில் உட்கார்ந்து. ஆற்றுத் தண்ணீருடன் என் கண்ணீரைக் கலந்திருப்பேன் தெரியுமா?

செல்: இவ்வளவு காதலித்தும் என்னைவிட்டு விலகி ஏன் இருந்தாய்?

அல்: நாம் எவ்வளவு காதலித்தாலும் உலகம் அதை ஏற்றுக்கொள்ளாதே! பணத்தைக் காட்டி அவளை அவன் ஏமாற்றி விட்டான் என்று ஒரு பக்கத்தில் சொல்வார்கள். அவனுடைய பணத்திற்காக அவனை அவள் மயக்கிவிட்டாள் என்று மற்றொரு பக்கத்தில் கூறுவார்கள். மாளிகையில் எனக்கு வஞ்சகக்காரி என்று பெயர் இருக்கும். சேரியில் துரோகி என்று தூற்றப்படுவேன்.

செல்: நீ செய்வது வஞ்சகமோ துரோகமோ அல்ல! ஜமீன் தொல்லைகளில் நீங்கள் மட்டுமல்ல, நானும் சிக்கியிருக்கிறேன். அதிலிருந்து உங்களைப்போல நானும் விடுபடவேண்டும். நம்முடைய திருமணம் அதற்கு ஆரம்பமாயிருக்கும்.

அல்: என்னுடைய அண்ணன்.

செல்: முதலில் ஒத்துக்கொள்ளாவிட்டாலும் உண்மை தெரிந்ததும் நம்மை நிச்சயமாக ஆதரிப்பான்.

அல்: அவர் இப்பொழுது எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை. அவர் திரும்பிவந்தால் ஜமீன்தார் சும்மா விட மாட்டாரே!

செல்: அவனைத் திரும்ப வரவழைப்பது நம்முடைய முதல் வேலை. அவனுக்கு யாதொரு தீங்கும் வராது. ஜமீன்தாராயிருந்தாலும் சரி! சக்ரவர்த்தியாயிருந்தாலும் சரி மாணிக்கத்தைப் பாதுகாக்க நான் தவறமாட்டேன்.

(கண்ணம்மாள் வருகிருள். பூ எடுத்து வந்து அல்லியின் தலையில் சூட்டுகிருள்)

கண்: முன்பெல்லாம் நீ பூக்கொண்டுவந்து எனக்குக் கொடுத்தாய். இனிமேல் நான் பூத் தொடுத்து தினந்தோறும் உனக்குச் சூட்டி விடுவேன்.

(யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்கிறது)

செல்: யார் வருகிறது?

கண்: அப்பாதான்.

அல்: ஜமீன்தாரா? நான் போகிறேன்.

செல்: ஓடாதே! அப்பாவிடம் நான் சொல்ல வேண்டியதைச் சொல்லப்போகிறேன்.

(ஜமீன்தார் வருகிருர்)

செல்: (முன்னால் வந்து) இந்தப் பெண் பெயர் அல்லி!

ஜமீ: அழகான பெயர்தான். ஏதோ சொல்ல வந்தேனே!

செல்: இவள் நம்முடைய சேரியைச் சேர்ந்தவள்.

ஜமீ: அவளையெல்லாம் இங்கேயேன் வரவிடுகிருய்? சரி, நேற்று அந்த...

செல்: அப்பா! இவளை நான் காதலிக்கிறேன். இவளைத் திருமணம் செய்து கொள்வது என்று தீர்மானித்துவிட்டேன். நீங்கள் சம்மதிக்க மாட்டீர்களென்று தெரியும். இருந்தாலும் உங்களிடம் தெரிவித்துவிட்டுச் செய்யலாம் என நிச்சயித்தேன்.

ஜமீ: நிச்சயதார்த்தம் ஆகிவிட்டது. இனி முகூர்த்தத்துக்கு நாள் பார்க்கவேண்டியதுதான் பாக்கி! (கோபமாக) உன்னிடம் அப்புறம் பேசிக்கொள்ளுகிறேன். முதலில் இந்தக் கழுதையை வீட்டைவிட்டுப் போகச் சொல்.

செல்: அல்லி! போகாதே. உன்னை மட்டும் அவர் போகச் சொல்லவில்லை. அவர் என்னையும் விரட்டுகிருர். நானும் உன்னுடன் வருகிறேன். வா போகலாம்!

கண்: செல்வா! உன் அம்மாவை மறந்துவிட்டாயே உன்னைப் பிரிந்து நானெப்படி வாழ்வேன். உங்களுடன் நானும் வருகிறேன். முதலில் என்னுடைய பிறந்த வீட்டுக்குப் போகலாம். அந்த வீடு இந்த மாளிகையைப் போல பெரியதல்ல, ஆனால் நாம் மூவரும் நிம்மதியாக வாழ்வதற்குப் போதுமான இடம்.

ஜமீ: நீயும் அவனுடன் சேர்ந்து கொண்டாயா?

கண்: செல்வன் பிழைப்பானு என்று கிடந்தான். பிழைத்தும் இறந்த மனிதனைப்போல உட்கார்ந்திருந்தான். உங்களுடைய திரண்ட சொத்தால் தர முடியாத மகிழ்ச்சியை இந்தப் பெண்தான் அவனுக்குத் தந்தாள். பல நாட்கள் கழித்து செல்வன் சிரிக்கும் சத்தத்தை இன்றுதான் என்னால் கேட்க முடிந்தது

அவன் எப்படியாவது மகிழ்ச்சியாக வாழ்ந்தால் அதுவே போதுமானது.

(வேலைக்காரன் ஒருவன் வந்து ஜமீன்தார் காதில் எதையோ சொல்லிப் போகிறான். அவன் சொன்ன பிறகு ஒரு முடிவுக்கு வந்தவர்போல் காணப்பட்ட அவர்)

சாமி: அதுவும் அப்படியா...

கண்: என்ன?

சாமி: நம்முடைய செல்வனுக்குப் பெண் கொடுப்பதாக இருந்த வீட்டார் நம்மை மோசஞ்செய்து விட்டார்கள். வேறு யாருக்கோ பெண் கொடுக்க முடிவு செய்து விட்டார்களாம். இந்த அவமானத்தை என்னால் தாங்க முடியாது. அதே தேதியில் செல்வனுக்கு நாம் கல்யாணத்தை நடத்திவிட வேண்டும். பெண்தான்...

செல்: இவளைத் தவிர வேறு யாரையும் நான் மணந்துகொள்ளப் போவதில்லை.

சாமி: என்ன செய்வது! நீ பிடிவாதம் செய்கிறாய், கண்ணம்மாவும் உன் பக்கம் இருக்கிறாள். இந்தப் பெண்ணுக்குக்கூட ஒன்றும் குறைவில்லை. நல்ல புடவையும் நகையும் போட்டுவிட்டால் செல்வனுக்கு ஏற்ற லட்சுமி மாதிரியிருப்பாள். ஆனால் மற்றவர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். அவர்களை முதலிலேயே கூப்பிட்டுச் சொல்லி சமாதானம் செய்து விடலாம். கல்யாணத்தை இன்னும் ஒரு வாரத்துக்குள் வைத்துவிடவேண்டும்.

(போகிறார்)

அல்: நம்முடைய கல்யாணத்துக்கு ஜமீன்தாரும் ஒத்துக்கொண்டுவிட்டார்.

செல்: எனக்கு ஆச்சரியமாகவேயிருக்கிறது. நான் எதிர்பார்க்கவில்லை.

கண்: எனக்கென்னவோ பயமாயிருக்கிறது.

காட்சி 15

இடம்: தோட்டம்.

நிகழ்ச்சி: ஜமீன்தார் குதிரைச் சவுக்கைச் சுழற்றிப்பார்க்கிறார். அல்லிவந்து நிற்கிறாள்.

ஜமீ: ஏன் இப்படி ஒதுங்கி நிற்கிறாய்! உன்மேல் அடிவிழுமென்று பயப்படுகிறாயா? என் மாளிகைக்கு வரப் போகிறவளை இந்த சவுக்கு கொண்டா வரவேற்பேன். இதை நீயே வைத்துக்கொள். குதிரை கட்டுக்கு மீறிக்

குதித்தால் இந்த சவுக்கைக்கொண்டு அதை அடக்குவார்கள். சும்மா வீசினால் சத்தம் கேட்காது. அந்த மரத்தின்மீது அடி அடிக்கிறாள்.

அல்: சின்ன வயதில் பள்ளிக்கூடத்தில் வாத்தியார் எங்களையெல்லாம் அடிப்பார். சாலை ஓரத்திலிருக்கிற மரங்களையெல்லாம் பையன்களாகப் பாவித்து, நாங்கள் வாங்கின அடிகளையெல்லாம் அவற்றின்மீது தீர்த்து விடுவோம்.

(ஜமீன்தார் மீண்டும் சவுக்கை வாங்கி, தண்ணீரில் நனைத்து அடிக்கக் கொடுக்கிறார்)

ஜமீ: இனிமேல் அடம் செய்யாதே எதிர்த்துப் போசாதே, அடங்கி இருக்கிறாயா? என்று அடி

(அல்லி சிரிக்கிறாள்)

ஜமீ: வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

அல்: நீங்கள் இவ்வளவு நல்ல தன்மையுடையவரென்று எனக்குத் தெரியாது.

ஜமீ: இந்த மாளிகை உனக்குப் பிடிக்கிறதா?

அல்: வெகு சீக்கிரத்தில் பழகிவிட்டேன்.

ஜமீ: இன்னும் பத்து அடிகள் கொடு. அப்பொழுதுதான் அந்தப் பையன் அடங்குவான்.

அல்: ஒண்ணு (வேலையாளைப் பார்த்து) உன் மீது அடி அடிப்பட்டு விட்டதா? பின் ஏன் முணகிறாய்

(ஜமீன்தார் சைகை செய்கிறார் வேலையாள் மரத்தைச் சுற்றியிருந்த கயிரை எடுக்கிறான் மாணிக்கம் வந்து நிற்கிறான்)

அல்: அய்யோ நீங்களா?

மாணி: சீ! என்னைத் தொடாதே! பட்டாடைகளால் அலங்கரித்துக் கொண்டு இந்த மாளிகையிலே இரு ஜமீன்தார்தான் மிக நல்லவராகி விட்டாரே, அவருடன் சேர்ந்து கொண்டு குதிரைச் சவுக்கால் எங்களை அடி! அது உனக்கு வேடிக்கை தானே! மாளிகை வாசம் தான் உனக்குப் பழகி விட்டதே!

அல்: என்னைக் கொண்டே என் அண்ணனை அடித்தாயே!

(சவுக்கை யெடுத்து ஜமீன்தாரை அடிக்கிறாள். ஆட்கள் அல்லியைப் பிடிக்கிறார்கள். அல்லி திமிறிக் கொண்டு ஓடுகிறாள். தொடர்ந்து மாளிகைக் குள்ளிருந்து செல்வநாயகம் வருகிறான்)

செல்: அல்லி எங்கே காணோம். இந்தப் பக்கம் வந்தாளே!

ஜமீ: எனக்கொன்றும் தெரியாது

செல்: அவள் சிரிக்கும் சத்தம் கூட சற்று முன் கேட்டது!

ஜமீ: அந்தச் சிறுக்கி சிரித்தாள். இந்தச் சிறாளன் அப்படியே மயங்கி விட்டான். போடா போ! சாயங்கலம் பெண் பார்க்கப் போகிறோம் தயாராக இரு.

செல்: அல்லி! அல்லி!

(என்று கூவிக் கொண்டு போகிறான்)

காட்சி 16

இடம்: ஆற்றங்கரை

நிகழ்ச்சி: அல்லி தனியாக நிற்கிறாள்.

அல்: அல்லி! அழுதுபுலம்புவதில் பலனில்லை உலகில் உனக்கு வேறு வேலை கிடையாது; சாவைத் தவிர.

நீலவானம், நெளிந்து செல்லும் ஆறு, பூத்துக்குலுங்கும் இளமரங்கள், கூவித்திரியும் சிறு பறவைகள்; இந்த அழகிய உலகில் எனக்கு வாழ இடமில்லையே!

இந்த ஆறு நான் பிறந்தது முதல் என் முன் இருந்து வருகிறது. அன்னையின் அன்பு மொழிகளைக் கேட்டதும், தந்தையின் முன் தவழ்ந்து நடந்ததும், பின் அண்ணனுடன் விளையாடிப் பொழுது போக்கியதும் இதன் பக்கத்தில்தான். ஆனால் அவர்களையெல்லாம் பிரிந்து தனியாக நான் நிற்கிறேன். அப்பா, அம்மா இறந்தார்கள். அண்ணனுக்கு நானே கொடுமை செய்தேன். இதே இடத்தில்தான் நாங்களிருவரும் சந்தித்தோம். ஆனால், எல்லாம் எவ்வளவு சீக்கிரத்தில் முடிந்துவிட்டது. கண்ணைப் பறிக்கும் மின்னல் நாம் பார்க்கும் முன்பே மறைந்துவிடுவதுபோல என் கருத்தைப் பறித்த காதலும் கைகூடாமல் போயிற்று. காதலைக் கண்டெடுத்த இடத்திலேயே என் சாவைத் தேடி நிற்கிறேன்.

உலகமே உன்னைவிட்டுப் பிரிகிறேன். அம்மா! உங்களை ஏற்றுக்கொண்ட ஆறே என்னையும் அழைக்கிறது! அப்பா உங்களைத் தேடி நானும் வருகிறேன். அண்ணா நான் அறியாது செய்தபிழையை மன்னித்துவிடுங்கள். செல்வமே! உன்னிடமிருந்துதான் எப்படி விடைபெற்றுக் கொள்வதென்று தெரியவில்லை. என் இதயத்தில் உன்னை சுமந்தபடி செல்கிறேன். பெரும்பாரம் நீங்கிவிடும். தீராத காதல் இன்றுடன் தீர்ந்துவிடட்டும்.

[அல்லி ஓடுகிறாள். தண்ணீரில் விழும் சத்தம் கேட்டு அந்த வழியே வந்த ஒருவன் ஏறிட்டுப் பார்த்து நிற்கிறான்.]

ஒரு: அடடே! அந்தப் பெண் மடுவில் குதித்து விட்டாள்.

(நாலைந்துபேர் ஓடிச் சென்று அல்லியைத் தூக்கிவந்து போடுகிறார்கள்)

ஒரு: பேச்சுமூச்சு இருக்கிறதா!

2-வது: தலையில் நல்ல அடி! பிரக்ஞை இல்லை.

3-வது: மூச்சு காணோம். ஆனால் உடம்பில் இன்னும் சூடு இருக்கிறது.

1-வது இவள் யாருடா?

2-வது: நம்ம மாணிக்கத்தின் தங்கச்சி, வீரப்பன் மகள்.

3-வது: கொஞ்சம் பைத்தியம் பிடித்தவ மாதிரி இருந்தாள்.

செல்: அய்யா! அல்லி மாணிக்கம் யாரையா வது பார்த்தீர்களா?

(செல்வநாயகம் அங்குகூடி இருக்கும் கூட்டத்தை விலக்கிக்கொண்டு)

செல்: அல்லி! அல்லி! யார் செய்தது இது!

1-வது: அவளா ஆற்றில் விழுந்து இறந்துவிட் டாள்.

செல்: (அவனைப் பிடித்து உலுக்கி) அவள் இறக்கமாட்டாள். இதோ டாக்டரிடம் போகி றேன். அவள் நிச்சயம் பிழைத்துக்கொள் வாள்.

(செல்வநாயகத்தைப் பின் தொடர்ந்து மற்றும் இருவர் செல்கின்றனர். கண்ணம் மாள் வருகிருள்.)

கண்: என் மகன் ஓடி வந்தானே நீங்கள் பார்த் தீர்களா?

2-வது: அல்லி ஆத்தில் குதிச்சுட்டாள்.

3-வது: சின்ன எஜமான் அவளைத் தூக்கி வண்டியில் போட்டுகொண்டுடாக்டர் வீட்டுக் குப் போனுரு.

கண்: அல்லி செத்துவிட்டாளா? அய்யோ!

(கண்ணம்மா விரைந்து செல்கிருள். மாணிக்கம் வருகிருன்:)

மாணி: அல்லியெங்கே! உண்மை தெரியாமல் ஏதேதோ ஆக்கிரத்தில் பேசிவிட்டேன். எவ் வளவு மனக்கஷ்டப்படுகிருளோ.

ஒரு: அவளுடைய கஷ்டங்களெல்லாம் தீர்ந்து விட்டது. ஆற்றில் விழுந்து அவள் இறந்து விட்டாள்.

மாணி: இல்லை! இல்லை!

ஒரு: ஜமீன்தார் மகன் அவளைத் தூக்கிக் கொண்டு டாக்டர் வீட்டுக்குப் போயிருக் கிருன். உடனே போய்ப்பார்.

(மாணிக்கம் ஓடுகிருன்.)

காட்சி 17

இடம்: மாளிகை.

நிகழ்ச்சி: சாமித்துரை அங்குமிங்கும் உல வகொண்டிருக்கிருர்.

சாமி: எங்கே இரண்டு பேரையும் காணும். டேய்! செல்வா! செல்வா!

(செல்வநாயகம் வருகிருன்.)

செல்: ஏன்!

சாமி: பெண் பார்க்கப் போகவேண்டும் தயா ராக இரு.

செல்: போகவேண்டியதற்குளப்பொழுதேநான் தயாராகிவிட்டேன்

சாமி: இந்தக் கல்யாணம் உனக்கு இப் பொழுது சம்மதமில்லையென்றுலும் அதனுல் எவ்வளவு அனுகூலங்கள் இருக்கின்றன என் பது பின்பு உனக்குத் தெரியும்.

செல்: நீங்கள் அதிகம் சொல்லவேண்டிய தில்லை. இந்தக் கல்யாணத்திற்கு நான் ஒப் புக்கொள்கிறேன்.

சாமி: காலையில் நீ கண்டிப்பாகச் சொன்னதைப் பார்த்ததும் நான் பயந்துபோய்விட்டேன்

செல்: இனிமேல் ஒன்றும் சொல்லமாட்டேன். பேச்சு மூச்சின்றி இருப்பேன்.

சாமி: அந்தக் குடியான பெண்ணுக்கு வேண்டு மென்ருல் ஏதாவது ஏற்பாடு செய்துவிடலாம்.

செல்: அவள் இனி வரமாட்டாள். நானும் அவளுடன் ஒரு வார்த்தை கூடப் பேசமாட் டேன்.

சாமி: புறப்படும் நேரமாகிவிட்டது.

செல்: சகுனம் சரியாக இருக்கின்றதா என்று பார்க்கவேண்டும்.

சாமி: விளையாட்டா? அல்லது உனக்கே அக் கறை ஏற்பட்டுவிட்டதா?

செல்: என் வாழ்க்கையின் முக்கியமான சம்ப வம் நடைபெறப்போகிறது. அதைப்பற்றி எனக்கு அக்கரை இருக்காதா?

சாமி: என்னவோ! நீ திருந்தியது பகவான் கருணையால்தான். எல்லாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டன:

செல்: இல்லை! இல்லை! உங்களுடைய கருணை யால்தான எல்லாம் ஒரு முடிவுக்கு வந்திருக் கின்றன.

சாமி: பேசிக்கொண்டிருந்தால் நேரமாகிறது.

செல்: அப்புறம் பேசுவதற்கு எனக்கு நேரம் கிடைக்காமல் போகலாம்!

சாமி: ஏண்டா! கல்யாணமானதும்

செல்: கல்யாணமானதும் மணப்பெண்ணுடன் இணைபிரியாது இருப்பேன். யாரும் என்னு டன் பேச முடியாது. நானும் யாருடனும் பேசமாட்டேன்.

சாமி: சீக்கிரம் புறப்படு போகலாம்.

செல்: எங்கே?

சாமி: எங்கேயா? பெண்பார்க்கப் போவதற்குத் தான்.

செல்: (சிரிக்கிறன்)

சாமி: ஏண்டா?

செல்: அதற்கா இவ்வளவு அவசரப்படுத்தி னீர்கள். மணப்பெண்ணைப் பார்க்க வெகு தூரம் போகவேண்டியதில்லை.

சாமி: நீ சொல்வதொன்றும் புரியவில்லையே!

செல்: நான் இதுவரை சொல்லியது உங்களுக் குப் புரிந்திருக்காது. (ரகசியமாக) நானே போய் பெண்ணை அழைத்துக்கொண்டு வந்து விடடேன்!

சாமி: எப்படி? எப்போது?

செல்: சற்றுமுன்தான். நம்முடைய காரில்

சாமி: அதுதான் இவ்வளவு நேரம் உன்னைக் காணோமா? சரி! பெண்ணெங்கே?

செல்: அவசரப்படாதீர்கள். நான் இதோ அழைத்து வருகிறேன். (போகிறன்)

சாமி: இந்தக் காலத்துப் பையன்கள் போக்கே வேடிக்கையாயிருக்கிறது. நாம் போய் பார்த்து ஒரு பெண்ணைக் கூட்டி வந்து கொடுக்கு முன்பு அவர்களே அழைத்துக்கொண்டு வந்து விடுகிறார்கள்.

(செல்வநாயகம் அல்லியைத் தாங்கிவந்து நாற்காலியில் உட்கார வைக்கிறன்)



சாமி: யாரது?

செல்: எனக்கு வரவேண்டிய மணப்பெண்.

(முகத்தை மறைத்திருக்கும் துணியை விலக்குகிறன்)

சாமி: ஐய்யோ! பிணம்.

செல்: வேறு யார் ஜமீன்தார் மகனுக்கு மண மகளாக வருவார்கள். காலையிலே அவள் இருந்தாள். வாழ்க்கைச் சோலையிலே மகிழ்ச்சி வீசும் மணமலராக, கொஞ்சும் கோமளமாக, குதூகலத்தைத் தரும் காதற சித்திரமாக அவள் விளங்கினாள். ஆனால் இப்பொழுதோ பிணம். பணத்திமிருக்கு ஆளான ஏழை. அவள் என்னைக் காதலித்தாள். தன்னைக் காதலிப்பவன் இந்தப் பாழும் ஜமீனின் ஒரே மகனென்று தெரிந்ததும், காதல் கைகூடாது என்று கலங் கினாள், ஒதுங்கி நின்றாள், என்னையே மறந்து வாழ முயன்றாள். ஊர் உலகத்துக்குப் பயந் தாள். தன் அண்ணனுக்கே கட்டுப்பட்டாள், தன் குலத்தாழ்வையும், தன் ஏழ்மையையும் நினைத்து வருந்தினாள். கடைசியாக இன்று என் முன் தோன்றினாள். "இருள் நீங்கியது. இனி இன்பமாக வாழலாம்" என்று களித் திருந்த நேரத்தில் உங்களுடைய கொடுமை குறுக்கிட்டது. பிணமாக நடமாடி எனக்கு அவள் புத்துயிரளித்தாள். அதன் பலன் அவள் பிணமாகிவிட்டாள்.

அல்லி! "இதோ வந்துவிடுகிறேன்" என்று தோட்டத்தின் பக்கம் ஓடினாயே திரும்ப ஏன் வர மறந்தாய்? உன்னைத் துணைவியாக ஏற்று இன்பமாக வாழலாம் என நம்பினேன். அந்த நம்பிக்கையைச் சிதறடித்துவிட்டாயே! என் காதலை அவள் புறக்கணித்தாள் என்பதைவிட, கொடுமைகள் பல சூழ்ந்த நேரத்திலும் என் காதலைக் கைவிடவில்லை என்ற களிப்புடன் ஒரு பொழுது வாழ்வதே மேல்!

ஏன் திகைத்து நிற்கிறீர் கோடீசுவரரே! உங்களுடைய குமாரனின் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள். பெண்ணும் வந்துவிட் டாள், முகூர்த்தமும் நெருங்கிவிட்டது. அழ கான பல்லக்கு செய்து, தம்பு தப்பட்டை முன்னே செல்ல, வெட்டியான் வழிகாட்ட, எங்களை ஊர்வலமாக அழைத்துச் செல்லுங் கள். எங்களுடைய முதல் இரவு சுடுகாட்டில், விறகு அடுக்கப்பட்ட மஞ்சத்தில், மூடாத கண்களுடன் இரவைக் கழிப்போம். எங்கள் ஊர்வலத்தின்போது வான வேடிக்கைகள் இருக்கும். திருமணம் ஆரம்பமாகிவிட்டது.

(துப்பாக்கியால் சுட்டுக்கொள்கிறன். சாமித்துரை 'அய்யோ' என்று செல்வநாயகத்

தைத்தாங்க வருகிறார். கண்ணம்மா முந்திக் கொள்கிறாள்.)

கண்: இதென்ன கோலம்?

செல்: எனக்கும் அல்லிக்கும் நடைபெறும் திரு மணக்கோலம்.

கண்: செல்வா! செல்வா! என் செல்வமே!

செல்: அம்மா! அழாதீர்கள். கதை முடிந்துவிட் டது.

(தாயின் கையைப்பற்றிக் கொண்டே செல்வநாயகம் அல்லியின் பக்கத்தில்போய் விழுந்துவிடுகிறான். கண்ணம்மாள் அவ னைப் புரட்டிப் பார்க்கிறாள். சாமித்துரை பித்துப்பிடித்தவர்போல் செல்கிறார். கண் ணம்மாள் வெறித்த பார்வையுடன் எழுந்து— மாளிகையின் உள்ளே சென்று)

கண்: முனியாண்டி! முனியாண்டி!

(முனியாண்டி வருகிறான்)

கண்: அங்கு இன்னும் யார் இருக்கிறார்கள்.

முனி: சமையற்காரனும் வண்டிக்காரனும்.

கண்: இன்றைக்கு சமையல் வேண்டாம். எல் லோரையும் அழைத்துக்கொண்டு தோட்டத் தில் போயிரு.

முனி: ஏங்க?

கண்: காரணமாகத்தான். சீக்கிரம் போ!

(போகிறான்: போனபின் பீரோவைத் திறந்து ஒரு வைரமாலையை எடுத்துக் கையில் வைத்துக்கொள்கிறாள். பீரோவி லிருந்த புடவைகளை எடுத்து வீசி விளக் கைக் கொளுத்தி அதன்மீது எரிகிறாள்.)

கண்: கண்மணிகளே! மணக்கோலத்தில் உங் களைக் கண்டு களிப்பெய்த வேண்டிய நான் பிணக்கோலத்திலா காண வேண்டும்? (அல்லியை அசைத்து) காலையில் சூடிய மலர் இன்னும் வாடவில்லை. அதற்குள் உன் முகம் வாடிவிட்டதே! மாளிகைக்கு வரும்படி அழைத்தபொழுது நீ வர மறுத்தாய். நான் கட்டாயப்படுததயிராவிட்டால், உங்களுக்கு இக்கதி ஏற்பட்டிராதே.

செல்வன் இறந்துவிட்டான், என் கனவு கள் இறந்துவிட்டன. ஏழைக்குடியில் பிறந் தேன். அழகு என்னை ஜமீன்தாருக்கு மனைவி யாக்கியது. ஜமீன் என்றதும் எவ்வளவு குது கலம் அடைநதேன், திருமணம் என்றதும் எவ்வளவு கனவுகள் கண்டேன். உல்லாச மாக வாழலாம் என நம்பினேன், கனிமொழி களைக் கேட்கக் காத்திருந்தேன், காதலை வேண்டி நின்றேன்; ஆனால் எனக்கு மணாள ராக வந்தவரோ, ஜமீனதார். மண்ணையும் பொன்னையும் தேடிக் கொண்டிருக்கும் கண் களுக்கு பெண்ணின் இருதயம் எப்படித் தெரியப்போகிறது? என் கனவுகள் மங்கின. மனம் புழுங்கி வாழ்ந்தேன். இந்த நிலையில் என் செல்வன் பிறந்தான். பட்டுப்போக இருந்த கொடி துளிர் விட்டு, என் மகனைச் சுற்றிப் படர ஆரம்பித்தது. அப்பா சென்ற வழி மகன் செல்லக்கூடாதெனக் கவலை யெடுத்தேன். ஜமீன் செய்கிற கொடுமைகள் மகனைத் தாக்காதிருக்கப் பாடுபட்டேன், பிற் காலத்தில் அவன் யாராலும் வெறுக்கப்படா மல் நிம்மதியாக வாழ வேண்டுமென்று முயன் றேன். ஆனால் யாரை நிம்மதியாக வாழ அனுமதித்தார் ஜமீன்தார். தன் மகனை வாழ விட? கடைசியல் சொந்த மகனே பலியாகி விட்டான்.

ஜமீன் குடும்பத்தில் பிறந்து அவன் கண்ட தென்ன? தன் மனதுக்கேற்றவளின் பிணத் தைத்தான் அவனால் காண முடிந்தது. ஜமீன் குடும்பத்திற்கு வந்ததால் எனக்குக் கிடைத்த தென்ன? என்னுடைய மகனின் பிணம். பணம் பிணங்களைத்தான் எங்களுக்குத் தந்தது. வேறு யாரை மணந்திருந்தாலும், திருடன், கொலைக்காரன், வஞ்சகன், குடி காரன் இவர்களில் யாராயிருந்தாலும், வாழ்க் கையில் ஒரு நாளாவது நம்மிடம் பிரியம் காட்டி யிருப்பார்கள். இரக்கப்பட்டாவது, ஆசை வார்த்தைகள் கூறியிருப்பார்கள். ஆனால் பணப் பைத்தியங்களை மணந்துகொண்டால், கற்கண்டென நினைத்து கல்லைப்போட்டு மெல் லுவது போலாகும்.

எவ்வளவு பெரிய மாளிகையில் உலவினா லும், பட்டாடைகளும், வைர மாலைகள் எவ் வளவு கிடைத்தபோதிலும் இருதயத்தில் ஏக்கம் இருக்கிறவரை, வாழ்க்கையில் மகிழ்ச்சி எங்கிருந்து கிடைக்கும்? வைரமாலை! அலைத மார்பில் அணிந்து கொள்ள முடியாது.

(வைர மாலையைக்கீழே போடுகிறாள். அதி லிருந்து விழுந்த ஒரு கல்லையெடுத்து, கோப்பையில போட்டு வாயருகே கொண்டுபோய்)

எந்த வைரம் என்மீது ஜொலித்துக்கொண் டிருந்ததோ, அதுவே எனககு விஷமாகிவிட் டது. (கோப்பையிலிருப்பதைக் குடித்து விட்டு, கோப்பையை வீசி யெறிகிறாள். தீப் பற்றிய கட்டை விழுகிறது)

தீ அதோ பரவிவிட்டது. ஏழை எளியோர் மனதில் புகைந்து கொண்டிருந்த தீ, குடிசை களிலிருக்கும் அடுப்பில் அணைக்கப்பட்ட தீ, மகனையிழந்த தாயின் வயிற்றில வேகின்ற

தீ மாளிகையைச் சூழ்ந்து விட்டது. (அல்லி, செல்வநாயகம் இருவரின் மத்தியின் உட்கார்ந்து அவர்களை அணைத்துக்கொண்டு) கவலைப்படவேண்டாம் மாளிகையே நம்முடைய சுடுகாடாகிவிட்டது.

வெளியேறிய சாமித்துரை மாளிகையின் முன்வாசலை யடைந்தபோது மாளிகை தீக்கரையாவதைப் பார்த்தார். வேதனை படர்ந்தது அவர் முகத்தில். தீச்சுடர் தெரிக்க எரிந்துகொண்டிருந்தது ஜமீன் மாளிகை.)

காட்சி-18

நிகழ்ச்சி: (சாமித்துரை வேதனையே உருவாய் தள்ளாடிச் செலகிறுர். அவருடைய நண்பர் ஒருவர் வந்து)

நண்: சாமி! என்னைத் தெரிகிறதா?

(சாமித்துரை அருகில் வருகிறுர்)

நண்: உன்னைப் பார்த்துவிட்டுப் போகலாம் என வந்தேன். மாளிகை இடிந்துகிடக்கிறது. "ஜமீன்தார் சாதாரண குடியானவனைப்போல் வாழ்ந்து வருகிறுர்" என்று சொன்னுர்கள். ஆனுல் நேரில் பார்க்குப்பொழுதுதான் எவ்வளவு அதிகமான அழிவு என்பது தெரிகிறது. முன்னெருதடவை நான் வந்திருந்த பொழுது உயர்தமாளிகையில் உல்லாசத்துடன் நின்றுகொண்டிருந்தாய். ஆணவத்துடன் பேசினுய். எனக்கே சற்று மிரட்சியாகவே இருந்தது. இப்பொழுது உடைந்த கல்முட்டுகளிடையே அலங்கோலத்துடன் நிற்கிருய்.

சாமி: இதைப் பார்க்கும்போது உனக்கு அனுதாபமாக இருக்கிறது, சிலருக்கு இது ஆறுதலாகக்கூட இருக்கும்.

நான்: நானும் அன்று அப்படித்தான் நினைத்துக் கொண்டேன். இந்த வாழ்வின் நிலை மாறுபட்டால் நடைமுறைகள் எப்படித் திரும்புமென எண்ணினேன். எனினும் நட்புமிகுதி அந்த எண்ணத்தை வளர்க்கவில்லை. ஆனுல் இப்பொழுது உன் நிலையைப் பார்த்து வருந்துகிறேன். மாளிகை இடிந்து கிடக்கிறது. ஜமீன் வாழ்வை உதறித்தள்ளி நீ வாழ்கிருய்.

சாமி: வெளிப்பார்வையைக் கவனித்து நீ அவ்விதம் சொல்கிருய். முன்பு அழகிய கம்பளங்கள மீது நான் உலவிக்கொண்டிருந்தபோதிலும், என்னுடைய இருதயம் கல்லும் முள்ளும் செறிந்த பழ்நிலமாக இருந்தது. இப்பொழுது கல்முட்டுகளிடையே நான் உலவிக்கொண்டிருந்தபோதிலும் என்னுடைய இருதயம் மென்மையடைந்துவிட்டது. நிலைமை மாறியதைபபற்றி நான் வருத்தப்படவில்லை. என்னுடைய வருத்தமெல்லாம் என்னைத் திருத்த முயன்ற என மனைவியும் மகனும் என்னைவிட்டுப் பிரிந்ததுதான்.

(ஐயா! ஐயா! என்ற சத்தம் கேட்கிறது)

சாமி: ஐயோ! மாணிக்கம் வந்துவிட்டான். நான் போகவேண்டும்.

நான்: பயப்படவேண்டாம். நானிருக்கிறேன். அவன் என்ன செய்வான் பார்க்கலாம்.

சாமி: என்ன செய்வான். இருட்டிவிட்டது என்று அழைத்துக் கொண்டு போவான். அவனுடன்தான் நான் இப்பொழுது வசித்து வருகிறேன். நான் ஜமீன்தாராகயிருந்தபொழுது கூட அவ்வளவு கவனிப்பு எனக்குக் கிடைத்திருக்காது. அதிகமான அக்கரை. ஆவல் அன்புடன் அவன் எடுத்துக்கொள்ளுகிறான், என்னைப்பற்றி.

நான்: நான் கேள்விப்படுவது உண்மைதானா? உன்னால் சுடப்பட்ட வீரப்பனின் மகன்தானே இவன்? இவனுடைய தங்கைதானே அல்லி! ஜமீன் என்றாலே விஷமென வெறுத்துவந்த மாணிக்கமா இப்பொழுது பாதுகாவலாக இருந்து வருகிறான்.

மாணி: இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது. எங்களுக்குக் கொடுமைசெய்து கொண்டிருந்தவர் ஜமீன்தார். அவர் அப்பொழுதே இறந்துவிட்டார். இவர் இப்பொழுது ஜமீன்தாரல்ல! எங்களைப் போலவே வாழ்க்கையில் நொந்துபோன சாதாரண மனிதர். பணம் இல்லாததால் நாங்கள் கஷ்டப்பட்டோம். பணம் அதிகம் இருந்ததால் அவர் கஷ்டப்பட்டுவிட்டார். பணச்சுழலில்எதிர்புறத்தில் இருவரும் சிக்கித் தவித்தோம்.

நான்: சாமி! என்னுடன் வந்துவிடு. என்னுடைய வீட்டில் தங்கிக்கொள்ளலாம்.

சாமி: வேண்டாம். உன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்திற்கும், மாறாத அன்புக்கும் நன்றி. நான் இவர்களுடனேயே வாழ விரும்புகிறேன். கள்ளமற்ற உள்ளமும் கனிவான இன்சொல்லுமுடைய இவர்களிடையே வாழ்வதே எனக்கு இதமாக இருக்கிறது. தவிறவும், நான் செய்த கொடுமைகளுக்கெல்லாம் உரிய தண்டனை தரப்படவில்லை. ஆக இவர்களது மன்னிப்பையாவது பெற முயற்சிக்கிறேன். மேலும் என்னைக் காண்பவர்கள் திருந்துவதற்கு இது ஒருவாய்ப்பாகவுமிருக்கும்.

நான்: அப்படியானால் ஜமீன்...

சாமி: அதை யார் வளர்த்து வளப்படுத்திச் செழிப்புளளதாக ஆக்கினார்களோ அவர்களுக்கு உரிமையாக்கிவிட்டேன்.

(மாணிக்கத்தின் முகம் ஆச்சர்யத்தால் மலாகிறது.)

சாமி: சமுதாயத்திலே நான் மட்டும் தான் கொடுமையின் தலைவனாக இருந்தேனென்பதில்லை. எத்தனையோ பேர் இருந்தார்கள்-இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இனியும் இருப்பார்கள் என்ற நிலைமை மாற வேண்டும். சமுதாயத்திலே ஒருவனைக்கொல்ல கத்தியும் கயிறும் மட்டுமே உபயோகப்படுத்தப்படவில்லை. பணமும் இரக்கமற்ற தன்மையும் தான் அதிகம் உபயோகப்படுத்துகின்றன. சாதாரண குற்றங்களைத் தண்டிக்கக் காத்துக்கொண்டிருக்கும் சட்டம் இந்தக் கொடுமைகளை ஏன் விட்டுவைத்திருக்கிறது? சமூகம் ஏன் மதிப்புடன் காப்பாற்றி வருகிறது? சமூகம் தரும் மதிப்புதான் இந்த கொடுமைகளுக்குக் காரணம். பணம் சேர்ப்பதை இலட்சியமாக அது கற்பிக்கிறது. இரக்கமற்ற தன்மை திறமை என்று போற்றப்படுகிறது. பணம் அதிகம் படைத்தவனிடம் ஒரு பட்டத்தைநீட்டாமல், வெகு சீக்கிரத்தில் இவ்வளவு பணம் உனக்கு மட்டும் எப்படிச் சேர்ந்ததென்று கேட்டிருக்கலாம். அவனுடைய இரும்புப் பெட்டியின் ஆடம்பரத்தைக் கண்டுமகிழு முன் அதன் மீது பூசப்பட்டுள்ள இரத்தக்கறைகளைக் கண்டு காரணங் கேட்டிருக்கவேண்டும். அவனுடைய சொத்தைக் கணக்கிடுமுன் அவனால் துன்பப்பட்டோரின் தொகையைக் கணக்கிட வேண்டும். சமூகமும் சூழ்நிலையும் மாறுபட்டிருந்தால் இந்தக் கொடுமைகளின் அவசியம் குறைந்துவிடும். அதை உணர்கின்ற வாய்ப்பு எனக்கு இப்போதுதான் கிடைத்தது. அதனால் தான் எரிந்து வீழ்ந்து கிடக்கும் மாளிகையை அப்படியே நினைவுச் சின்னம் போலவும்; கொடுமையின் பிடியில் பல ஏழைகளை வாட்டி வதைப்போர் திருந்தும் வண்ணம் நானோர் எடுத்துக்காட்டாகவும் உலவி வருகிறேன். அத்துடன் என் நிலையை உணர்பவர்கள் செயலாற்றவேண்டிய பணிகளை நானே வழிகாட்டியாக இருந்து வகுத்துக் காட்டியிருக்கிறேன். என்னுடைய பணத்திலிருந்து குடியானவர்களுக்குப் புதிய வீடுகள் கட்டிக்கொடுக்கவும் என கொடுமைக்கு ஆளானவர்களுக்கு நஷ்டஈடாகப் பிரித்துக் கொடுத்துவிடவும் ஏற்பாடுகள் செய்துவிட்டேன். ஆனால் மாளிகை மட்டும் இப்படியே என வாழ்நாள் வரை இருக்கட்டும். இது தீயோருக்கும் நல்வழி வகுக்கும் ஜமீன் மாளிகை.



அன்பிலி பெற்ற மகன்

தூணிபோற்றும் நம் தமிழ்க் கருவூலங்கள் நமக்கும் காதல்–வீரம் என இவ்விரண்டை மட்டும் அள்ளி வழங்கவில்லை. அறம். நெறி, பண்பு, கடமை என்கின்ற அரிய பண்புகளையும் அந்தக் காதல்–வீரம் இரண்டினிடையேயும் புகுத்திக் காட்டுகின்ற தன்மை நம் தமிழிலக்கியங்களிலே தான் உண்டு. அந்தப் பெருமை நம் தமிழ்க் கவிஞர்களையே சாரும்.

அதிலும் ஒன்றைச் சொல்லி மற்றொன்றைப் புரிய வைப்பதில் அவர்களுக்கு நிகர் அவர்களே தாம்.

கணவன் தவறு செய்கிறான்; அந்தத் தவறோ எந்த மனைவியும் விரும்பாத தவறு. அதாவது பரத்தையரை நாடும் பண்பு படைத்தவன் கணவன்! இதை நேருக்கு நேர் நின்று கேட்கவும் துணிவில்லை அவளுக்கு. என்றாலும், கேட்டுத் தீர வேண்டிய நிலையிலிருக்கிறாள். விட்டுக் கொண்டே போனால், இறுதியில் வீட்டையே மறக்கும் நிலை வந்து விட்டால்? இந்தக் கேள்விக்கு அவள் பயந்தாள்.

இங்குதான் கவிஞர் பெண்மையின் மென்மையை விளக்குவதோடு, ஒன்றின் மூலமாக மற்றொன்றை உணர்த்தும் வகையில். நன்னெறியினின்று வழுவுவதையும். பண்பிலிருந்து தவறுவதையும் எடுத்துக் காட்டுகின்றார்.

அவள் இவ்விஷயத்தைக் கணவனிடம் தான் நேரில் கேட்க முடியாது! ஆனால், மைந்தனோடு கூடவா பேசக்கூடாது? எனவே, மைந்தனோடு பேசுவது போல் கணவனின் போக்கைக் கண்டிக்க முயல்கிறாள்.

அந்தக் கண்டிப்பிலும் ஒரு நாகரிகம் இருக்கத்தான் செய்கிறது. கணவன் வெளியில் சென்றிருந்து அப்போதுதான் வீட்டினுள் நுழைகிறான். அவனைக் கண்டும் காணாதது போல் பாவனை செய்து கொண்டு, தன் செல்வனுக்கு அறிவுரை கூறுகிறாள் அந்த அணங்கு.

"சின்னஞ் சிறிய யானையின் நெற்றிப் பட்டத்திலிருந்து தொங்கிக்கொண்டிருக்கும் மூவடம் போல், உன் மெல்லிய தலையிலிருந்து தாழ, மழுவும் வாளும் பொறிக்கப்பட்ட ஐம்படைத்தாலியை நனைக்கின்ற நீர் வழியும் உன் வாயை என் கண்கள் கண்டு மகிழ, பவளப் பலகைமேல் வேறொரு யானையோடு போர் புரியும் காட்சிகளை உண்டாக்கிய, கோட்டைகளைப் பாய்ந்தழிக்க முடியாத, வேழப் பாவையை மகளிர் கட்டி ஆடும் மணல் வீட்டில் சுற்றி அடித்து கிண்கினி ஒலிக்க இழுத்துத் திரியும் என்போர் யானையே! இங்கு வருக!

சிறந்தோனே! உன் தந்தை பெற்றிருக்கும். எழில் தோற்றத்தை உன் வனப்பிலே நீ கொண்டிருந்தாலும், அவர் கொண்டிருக்கும் பண்புகளில் நீ ஏற்றுக் கொள்ளும் பண்புகள் எவை என்பதனை என்னிடம் கேட்டுத் தெரிந்து கொள்! களத்திலே பகைவர்களை வென்று வெற்றி வாகைச் சூடும் சிறப்பிலே நீ உன் தந்தையை ஒத்திருப்பாயாக! ஆனால், உன் தந்தையோடு ஒன்று கலந்து விட்டோம் என்று உளமார உணர்ந்த மகளிரை மறந்து, அவர் தோள் நெகிழக் கைவிடும் கொடுமையில் நீ உன் தந்தையை ஒத்து இராதே!

நுகத் தடியில் நடுநிற்கும் பகலாணி ஒரு பக்கமாகச் சாய்ந்து விடாமல் சமமாக நிற்பதைப் போல் நீதி முறை தவறாத செங்கோலின் சிறப்பில், பெருமானே! உன் தந்தையிடமுள்ள பண்புகளை அறிந்து அவரை அடைந்த பெண்ணின் அழகு, காற்றால் எழில் வாடிய மலரைப் போல், அழியும்படியாக அவர்களைக் கைவிடும் குணத்தில் நீ உன் தந்தையை ஒவ்வாதே!

இரந்தார்க்கு அவர் விருப்பம் போல் ஈந்து பெரிதுவக்கும் ஈகைப் பண்பில், பெருமானே! நீ உன் தந்தையை ஒப்பாயாக! ஆனால் அழகிய மகளிரை அவர் காதல் நோயுற்றுப் போகுமாறு பார்த்துக் கொடுமை செய்வதில் நீ உன் தந்தையை ஒத்து இராதே!

என்றெல்லாம் மைந்தனோடு பேசி, அவனுக்கு அறிவுரைகள் கூறிய

தங்கவயல் லோகிதாசன்

தோடு கணவனின் தீய பண்பினையும் கண்டித்தாள்!

அன்னையின் அறிவுரைகளைக் கேட்ட செல்வன், தன் செம்பவள வாய் திறந்து சிரிக்க ஆரம்பித்து விட்டான்! அவனுக்கு என்ன சொன்னாள் அன்னையென்று புரிந்தால் தானே!

"தந்தையிடமுள்ள தீய பண்புகளை நீயும் பெற்று விடாதே! என்று கூறிக் கொண்டிருக்க, தகுதிப் பாடற்றவர் பெற்ற மகனாகிய இவன் யாரைப் பார்த்து நகைக்கின்றான்? சரி...சரி... இதுகாறும் நம்மை மறந்திருந்த அவர்தான் மறைந்து வந்து நிற்க வேண்டும்!" என்று அந்த அன்னையானவள் எண்ணித் திரும்பியதும், அவள் எண்ணம் வீண் போகவில்லை!

பின் புறமாக வந்த அவள் கணவன்,

"அழகிய அணிகளை அணிந்தவளே! உனக்கு எந்த விதத் துன்பமும் செய்யாத என் மீது ஏதேனும் தவறுகள் உளதோ? நான் இந்தச் சிங்காரச் செல்வனை ஏந்திக் கொள்ள என்னிடம் கொடுப்பாயா?" என்றான்.

அவன் கேட்டு முடிக்கும் முன்பே அந்தச் செல்வன் தந்தையை நோக்கித் தாவிச் சென்றான்!

இதை கண்ட தாய், "தந்தை கேட்டு வாய் மூடும் முன்பே என் கைகளை, விலக்கிக் கொண்டு பெரிய மலைமீது பாய்ந்து செல்லும் சிங்கம் போல, அன்புள்ளமில்லாதவர் பெற்ற இம்மகன், தன் தந்தையின் அகன்ற மார்பில் பாய்ந்து விட்டானே! இவனுடைய இழி குணத்தை என்னவென்று சொல்வேன்?' என்று இறுதியில் தன் இன்பச் செல்வனையும் கோபித்துக் கொள்கிறாள்.

இந்த அறிவுரை கூறும் அன்னையை கலித்தொகை மருதக் கலியில் மருதன் இளநாகனார் என்னும் புலவர் அறிமுகப் படுத்துகிறார் நமக்கு!

அது தான் இது:—

"மைபடு சென்னி மழகளிற்று ஓடைபோல்
கைபுனை முக்காழ் கயந் தலைத்தாயப்,
பொலஞ்செய் மழுவொடு வாள் அணி கொண்ட
நலங்கிளர் ஒண்பூண் நனைத்தரும் அவ்வாய்
கலந்துகண் நோக்கு ஆரக், காண்பின் துகிர்மேல்
பொலம்புனை செம்பாகம் போர்கொண் டிமைப்பக்
கடி அரணம் பாயா நின்கைபுனை வேழம்
தொடியோர் மணலின் உழக்கி அடியார்ந்த
தேரை வாய்க் கிண்கிணி ஆர்ப்ப இயலும் என்
போர் யானை வந்தீக ஈங்கு.
செம்மால்! வனப் பெலாம் நுந்தையை ஒப்பினும் நுந்தை
நிலைப்பாலுள் ஒத்தகுறி என்வாய்க் கேட்டு ஒத்தி;
கன்றிய தெவ்வர் கடந்து களம் கொள்ளும்
வென்றி மாட்டு ஒத்தி; பெரும! மற்று ஒவ்வாதி,
ஒன்றினேம் யாம் என்று உணர்ந்தாரை, நுந்தைபோல்
மென்தோள் நெகிழ விடல்.
பால் கொளல் இன்றிப் பகல் போல் முறைக்கு ஒல்கா
கோல் செம்மை ஒத்தி; பெரும! மற்று ஒவ்வாதி,
கால்பொரு பூவின் கவின்வாட நுந்தைபோல்
சால்பு ஆய்ந்தார் சாய விடல்.
வீதல் அறியா விழுப்பொருள் நச்சியார்க்கு
ஈதல் மாட்டு ஒத்தி; பெரும மற்று ஒவ்வாதி,
மாதர் மென் நோக்கின் மகளிரை நுந்தைபோல்
நோய் கூர நோக்காய் விடல்.
ஆங்க,
திறன் அல்லயாம் கழற, யாரை நகும் இம்
மகன் அல்லான் பெற்ற மகன்?
மறை நின்று, தாம் மன்ற வந்தீத்தனர்.
ஆயிழாய்! தாவாத எற்குத் தவறுண்டோ? காவாது ஈங்கு
ஈத்தை இவனை, யாம் கோடற்குச், சீத்தை! யாம்
கன்றி, அதனைக் கடியவும் கைநீவிக்
குன்ற இருவரைக் கோண்மா இவர்ந்தாங்குத்
தந்தைவியன் மார்பில் பாய்ந்தான், அறன் இல்லா
அன்பிலி பெற்ற மகன்.

இரண்டாம் பரிசுக் கதை

நினைத்தது நடக்கவில்லை

"மாசி"

வசந்தா

நான் நினைக்கவே இல்லை அப்படி நடக்கு மென்று எனது எண்ணங்கள் ஈடேருத சூழ்நிலை உருவாகக் கண்டேன். எனது திட்டங்களை நான் நிறைவேற்ற முடியாது போலிருந்தது. சேகரும் அத்தையும் சாதாரணமாகத்தான் வந்திருக்கிருர்கள் என்று எண்ணினேன். சேகர் ஒவ்வொரு கோடை விடுமுறையின் போதும் எங்கள் வீட்டிற்கு வந்து கொஞ்சநாள் தங்கிப் போவது வழக்கம். அதேபோல்தான் இந்தத் தடவையும் வந்திருக்கிறான் என்று நினைத்தேன். ஆனல் வீட்டில் நடந்த பேச்சுக்களையும் அத்தையின் நடவடிக்கையையும் கவனித்தபோது சேகருக்கும் எனக்கும் திருமண ஏற்பாட்டை முடித்து விட வேண்டும் என்று தீர்மானத்துடன் வந்திருக்கிருள் அத்தை எனபது தெரிந்தது.

அன்றுகாலை மாடியிலிருந்து இறங்கி சாப்பிட வந்தபோது அம்மாவும் அத்தையும் பேசிக் கொண்டிருந்தார்கள். என்னைக் கண்டதும் பேச்சை நிறுத்திக்கொண்டார்கள்.

"ஏம்மா வசந்தா! உன்னையே கேட்கச் சொல்கிருள் உன் அம்மா!" என்று மெள்ள பேச்சைத் துவக்கினுள்.

எப்பொழுது யார் கேட்கப் போகிருர்களோ என்று எதிர்பார்த்திருந்த அந்த வெடிகுண்டு அத்தையின் வாயிலிருந்து வந்து விழுந்தது.

"எதைக் கேட்கிருய் அத்தை?" என்று ஒன்றும் தெரியாதவள்போல் கேட்டு வைத்தேன்.

"சேகரைக் கட்டிக் கொள்வதைப் பற்றி என்ன சொல்கிருய்?" என்ருள் அத்தை.

"நான் என்ன சொல்வது. அம்மாவையும் அப்பாவையும் கேளுங்கள்" என்றேன்.

"ஏதாவது முடிவு தெரிந்துகொண்டுபோகத் தான் வந்திருக்கிறேன்" என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னுள் அத்தை.

அத்துடன் பேச்சு நின்றது. நான் மடமடவென்று சாப்பிட்டுவிட்டு மாடிக்கு வந்தேன். எனக்கு அழுகையழுகையாக வந்தது. அத்தை பேசியதைப் பார்த்தால் அப்பாவும் அம்மாவும் சம்மதித்து நாள் குறித்து விடுவார்கள் போலிருந்தது. சிந்திக்க சிந்திக்க எனக்கு மூளை குழம்பி விடும் போலிருந்தது. ஒரு வழியும் தோன்றவில்லை. சேகரைப் பார்த்து எனது முடிவைக் கூறி விட்டால் என்ன என்று தோன்றியது. எப்பொழுதும் கலகலப்பாக இருக்கும் சேகர் இந்தத் தடவை என்னிடம் அதிகம் பேசாமல் இருந்தான். ஒரு விதத்தில் எனக்கு நிம்மதியாக இருந்தது. அவனே வந்து திருமணத்தைப் பற்றி கேட்டுவிடுவானே என்று பயந்தேன். எப்படி இந்தச் சிக்கலிலிருந்து விடுபடுவது என்று தெரியவில்லை.

கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தேன். சேகரிடம் என் நிலைமையைக் கூறி எப்படியாவது அவனைச் சமாதானப்படுத்தித் திருமண ஏற்பாடுகளை நிறுத்திவிடவேண்டும் என்று எண்ணினேன்,

சேகரைப் பார்த்துப் பேசும் எண்ணத்தில் மாடியிலிருந்து கீழே வர படிகளில் இறங்கிய நான் அவனையே அங்கு சந்திக்கவேண்டியதாயிற்று. அவன் மேலே வந்துகொண்டிருந்தான். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி நின்று விட்டோம். எனக்கு என்ன பேசுவது என்று புரியவில்லை. பேசாமல் திரும்பி விடலாமா என்று எண்ணினேன். அதற்குள் அவனே பேசி விட்டான்.

"எங்கே போகிருய் வசந்தா?"

"ம்...ஒன்றுமில்லை. சும்மா வந்தேன்,"

"சும்மாவா ஓடி வருவாங்க!"

"உன்னைப் பார்க்கத்தான் ஓடிவந்தேன் என்று வைத்துக்கொள்ளேன்.

"என்னைப் பார்க்கவா?"

சந்தர்ப்பத்தை இழந்துவிடக் கூடாது என்று எண்ணினேன்.

"ஆமாம் உன்னைப் பார்க்கத்தான். மாடிக்கு வா" என்று கூறி திரும்பினேன்.

சேகர் என்னைப் பின் தொடர்ந்தான். இருவரும் அறையில் வந்து உட்கார்ந்தோம். நானே பேச ஆரம்பித்தேன்.

"சேகர்! எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்."

"என்ன வசந்தா! சொல் செய்கிறேன்"

"நமது திருமணப் பேச்சு நடக்கின்றதல்லவா"

"ஆமாம். வெகு வேகமாகப் ஓடிக்கொண்டிருக்கிறது."

"அதை இப்போதைக்கு எப்படியாவது நிறுத்திவைக்க வேண்டும்"

"நிறுத்தி வைப்பதா! எப்படி முடியும்?"

"சேகர் நான் மேல் படிப்புக்குப் போக விரும்புகிறேன். அம்மாவுக்கு திருமணத்தை முடித்துவிட வேண்டும் என்று எண்ணம். "நான் சொன்னால் அது எடுபடாது. ஆகவே நீ எனக்கு ஆதரவாகப் பேசினால் திரு மணப் பேச்சு நின்றுவிடும். நானும் படிப்பதற்கு வழியுண்டு"

"வசந்தா நாம் இருவரும் எப்படி ஒரே மாதிரி எண்ணினோம். நானும் வக்கீலுக்கு படிப்பதாக இருக்கிறேன். அதை உன்னிடம் கூறித் திருமணத்தை நிறுத்திவைக்க வேண்டு மென உன்னைக் கேட்டுக் கொள்ளத்தான் வந்தேன்!"

"அப்படியானால் இருவரும் நமது முடிவைக் கூறிவிடுவோமே!"

"உன் முடிவை உன் அம்மாவிடம் சொல் என் முடிவை என் அம்மாவிடம் சொல்லி விடு கிறேன்." என்று கூறிவிட்டு சேகர் கீழே சென்றான்.

மேலும் தாமதிக்கலாகாது என்று எண்ணி பாஸ்கரனிடமிருந்து வந்த கடிதத்திற்குப் பதில் எழுதினேன். சென்னைக்கு புறப்படுவதெனத் தீர்மானித்தேன். வேறு ஜாதியைச் சேர்ந்த பாஸ்கரனை நான் மணந்துகொள்ள அப்பாவும் அம்மாவும் சம்மதிக்க மாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும் ஆகவேதான் அவர்களுக்குத் தெரியாமல் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தேன். எனது திட்டங்கள் நிறைவேறுவண் ணம் எங்கே சேகர் குறுக்கிட்டு என் வாழ்க்கை யைக் கெடுத்து விடுவானோ என்று எண்ணி னேன். அப்படி நான் நினைத்தது நடக்கவில்லை.

சேகர்

நான் நினைக்கவே இல்லை இப்படி நடக்கு மென்று. நான் சாதாரணமாகத்தான் மாமா வீட் டிற்கு வந்தேன். வந்த இடத்தில் அம்மா திடீ ரென திருமணப் பேச்சை ஆரம்பிப்பாள் என்று எதிர்பார்க்கவில்லை. மாமாவும் அத்தையும் திரு மணத்தை விரைவிலேயே நடத்தி விடுவார் களோ என்று எண்ணும்படியாக காரியங்கள் நடைபெற்றன. வசந்தாவைக் கண்டு பேசிய பின்னர்தான் ஒரு மன ஆறுதல் பெற்றேன். ஆனால் அந்த ஆறுதல் வெகு நேரம் நீடிக்க வில்லை. நான் கீழே இறங்கி வந்தபோது அம்மா அங்கே வந்தாள்.

"என்னடா! வசந்தாவுடன்தானே பேசிக் கொண்டிருந்துவிட்டு வருகிறாய்."

"ஆமாம்."

"என்ன சொன்னாள்"

"சரி என்று சொன்னாள்"

"அப்படியா!"

"அதாவது நான் வக்கீல் பட்டம் பெற்று திரும்பி வருகிற வரையில் திருமணத்தை தள்ளி வைப்பதற்கு சம்மதித்து விட்டாள்!"

நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது மாமா அங்கே வந்தார்கள்.

"கேட்டியா தம்பி! இவன் வக்கீலுக்கு படிக் கப்போகிறானும். அது வரைக்கும் கல்யாணத் தைத் தள்ளிவைக்க வேண்டுமாம்"

"ஏன் வக்கீலுக்குப் படிக்கட்டுமே! ஏதோ கொஞ்சம் அக்கரையோடு படிக்க வேண்டு மென்று எண்ணுகிறான். அதை ஏன் நீ தடுக் கிறாய். கல்யாணத்தை முடித்துக்கொண்டு படிக் கட்டுமே"

"அது சரி." என்றாள் அம்மா.

"இல்லை மாமா! வசந்தாவும் எம். ஏ. படிக் கப்போகிறாளாம். ஆகையினால் இருவரும் படித்து முடிக்கிற வரையில் திருமணத்தைத் தள்ளி வைப்பதில் என்ன கெட்டுவிடப் போகிறது."

"வசந்தா படிக்கப் போகிறாளா? எல்லாம் படித்த படிப்பு போதும். கல்யாணத்திற்கு முடிவு செய்தாகி விட்டது. நாள் குறிக்க ஜோஸ்யரை கூப்பிட்டிருக்கிறேன்."

"இல்லை மாமா! இப்பொழுது வேண்டாம்',

"நீங்கள் என்ன சொன்னாலும் சரி கல் யாணம் நடந்தே தீரும்."

"வசந்தாவைக் கேட்டீர்களா?"

"அவளை என்ன கேட்பது. வசந்தாவையே கூப்பிட்டு சொல்லி விடுகிறேன். வசந்தா! வசந்தா!"

வசந்தா இறங்கி வந்தாள்.

"என்ன வசந்தா!" என்றார் மாமா.

"நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். நீங்கள் பேசிக்கொண்டதையெல்லாம்"

"என்னதான் சொல்கிறாய்?"

"சரியப்பா. உங்களிஷ்டம்" என்றாள்.

"பார்த்தாயா சேகர்! இப்ப என்ன சொல் கிறாய்?" என்றார்.

நான் ஒன்றும் கூற முடியாமல் விழித்தேன். கோபம் கோபமாக வந்தது வசந்தாவின் மேல். அவளை எரித்து விடுவதுபோல் பார்த்தேன். அவள் கண்ணால் ஏதோ ஜாடை காட்டினாள். எனக்கு என்றும் புரியவில்லை.

"சரி. உங்களிஷ்டப்படியே எல்லாம் நடக்கட்டும்" என்று கூறிவிட்டு அவ்விடம் விட்டகன்றேன்.

அன்று மாலை தோட்டத்தில் உலவிக் கொண்டிருக்கும்போது வசந்தா அங்கு வந்தாள்.

"என்ன வசந்தா திடீரென காலை வாரி விட்டு விட்டாய்?"

"என்ன செய்வது அவர்களிடம் வாதிட்டு பயனில்லையே!"

"அப்படியானால்!"

"நமது திருமணம் நடந்தே திரும். அதற்குப் பிறகுதான் உங்கள் படிப்பு எல்லாம்."

"நீ படிக்க விரும்பவில்லையா?"

"என் எண்ணத்தை மாற்றிக்கொண்டு விட்டேன்."

எனக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. அங்குமிங்கும் உலவியபடி சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

"சேகர் உண்மையில் நீங்கள் என்னை விரும்பவில்லை. எதையோ மனதில் வைத்துக் கொண்டு குழப்பமடைந்திருக்கிறீர்கள்."

ஒன்றுமில்லை!"

"இல்லை சேகர். நீங்கள் எதையோ என்னிடம் மறைக்கின்றீர்கள். உண்மையைக் கூற வேண்டுமானால் நீங்கள் என்னை மணந்து கொள்ள விரும்பவில்லை. காலையில் உங்களைப் பார்த்து பேசிக்கொண்டிருந்தபோது உங்களை நான் புரிந்து கொள்ளவில்லை. எதையோ கூறத்தான் என்னிடம் வந்தீர்கள்."

உண்மையைக் கூறினால் மேலும் குடும்பத்தில் ஏற்படும் குழப்பங்களைச் சமாளிக்க முடியாது என்று எண்ணி அவளது சந்தேகத்தை மறுத்துக் கூறினேன்.

அதற்கு மேல் நாங்கள் அதிகம் பேசவில்லை. வசந்தா திரும்பி விட்டாள்.

அன்றிரவு எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. பலவாறு சிந்தித்து கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தேன். என்ன எடுத்துரைத்தாலும் அம்மாவையும் மற்றவர்களையும் திருப்திபடுத்தமுடியாது என்ற நிலை ஏற்பட்ட பிறகு அவர்களுடன் எதிர்த்துப் போராடுவதைவிட எவருக்கும் சொல்லாமல் சென்னைக்கு சென்று கல்யாணியையே மணந்து கொள்வது என்று தீர்மானித்தேன்.

ஒரு வாரம் சென்றபின் நான் சென்னையில் ஒரு நண்பனைப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று கூறிவிட்டு சென்னைக்குப் புறப்பட்டேன். எல்லாவற்றையும் விளக்கமாக எடுத்துக்கூறி உடனடியாக திருமணத்திற்கு அவளை சம்மதிக்கச்செய்தேன்.

குறிப்பிட்ட தினத்தன்று ஏற்பாடு செய்திருந்தபடி பதிவுத் திருமணம் செய்து கொள்ள நானும் கல்யாணியும் எனது நண்பர்களுடன் சென்றோம்.

ஆனால் அங்கே நான் கண்ட காட்சி என்னை நிலைகுலையச் செய்தது. வசந்தா என் வரவை எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்தாள். என்ன செய்வதென்று தோன்றவில்லை. என் திட்டங்கள் தெரிந்து அம்மா மாமா எல்லோரும் வசந்தாவை அழைத்து வந்திருக்கிறார்கள் என்று எண்ணினேன்.

எதற்கும் இனி கவலைப்படத் தேவையில்லை என்ற துணிவோடு அந்த அலுவலகத்தில் நுழைந்தேன். என்னைக் கண்டதும் வசந்தா நடுங்கி விட்டாள். அவள் மட்டும் தனியாக நின்று கொண்டிருந்தாள். எனக்கு ஒன்றும் புரியவில்லை. நான் அவளுக்கு பயந்தது போக அவள் ஏன் எனக்கு பயப்படவேண்டும் என்று எண்ணினேன்.

"வசந்தா!" என்று கூப்பிட்டேன்.

"சேகர் என்னை மன்னித்து விடுங்கள்! நான் வேறு ஒருவரைத் திருமணம் செய்து கொண்டு விட்டேன். அவர் வெளியில் டாக்சி கொண்டுவர சென்றிருக்கிறார்." என்றாள்.

பொய் சொல்கிறாளா உண்மை பேசுகிறாளா என்பது புரியவில்லை. இந்த நேரத்தில் அந்த 'அவரும்' வந்தார். எனக்கு அறிமுகப் படுத்தி வைத்தாள்.

மூலையில் நின்றுகொண்டிருந்த கல்யாணியை அழைத்தேன். வசந்தாவிடம் அறிமுகப்படுத்தினேன். வசந்தாவிற்கு பெரும் வியப்பாக இருந்தது.

வசந்தாவை நான் பார்த்ததும் எனது திருமணத்தைத் தடுக்க ஊரிலிருந்து எல்லோரும் வந்திருக்கிறார்கள் என்று நினைத்தேன். அப்படி நான் நினைத்தது நடக்கவில்லை.

மூன்றாவது பரிசுக்கதை

ஏமாற்றம்

தன-வள்ளுவன்

"ஏமாற்றம்" சமுதாயத்திலே புதுமையானதல்ல. வழக்கமாகிவிட்ட, வழிவழியாய் நிலவி வருகிற ஒன்று.

ஏமாற்றத்தைக் கையேற்காதவர்கள் யாருமே இருக்க முடியாதெனத் துணிந்து கூறலாம்.

ஏமாற்றத்தால் வேதனைதான் ஏற்படுகிறது. ஆயினும் அந்த ஏமாற்றத்தினின்றும் தன்னை விடுவித்துக்கொள்ளும் வகையும் இல்லாமல் போய்விடுகிறது. அது யார் குற்றமோ தெரியவில்லை.

இதோ! இங்கே மூன்று பிரிவினர். இந்த மூன்று நடைபெற்று வரும் காலவழியில் எத்தனையாவது மூன்றோ.

இப்படியே கணக்கிட்ட வண்ணம் கடற்கரையிற் சென்றமர்ந்தேன். அங்கே நான் தனித்திருக்கிறேனென்பதை உணர்ந்தபோததான், நான் சிந்தித்துக்கொண்டிருந்த செய்தியின் தன்மை புலனாகியது.

எண்ணியதையே திரும்பவும் எண்ணிக் கொண்டிருந்ததால் மூளை குழம்பி பைத்தியம் பிடித்துவிடும் போலிருந்தது எனக்கு. மனதுக்கு ஒரு மாற்றம் தேவைப்பட்டது. எனவே கடற்கரைக்குச் சென்றேன். தனியாக ஒரு இடம் பார்த்து அமர்ந்திருந்தேன்.

கடலை நோக்கி மக்கள் கூட்ட கூட்டமாக வந்து கொண்டிருந்தனர். அத்தனை பேரும் என்னைப் போலவே அமைதியிழந்தவர்களா? நிம்மதியில்லாத மனங்களா அத்தனையும் என்று நினைத்தேன்.

எதிரே கடல் பேரிசைச்சலோடு அலை மோதிக் கொண்டிருந்தது. அமைதியில்லாதக் கடலை நாடி நிம்மதி பெற வந்தோமே என்று நினைத்தேன்; உள்ளூரச் சிரித்துக்கொண்டேன்.

அலையின் வேகம் கரையோடுதான்; ஆனால் மனிதனின் எண்ண அலைகளுக்கோ எல்லையே இல்லையே!

இரண்டும் அதே எண்ணம்தான். குற்றவாளி எங்கிருந்தாலும் குற்றவாளிதான். 'செய்தக்க செய்யாமை யானும் கெடும்' என்பது பொய்யா மொழியல்லவா. என்னளவில் தவறில்லை; ஆனாலும் தோல்வி!

அதற்கு யார் காரணம்.

x x x

ஊரிலிருந்து அன்னையும் தந்தையும் எனக்கு பெண் பார்க்க வந்தனர். நானும் பெண்ணை பார்க்க வேண்டும் என்பதற்காக என்னையும் அழைத்தார்கள். பெண்ணைப் பார்த்துவிட்டுத் திரும்பி வரும்போது அன்னை என் முடிவைக் கேட்டாள்.

'என்ன முத்து பேசாமலிருக்கிறாய். உன் விருப்பத்தைச் சொல்லவில்லையே. நாம் ஒப்புதலை அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமே. உன்னைக் கேட்டு தெரிவிப்பதாகச் சொல்லி விட்டு வந்தேன்!' என்று சொன்னாள் அன்னை.

'அதைத் தானம்மா யோசிக்கிறேன்'

'இன்னுமா யோசிக்கிறாய். நீ தான் பெண்ணைப் பார்த்தாயே. எவ்வளவு அழகாயிருக்கிறாள்! என்ன அடக்கம் ஒழுக்கம் தெரியுமா; மரியாதை கொடுத்தே பழகுகிறாள். உனக்கும் தெரிந்திருக்குமே; இந்த ஊரிலேயே எங்கோ ஆபீசில் உத்தியோகத்திலிருந்தாளாமே' என்றாள்.

அசனால் வந்த வம்புதானே அவள் என்னைப் பார்த்து அதிர்ச்சியடைந்ததும் நான் அவளைக் கண்டு வியந்ததும். இப்படியொரு சங்கடமான சூழ்நிலை உருவாகும் என்று அவளும் எதிர்ப்பார்த்திருக்க மாட்டாள்; நானும் நினைக்கவில்லை. 'சொல்லுப்பா...இருவரும் படித்திருக்கிறீர்கள்; ஒருவரையொருவர் புரிந்து கொண்டு குடும்பம நடத்தலாம்,' என்றாள் அன்னை தழதழத்தக் குரலில்.

அன்னையைத் தவிர வேறு யாருக்கும் கட்டுப்படாதவாறு இயற்கை பாசத்தோடு விளையாடுகிறதே என்னென்பது!

ஊருக்குக் கடிதம் எழுதுவதாகச் சொல்லி அவர்களை அனுப்பி வைத்தேன்.

x x x

நண்பர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை நான் பெண் பார்த்துவிட்டு வந்ததில், நடந்ததை அறியாதவர்கள். அவர்களுடைய மகிழ்ச்சியைக் கெடுக்க விரும்பாதவனாயிருந்தேன்.

'வாழவந்த இடத்திலேயே வாழ்க்கைத் துணையும் கிடைத்துவிட்டதே உனக்கு' என்றான் ஒரு நண்பன்.

'பெண் எந்தத் தெரு? எந்த வீடு? என்றான் அடுத்தவன்.

'படித்தவளா? பண்புடையவளா?'

'பணக்காரப் பெண்ணா?'

'அப்படியென்றால் ஆணவமும் கூடவே வளர்ந்திருக்குமே'

'ஏழையாயிருந்தாலும் பரவாயில்லை, மனதுக்குப் பிடித்தவளாகயிருக்க வேண்டும். ஏற்றத் தாழ்வுகளைப் பார்க்கக் கூடாது'

நண்பர்களனைவரும் கேள்விமேல் கேள்வியாகத் தொடுத்துக் கொண்டிருந்தனர். இடையிடையே பெண் எப்படியிருக்க வேண்டும் என்பதையும் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

நான் பேசவில்லை. பேச வாய்ப்பளிக்கவில்லை என்பது ஒன்று; என்ன பேசுவது? எப்படிப்பேசுவது? என்ற பிரச்சினையும் ஒரு காரணமாகயிருந்தது எனக்கு.

'சும்மா இருந்து தொலையுங்கப்பா; மாப்பிள்ளை பேயறைந்த மாதிரி இருக்கிறார். வாயைத் திறக்காமல் என்னவோ யோசனை செய்கிறார்'

'என்ன முத்து ஒரு மாதிரியாக இருக்கிறாய்? பெண்ணை பிடிக்கவில்லையா? பிடிக்கவில்லையென்றால் பிடிக்கவில்லை என்று உன் பெற்றோரிடம் சொல்லி விடுவதுதானே. வற்புறுத்துகிறார்களா என்ன?'

'ஆம், பெண்ணை பிடிக்கவில்லைதான்' நான் மெள்ள ஆனால் வறட்டு உறுதியுடன் சொன்னேன்.

'ஏன் பிடிக்கவில்லை?'

இதற்கு எப்படி பதில் சொல்வது? அவளுக்கு அழகில்லை என்று சொல்பவன் கண்ணிருந்தும் குருடனாகத்தானிருக்க வேண்டும்; ரசிக்கத் தெரியாதவன் என்றுதான் சொல்ல வேண்டும்.

படித்திருக்கிறாள். இதை அம்மாவே சொல்லி பெருமைபட்டுக் கொண்டாள். தான் படிக்க விட்டாலும் தனக்கு வரப்போகும் மருமகள் படித்திருப்பதில் அளவு கடந்த மகிழ்ச்சி அவளுக்கு.

பாவம்! அன்னைக்கு அந்தப் பெண்ணை பற்றி தெரிந்திருக்க நியாயமில்லை. அவள் ஓரிடத்திலும் நான் ஓரிடத்திலுமாக வேலை செய்தும் அவளைப்பற்றி நானுவது தெரிந்து வைத்திருந்தேன்.

அப்பொழுது நடந்ததுதான். காற்றுவாக்கில் வந்த செய்தி வதந்தியாயிருக்கும் என்று நினைத்தேன். வதந்தியல்ல உண்மைதான் என்று மெய்ப்பிப்பதுபோல அவளும் அவனும்-அவளுடன் வேலை செய்யும் மூர்த்தியும் சேர்ந்து போவதைப் பார்த்தேன்.

பேச்சும் சிரிப்பும் அப்பப்பா! அன்பில் ஒன்றுபட்ட இளங்காதலர்தான் அவர்கள். இப்படியே அவர்கள் சீக்கிரத்தில் தம்பதிகளாகி விட்டால் வதந்திக்கு இடமிருக்காதே என்று நினைத்தேன்.

ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்படும் உறவைத்தான் காதல் என்கிறோம். இந்தக் காதலை சுட்டுப் பொசுக்கி விடுகிறதே சாதியும் சம்பிரதாயமும். இவர்களின் உறவும் கனவாகி விடுமோ என்று நினைத்து அஞ்சினேன்.

இதனால் பாதிக்கப்படுவது பெண்தானே. ஆண் இன்னொரு பெண்ணை மணந்து கொள்ளலாம். ஆனால் பெண்? ஆணுக்கு அளிக்கப்படும் விதிவிலக்கு பெண்ணுக்கு அளிக்கப்படாதது ஏனோ?

அவர்களைச் சேர்ந்தாற்போலப் பார்த்ததும் என் மனம் இப்படித்தான் எண்ணியது. ஏன் என்று எனக்கே விளங்கவில்லை. தேவையற்ற சிந்தனை என்று எண்ணத்தை மாற்றிக்கொண்டேன்.

அந்தக் காட்சியை இரவு அறைக்கு வந்ததும் மறந்து விட்டேன். மறந்து போனதை நினைவு படுத்துவதாக இருந்தது திரைப் படம் பார்த்துவிட்டு வந்த நண்பன் சொன்ன செய்தி.

'அடித்தால் யோகம் அப்படியல்லவா அடிக்க வேண்டும்.'

'யாருக்கு என்ன அடித்தது'

அந்த மூர்த்திக்குத்தான். அவனும் அவளும் சேர்ந்து இன்று, திரைப்படம் பார்க்க வந்திருந்தனர்.

'அது தவறு'

'தவறில்லையா? படித்த பெண்; உத்தியோகம் வேறு பார்க்கிறாள். தனக்கு பிடித்த ஒரு வாலிபனைக் காதலிக்கிறாள். வரவேற்க வேண்டியதுதான். இருவரும் சேர்ந்து குடும்பம் நடத்த வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை இருவரும் செய்யவேண்டும். அதைவிட்டு இப்படி காதலனும் காதலியுமாகத் திரியக்கூடாது. நம் பெண்களுக்கு இது அழகல்ல. கணவனும் மனைவியுமாக உலவ வேண்டும்' என்றான் நண்பன்.

பாவம்! படித்திருந்தும் உலகத்தை சமூகத்தைப் படிக்காமலிருக்கிறதே இந்தப் பெண் என்று நினைந்து வருந்தினேன். காரணமின்றி அவள்மீது இரக்கம் கொண்டேன்.

நாட்கள் ஓடின.

'சேதி தெரியுமா உனக்கு' என்று கேட்டான் நண்பன்.

'எந்தச் சேதி'

'அந்த மூர்த்திக்குத் திருமணம்'

'கொடுத்து வைத்தவளப்பா அவள். பெரும்பாலும் காதலில் தோல்வி கண்டவர்களைப் பற்றித்தான் கேள்விப்பட்டு வந்தோம். இவர்களாவது காதலில் வெற்றி கண்டார்களே. இனி காதலில் வெற்றி கண்டவர்களின் தொகைதான் வளரப் போகிறது. பழையன சழிந்து விடும்; இனி புதுமையில் நம் நாடு பொலிவுறப் போகிறது பார்' என்றேன்.

'அது மேலை நாடு' என்றான் நண்பன்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

'அப்படி என்றால்!

'தோல்விதான்'

'என்ன!'

'வேறு ஒரு பெண்ணுக்கும் இவனுக்கும் திருமணம். மோகம் முப்பது நாட்கள்தானே. பெரிய இடத்து சம்மந்தம். அறிவில்லாத பெண்; சுண்ணாம்புக்கும் வெண்ணெய்க்கும் வேற்றுமை அறியாதவள். நெருப்பைப் போலிருக்க வேண்டியவள். பாவம் நீறு பூத்த நெருப்பாக இருந்து விட்டாளே!

'இனி அவளுடைய கதி'

'இந்த சங்கதியை அறியாதவன் எவனாவது வாய்த்தால்தான் அவளுக்கு இனி வாழ்வு!

'அவள் என்ன குற்றம் செய்தாள்'

'யாருக்குத் தெரியும். உலகத்தின் சந்தேகக் கண்களுக்கு அவள் குற்றவாளிதான்.

'அவளை மட்டும் குற்றவாளியாக்கலாமா? சந்தேகம் என்னும் பேய்க்கு அவள் பலியாக வேண்டியதுதானு'

'நம் சமுதாய அமைப்பு இப்படித்தானிருக்கிறது.

'அவள் நினைத்தால் இந்தத் திருமணத்தை நடக்கவொட்டாமல் செய்துவிடலாமே'

'அவ்வளவு துணிச்சல் இந்தப் பெண்ணுக்கு ஏதப்பா! வேலையையும் இராசினுமா செய்துவிட்டாளாம்.'

ஒரு பெண் வஞ்சிக்கப்பட்டாள் என்று நினைத்து வருந்துவதைத் தவிர வாயிருந்தும் ஊமையானேன் அந்நிலையில்.

x x x

நாட்கள் ஒன்றன்பின் ஒன்ருய் ஓடிக்கொண்டிருந்தன. நான் என் முடிவைக்குறித்து வீட்டிற்குக் கடிதம் எழுதிவிட்டேன்.

அன்னைக்கு எழுதிய கடிதம் இதுதான் 'உங்கள் விருப்பப்படியே இந்தப் பெண்ணையே ஏற்பாடு செய்யுங்கள்!

என்னுடைய எதிர்காலத்தில் நிறைய நம்பிக்கை வைத்திருக்கும் என் அன்னைக்குப் பிடித்தமானவள். வேண்டாம் என்று மறுத்தால் தாய் சொல்லைத் தட்டிய பழிவந்து சேரும். பகுத்தறிவுக்குப் புறம்பான செயலாகவும் ஆகும்.

இப்படி எழுதிய பிறகுதான் என்மனம் நிறைவடைந்ததாக உணர்ந்தேன். என் வாழ்வில் துணிந்து ஒரு நல்லதைச் செய்யப்போகிறேன் அல்லவா?

கடிதத்தை உரையில் வைத்து முகவரி எழுதிக்கொண்டிருந்தேன். 'சார் தபால்' என்ற குரலோடு ஒரு கடிதமும் வந்து விழுந்தது. உரையில் கையெழுத்தைப் பார்த்தேன், தந்தை எழுதியிருந்தார். அவசரமாகப் பிரித்து கடிதத்தைப் படித்தேன்.

'நீ கொடுத்துவைக்காதவன். தான்தான் கொடுத்து வைக்காதவள் என்று சொல்லி புலம்பிக்கொண்டிருக்கிருள். பாவம்! அந்தப் பெண் கடற்கரைக்குச் சென்ருளாம். சென்றவள் கடலைகளுக்கு இரையாகிவிட்டாள். எங்களுக்குக் கடிதம் வந்திருக்கிறது,

எனக்குத் தலையைச் சுற்றியது. மயக்கம் வந்து சுயநினைவிழந்து எங்கோ இருப்பது போன்ற ஒரு உணர்வில் தத்தளித்தேன்.

குறையைக் களைய முயன்றேன். நிறைவேறவில்லை, குறை குறையாகவே நின்றுவிட்டது.

x x x

கடற்பரப்பும் அலை ஓசையும் நெஞ்சில் நிறைந்தும் அமைதி கிடைக்கவில்லை. 'நான விழுங்கவில்லை; அவளாகவே வந்து விழுந்துவிட்டாள' என்று சொல்லாமல் சொல்லி என்னை மேலும் பைத்தியக்காரனுக்கிற்று அலை ஓசை.

'சந்தேகத்திற்கு நான் பலியாகவில்லை. ஏற்கெனவே ஒருவருக்கு இடம் கொடுத்த என் மனம் வேறு ஒருவரை ஏற்க மறுக்கிறது. தழும்பு மாறுமா? வாடகை வீடென்றஎன்—பெண்ணின் மனம். எனவே கடலில் அடைக்கலமாகிவிட்டேன்'—இதை அவளா சொன்னுள். இல்லை!

வாழ்க்கையில் வெறுப்புற்றவர்களின் புகலிடமே கடல்; அவர்களின் புலம்பலே அலை ஓசை.

அனைவருக்கும்—விரும்புவார் அத்தனை உயிர்களுக்கும் இடங்கொடுக்கும் கடலைப்போன்றவள் அலை பெண்: அப்படி இடங்கொடுத்து கடலாகிவிட்டால் அலை ஓசை ஓயவே ஓயாது.

என்னை மணந்தும் கடலைப்போன்று அமைதியின்றி வாழ வேண்டியவரும் என்று நினைத்துத் தான் அலையில் மறைந்து ஓசையில் கரைந்துவிட்டாள் போலும்.

— முற்றும் —

'மன்றம்'' அச்சகத்தில் (49, வேளாளத் தெரு, அமைந்தகரை, சென்னை-29.)
ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளிவருகிறது.
(தொலைபேசி எண்: 62524.)